بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 11 & 12

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 ரமலான் 4 - 11★ ஹிஜ்ரி ஷம்ஸி 1403 அமான் 14 - 21

★ 14 -21 மார்ச் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ وَلَوۡ کَرِہَ الۡمُشۡرِکُوۡنَ ۟

**பொருள்**

அவனே தனது தூதரை நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே. (61 : 10)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# சமுதாய சான்றோர்களின் பார்வையில் ஹஸ்ரத் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்தும் உயர்நிலையும்

**இமாம் மஹ்தியின் அகநிலை ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அகநிலையாக இருக்கும் ஹஸ்ரத் இமாம் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறுதிக் காலத்தில் தோன்றும் இமாம் மஹ்தி ஷரீஅத் கட்டளைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றக் கூடியவராக இருப்பார். மேலும் இறை ஞானத்திலும் கல்வியிலும் உண்மைத்துவத்திலும் அன்னாரை தவிர மற்ற அனைத்து நபிமார்களும், இறை நேசர்களும் அன்னாரை பின்பற்றக் கூடியவர்களாக இருப்பர்..... ஏனெனில், இமாம் மஹ்தியின் அகநிலை ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அகநிலையாக இருக்கும்.

(ஷரஹ் ஃபுஸூஸூல் ஹிக்கம் மத்பஃ முஸ்தஃபா அஸ்ஸாஹிர் மிஸ்ரியா, பக்கம் 51)



**இமாம் மஹ்மதியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் நபிமார்களின் தலைவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளிகளின் பிரதிபலிப்பாக இருப்பார்**

ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

முஹம்மதிய்ய சமுதாயத்தில் தோன்றக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு இந்த தகுதி இருக்கின்றது. அதாவது நபிமார்களின் தலைவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளிகளின் பிரதிபலிப்பு அவரிடத்தில் இருப்பதற்கு அவருக்கு தகுதி உள்ளது. அந்த வாக்களிக்கப்பட்டவர் உலகில் தோன்றும்போது அவருடைய அந்தஸ்து உம்மத்தைச் சார்ந்த ஒருவர் என்ற அந்தஸ்து மட்டுமே அவருக்கு இருக்கும் என்று பொது மக்கள் கருதுகின்றனர். அவ்வாறு ஒருபோதும் கிடையாது. மாறாக, அவரோ முஹம்மதிய்ய பெயருக்கான முழுமையான விளக்கமாக இருப்பார். மேலும், அன்னாருடைய இரண்டாம் பிரதியாக இருப்பார். எனவே அவருக்கும் உம்மத்தைச் சார்ந்த ஒரு சாதாரண நபருக்குமிடையில் மாபெரும் வித்தியாசம் உள்ளது. (ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹி) அவர்களின் நூல்: அல்கைய்ருல் கஸீர், பக்கம் 72, மதீனா பிரஸ் பஜனூர்)

**இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு அனைத்து நபிமார்களுடன் இருக்கும் தொடர்பு**

**ஹஸ்ரத் இமாம் பாகர் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இமாம் மஹ்தி தோன்றும்போது இவ்வாறு அறிவிப்பு செய்வார்.

மக்களே! உங்களில் ஒருவர் இப்ராஹீம் மற்றும் இஸ்மாயீலைக் காண விரும்புகின்றார் என்றால் அவர் கண்டு கொள்ளட்டும் நானே இப்ராஹீம் மற்றும் இஸ்மாயீல் ஆவேன்; உங்களில் ஒருவர் மூஸா (அலை) மற்றும் யோசுவாவைக் காண விரும்புகின்றார் என்றால் அவர் கேட்டுக் கொள்ளட்டும் நானே மூஸாவும்,யோசேபும் ஆவேன். உங்களில் ஒருவர் ஈஸாவையும் ஷம்ஊனையும் பார்க்க விரும்புகின்றால் என்றால் அவர் கேட்டுக் கொள்ளட்டும்; நானே ஈஸா மற்றும் ஷம்ஊன் ஆவேன். உங்களில் ஒருவர் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் அமீருல் மூஃமீன் (ஹஸ்ரத் அலீ) அவர்களையும் காண விரும்புகின்றார் என்றால் கேட்டுக் கொள்ளட்டும்; முஹம்மத் முஸ்தஃபா மற்றும் அமீருல் மூஃமீனின் நானே ஆவேன்.

(பிஹாருல் அன்வார், தொகுதி 53, பாப் மா யகூனு இந்த ஸஹூர் அலைஹிஸ் ஸலாம்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# தலையங்கம்

## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்துவமும் உயர் அந்தஸ்தும்

திருக்குர்ஆன், ஹதீஸ்கள், மற்றும் முந்தைய வேதங்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப அல்லாஹ் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை உச்சபட்ச இருளும், நிராகரிப்பு மற்றும் வழிகேட்டின் காலமாக இருந்த பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் ஆக்கி அனுப்பினான். அன்னாருடைய மகத்து மிக்க மிஷனைக் குறித்து திருக்குர்ஆனில் இந்த சொற்களில் அல்லாஹ் எடுத்துரைத்துள்ளான்:

لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ

(சூரா அஸ்ஸஃப்). அதாவது உலகின் அனைத்து மார்க்கங்களின் மீதும் இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்தல் ஆகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடைய மிஷனைக் குறித்து இந்த சொற்களில் கூறியுள்ளார்கள்:

لَوْ كَانَ الْاِيْمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهٗ رَجُلٌ اَوْ رِجَالٌ مِنْ هٰؤُلَاءِ

அதாவது ஈமான் பூமியிலிருந்து மறைந்து கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் கூட இமாம் மஹ்தி மீண்டும் அதனை பூமியில் நிலைநாட்டுவார்.

மேற்கண்ட வசனமும், ஹதீஸும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்துவ மிக்க பதவி மற்றும் அந்தஸ்தை தெளிவுபடுத்துகின்றது. முழு உலகின் எண்ணங்களை மாற்றிவிடுவது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; ஒரு மனிதனின் எண்ணங்களை மாற்றுவது கூட ஒரு கடினமான பணியாகும். ஆனால் இஸ்லாத்தின் இறைவன் ஒரு பணியை செய்வதற்கு எண்ணம் கொள்ளும்போது அது நடந்தே தீரும். அவனுக்கு எந்தவொரு பணியும் கடினமானது கிடையாது. அந்த இறைவன் குறுகிய காலத்தில் முழு உலகிலும் இஸ்லாத்தை பரப்பி விட்டிருந்தான். மேலும், உலகத்தின் எண்ணங்களை ஒரேடியாக மாற்றுவதற்கு அந்த இறைவன் இன்றும் ஆற்றல் படைத்திருக்கின்றான். அவன் நாடினால் முழு பிரபஞ்சத்திலும், பிரபஞ்சத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஏகத்துவத்திற்கான காற்றை வீசச் செய்து விடுவான். அவன் நாடினால் இதயத்திலும், ஒவ்வொரு நபரின் இயல்பிலும் மறைந்திருக்கின்ற ஏகத்துவத்தின் ஒளியை வெளிப்படச் செய்து விடுவான். மேலும் தன் மீதான நேசத்தில் அதாவது படைத்தவன் மற்றும் எஜமானன் மீதான நேசத்தில் மனிதனை அவன் பித்துப் பிடித்தவனைப் போன்று ஓடோடி வந்து அவனது சன்னிதானத்தில் வீழ்ந்து விடச் செய்யும் அளவிற்கு அவனை சிறை பிடித்து விடுவான். இஸ்லாத்தின் இறைவனிடத்தில் ஆம், நிச்சயமாக ஆம் இஸ்லாத்தின் இறைவனிடத்தில் மட்டுமே இந்த வலிமை உள்ளது.

وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

அவன் எல்லாப் பொருட்களின் மீது ஆற்றல் படைத்துள்ளான்.

மேலும் இதற்காக அதாவது முழு உலகிலும் இஸ்லாத்தின் வெற்றியின் பணியை முழுமை செய்வதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியை அனுப்பினான். அன்னார் அதற்கான விதையை விதைத்தார்கள். மேலும் இந்தச் செடி தற்போது வளர்ந்து கொண்டிருக்கின்றது. மலர்ந்து கனிகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் உலகின் 200-க்கும் அதிகமான நாடுகளில் அதன் கிளைகள் பரவியிருக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக். அன்னாரின் வருகையும் மேலும் அன்னாரின் மீது நம்பிக்கை கொள்வதும் எந்த அளவிற்கு அவசியமாகும்? இது தொடர்பாக சில மேற்கோள்கள் கீழே சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஸய்யிதுனா ஹஸ்ரத் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எப்படிப்பட்ட காலத்தில் நான் வெளிப்பட்டு இருக்கின்றேன் என்றால், இஸ்லாமியக் கொள்கைகள் கருத்து வேறுபாடுகளால் நிறைந்துவிட்டன. மேலும் எந்தக் கொள்கையும் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாக இல்லை. ….. நான் எனது உண்மைத்துவத்திற்கு வேறொரு சான்றை முன்வைப்பது எனக்கு அவசியமற்றதாக இருக்கின்றது. ஏனெனில், காலத்தின் தேவை சுயமே சான்றாக திகழ்கின்றது. (ஸரூரத்துல் இமாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 495)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்தக் காலம் இருளாக இருப்பதைக் கண்டும் உலகம் கவனக்குறைவிலும் நிராகரிப்பிலும், இணை வைத்தலிலும் மூழ்கி இருப்பதைக் கண்டும், ஈமானும், உண்மையும், இறையச்சமும் நேர்மையும் மறைந்து கொண்டிருப்பதைக் கண்டவாறும் மீண்டும் உலகில் அறிவார்ந்த, செயல் ரீதியிலான மற்றும் ஒழுக்க ரீதியிலான ஈமானிய உண்மைத்துவத்தை நிலைபெற செய்வதற்காக என்னை அனுப்பியுள்ளான். (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 5, பக்கம் 251)

கூறினார்கள்: நான் பூமியில் வசிக்கின்ற அந்த அனைத்து மக்களுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். அவர்கள் ஆசியாவில் வசிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே ; ஐரோப்பாவில் வசிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே ; அவர்கள் அமெரிக்காவில் வசிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே ; (நான் அவர்கள் அனைவருக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். (துர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 15, பக்கம் 515)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீங்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்றால் பின்னர் நன்றி செலுத்துங்கள். மேலும், நன்றி ஸஜ்தா செலுத்துங்கள். அந்த காலத்திற்காக காத்திருந்து காத்திருந்து உங்களுடைய சான்றோர்களான மூதாதையர்கள் கடந்து சென்று விட்டனர். மேலும் எண்ணற்ற ஆன்மாக்கள் அதற்காக ஆர்வத்திலேயே கடந்து சென்று விட்டன. ஆனால் அந்த காலம் உங்களுக்கு கிடைத்து விட்டது. இனி அதனை கண்ணியப்படுத்துவதும் கண்ணியப்படுத்தாமல் இருப்பதும் அதிலிருந்து பயனடைவதும், பயனடையாமல் இருப்பதும் உங்களின் கரங்களில் உள்ளது. நான் இதனை மீண்டும், மீண்டும் எடுத்துரைப்பேன். மேலும், அதனை வெளிப்படுத்துவதிலிருந்து நான் விலக மாட்டேன். அதாவது, குறித்த நேரத்தில் படைப்பினத்தின் சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்டவன் நானே ஆவேன்; மார்க்கத்தை புத்தம் புதிதாக உள்ளங்களில் நிலை பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 3, பக்கம் 8)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மேற்கோள்கள் நம்மை கவலை கொள்ள செய்கின்றது. அதாவது நாமோ வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தை பெற்றிருக்கின்றோம். நாம் அந்த மகத்துவ மிக்க பணி மற்றும் மகத்துவ மிக்க ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும், அதனை பரப்புவதற்காகவும் முழுமையான முயற்சிகளை செய்து கொண்டிருக்கின்றோமா? இல்லையா? அல்லது சிறிது பணத்தை மட்டும் சந்தாக்களில் கொடுத்து விட்டு நமது அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நாம் விடுபட்டு விட்டதாக கருதுகின்றோமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்து குறித்து கீழே இன்னும் சில மேற்கோள்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன:

சூரா ஜுமுஆவில் ஆகரீன மின்ஹும் என்ற சொற்களில் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீண்டும் வர

தொடர்ச்சி 16-ம் பக்கம்...

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

பதர் வாரப் பத்திரிகை காதியான்

சிறப்பிதழ் : மஸீஹ் மவ்வூத்

## இந்த இதழில்



| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை (19.2.24) | 3 |
| 3 | திருக்குர்ஆனின் மகத்துவம் குறித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு | 11 |
| 4 | அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒளிமயமான எதிர்காலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் | 17 |
| 5 | இறையருட்களின் பொலிவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்களும் | 20 |
| 6 | விகிதாசாரப்படி சந்தா வழங்குதல் மற்றும் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் & அருட்களும் | 23 |
| | | |

# ஜுமுஆ பேருரை

**உஹது போரில் ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) செய்த தியாகங்களும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்தைக் குறித்தும் ஈமானை வலுவூட்டும் சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள்**

அந்த தூய மனிதரின் காதுகளில்

اُعْلُ هُبَلْ. اُعْلُ هُبَلْ.

(ஹுபலின் மகிமை ஓங்கட்டும்!) என்ற சப்தம் விழுந்ததும் அவருடைய ஏகத்துவ உணர்வு பொங்கி எழுந்தது. ஏனெனில், தற்போது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கான கேள்வி இல்லை ; தற்போது அபூபக்ர் மற்றும் உமருக்கான கேள்வியாக இருக்கவில்லை ; தற்போது அல்லாஹ்வின் கண்ணியத்திற்கான கேள்வியாக இருந்தது. நீங்கள் ஏன் பதில் கொடுப்பதில்லை? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் ஆக்ரோஷத்துடன் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் கொடுப்பது? என்று ஸஹாபிகள் கேட்டனர். அப்போது,

اَللّٰهُ عَزَّوَجَلَّ. اَللّٰهُ عَزَّوَجَلَّ.

என்று கூறுங்கள் என அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹுபுல் ஒரு பொருட்டல்ல ; வல்ல இறைவனின் மகத்துவமே உயர்ந்தது; வல்ல இறைவனின் மகிமையே உயர்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏகத்துவ உணர்வின் இது எத்துனை சிறப்பான வெளிப்பாடாகும்!

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 பிப்ரவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தப்லீஃக் மாதம் 9ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

உஹது போரின் அடிப்படையில் அபூஸுஃப்யானுடைய முழக்கங்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் அவர் தமது சிலைகளின் பெருமையை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். மேலும், அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வல்ல இறைவனுக்கான தன்மானத்தை வெளிப்படுத்தினார்கள். எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்மானத்தை வெளிப்படுத்தினார்கள்; மேலும் அந்த(அபாயகரமான)நிலைமைகளிலும் கூட அல்லாஹ்வின் பெயரை மேன்மைப்படுத்தும் முழக்கத்தை அன்னார் (ஸல்) எவ்வாறு முழங்கச் செய்தார்கள்? போன்ற விஷயங்களை எல்லாம் நான் எடுத்துரைத்து இருந்தேன். இது தொடர்பாக கூடுதல் சான்றுகளை நான் முன் வைப்பேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹதீஸ்களில் வருகின்றது. உஹது போரில் அபூ ஸுஃப்யான் மிகவும் உரத்த குரலில்

لَنَا عُزّٰى وَلَا عُزّٰى لَكُمْ

என்று கூறினார். அதாவது, எங்களுக்கு ஆதரவாக எங்களது உஸ்ஸா சிலை உள்ளது; ஆனால், உங்களுக்கு ஆதரவாக எந்தக் கடவுளும் இல்லை. எனவே அப்போது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் கூறினார்கள்:

لَنَا مَوْلٰى وَلَا مَوْلٰى لَكُمْ

என்று நீங்கள் கூறுங்கள்.

என்றென்றும் உயிருடன் இருக்கின்ற மற்றும் நிலைத்திருக்கக் கூடிய எங்களது இறைவன் எங்களது நண்பனும், உதவியாளனும் ஆவான். ஆனால் உங்களுக்கு எந்த நண்பனும், உதவியாளனும் இல்லை.

கூறுகின்றார்கள்: இது

اَنْتَ مَوْلٰنَا

என்பதன் உண்மைத்துவத்திற்கு எத்தகைய செயல் சான்றாக உள்ளது! அதாவது வாள்களின் நிழல்களிலும் கூட அல்லாஹ் எங்களை பாதுகாப்பான் என்றே அன்னார் (ஸல்) கூறினார்கள். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 660, 2004 ஆண்டு பதிப்பு)

பின்னர் அன்னார் (ரலி) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற செய்தி முஸ்லிம்களின் காதுகளில் விழுந்தபோது,அவர்கள் வேகவேகமாக திரும்பி வந்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது கிடந்த சடலங்களை அவர்கள் அகற்றினார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள்: மூச்சு வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிய வந்தது. அப்போது, எல்லாவற்றையும் விட முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கன்னத்திலிருந்து அன்னாரின் தலைக் கவசத்தின் ஆணி வெளியேற்றப்பட்டது. அந்த ஆணி வெளியேற்ற முடியாமல் இருந்தது. இறுதியில் ஒரு ஸஹாபி தமது பற்களால் அவற்றை வெளியில் எடுத்தார்கள். அதன் காரணமாக அவருடைய இரண்டு பற்கள் உடைந்து விட்டன. பின்னர் அன்னாரின் முகத்தின் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டது. அப்போது அன்னாருக்கு சுய நினைவு வந்து விட்டது. பெரும்பாலான ஸஹாபிகள் சிதறுண்டு விட்டிருந்தனர். சில ஸஹாபிகளின் கூட்டம் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தது. தற்போது நாம் மலையின் அடிவாரத்திற்கு சென்று விட வேண்டும் என்று அன்னார் (ஸல்) அந்த ஸஹாபிகளிடம் கூறினார்கள். ஆக, அன்னார் (ஸல்) அந்த ஸஹாபிகளை அழைத்துக் கொண்டு ஒரு மலையின் அடிவாரத்திற்கு சென்று விட்டார்கள். மேலும், பின்னர் எஞ்சியப் படையும் மெது,மெதுவாக ஒன்று கூட துவங்கி விட்டது. நிராகரிப்பாளர்களின் படை திரும்பி சென்று கொண்டிருந்தபோது, அந்நிலையில் அபூ ஸுஃப்யான் உரத்த குரலில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பெயரைக் குறிப்பிட்டார். மேலும், நாங்கள் அவரைக் கொன்று விட்டோம் என்றும் கூறினார். ஸஹாபிகள் பதில் கொடுக்க விரும்பினர். ஆனால், அவர்களை அன்னார் (ஸல்) தடுத்து விட்டார்கள். கூறினார்கள்; இது சந்தர்ப்பம் இல்லை; நமது ஆட்கள் சிதறுண்டு விட்டனர்; சிலரோ கொல்லப்பட்டு விட்டனர்; மேலும் சிலர் காயமுற்று இருக்கின்றனர்; இங்கு நாம் குறைவானவர்களே இருக்கின்றோம்; அது மட்டுமல்ல; அனைவரும் களைத்து இருக்கின்றோம். நிராகரிப்பாளர்களின் படை மூவாயிரம் நபர்களை கொண்டுள்ளது. அவர்கள் முற்றிலும் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர். இது போன்ற நிலையில் (அபூ ஸுஃப்யானிற்கு) பதில் கொடுப்பது உகந்தது அல்ல. என்னைக் கொன்று விட்டதாக அவர்கள் கூறுகின்றனர் என்றால் அவர்கள் கூறிக் கொள்ளட்டும்.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஸஹாபிகள் மௌனம் காத்தார்கள். அபூ ஸுஃப்யானிற்கு எந்த பதிலும் கிடைக்காதபோது, நாங்கள் அபூ பக்ரையும் கொன்று விட்டோம் என்று அவர் கூறினார். அப்போதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை மீண்டும் பதில் அளிப்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். அமைதியாக இருங்கள்; அவர் கூறினால் கூறிக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். எனவே ஸஹாபிகள் அனைவரும் அப்போதும் மௌனமாக இருந்தார்கள். அபூ ஸுஃப்யானிற்கு மீண்டும் எந்த பதிலும் கிடைக்காதபோது, நாங்கள் உமரைக் கொன்று விட்டோம் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ மிகவும் கோபம் படைத்த இயல்பைக் கொண்டவராக இருந்தார்கள். அன்னார் (ரலி) பேசத் துவங்கினார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாரை தடுத்து விட்டார்கள். பின்னர் அன்னார்(ரலி) கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிற்காலத்தில்

இவ்வாறு கூறினார்கள்: நாங்கள் உமரைக் கொன்று விட்டதாக நீங்கள் கூறுகின்றீர்கள்: ஆனால், உமரோ தற்போதும் உங்களது தலையை உடைப்பதற்கு உயிருடன் இருக்கின்றார் என்று நான் கூற முற்பட்டிருந்தேன்.

எவ்வாறு இருப்பினும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாரையும் பதில் கொடுப்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். எந்தப் பதிலும் வரவில்லை என்பதை அபூ ஸுஃப்யான் கண்டபோது அவர்

اُعْلُ هُبَلْ. اُعْلُ هُبَلْ

என்று முழக்கமிட்டார். அதாவது, அபூ ஸுஃப்யான் ஹுபுல் என்ற எந்த சிலையை மகத்தானது என்று கருதி வந்தாரோ அதன் மேன்மை ஓங்கட்டும்; ஹுபுல் சிலையின் மகத்துவம் ஓங்கட்டும் என்று கூறினார். (அதாவது, இறுதியில் எங்களது ஹுபுல் சிலை முஹம்மது ((ஸல்) அவர்களையும்) மற்றும் அவரது தோழர்களையும் அழித்தே விட்டது என்று அவர் கூறினார்) ஸஹாபிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசுவதற்கும், பதில் கொடுப்பதற்கும் தடை செய்திருந்தார்கள் எனவே அவர்கள் அப்போதும் மௌனம் காத்தனர். ஆனால், தான் மரணித்து விட்டதாக கூறியதைக் கேட்ட பின்னரும் அமைதியாக இருங்கள்; பதில் கொடுக்கக் கூடாது என்று கூறியிருந்த இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூ பக்ர் மரணத்து விட்டதாக கூறிய செய்தியைக் கேட்டு விட்டு அமைதியாக இருங்கள்; பதில் கொடுக்கக் கூடாது என்று கூறியிருந்த இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) மரணித்து விட்டதாக கூறிய செய்தியைக் கேட்டு விட்டு அமைதியாக இருங்கள்; பதில் கொடுக்கக் கூடாது என்று கூறியிருந்தார்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள். மேலும், நமது படை தற்போது சிதறுண்டு இருக்கின்றது; எதிரி மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கான அபாயம் உள்ளது; எனவே அமைதியாக எதிரியின் கூற்றை கேட்டுக் கொண்டே செல்லுங்கள் என்று அந்த இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள் .அந்த தூய மனிதரின் காதுகளில்

اُعْلُ هُبَلْ. اُعْلُ هُبَلْ

(ஹுபலின் மகிமை ஓங்கட்டும்!) என்ற சப்தம் விழுந்ததும் அவருடைய ஏகத்துவ உணர்வு பொங்கி எழுந்தது. ஏனெனில், தற்போது முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கான கேள்வி இல்லை ; தற்போது அபூபக்ர் மற்றும் உமருக்கான கேள்வியாக இருக்கவில்லை ; தற்போது அல்லாஹ்வின் கண்ணியத்திற்கான கேள்வியாக இருந்தது. நீங்கள் ஏன் பதில் கொடுப்பதில்லை? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் ஆக்ரோஷத்துடன் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் கொடுப்பது? என்று ஸஹாபிகள் கேட்டனர். அப்போது,

اَللّٰهُ عَزَّوَجَلَّ. اَللّٰهُ عَزَّوَجَلَّ

என்று கூறுங்கள் என அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹுபுல் ஒரு பொருட்டல்ல ; வல்ல இறைவனின் மகத்துவமே உயர்ந்தது; வல்ல இறைவனின் மகிமையே உயர்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏகத்துவ உணர்வின் இது எத்துனை சிறப்பான வெளிப்பாடாகும்!

அன்னார் (ஸல்) மூன்று முறை ஸஹாபிகளை பதில் கொடுப்பதிலிருந்து தடுத்து நிறுத்தினார்கள். இதிலிருந்து அன்னார் (ஸல்) அபாயத்தின் முக்கியத்துவத்தை குறித்து முழுமையாக உணர்ந்திருந்தார்கள் என்பது புலப்படுகின்றது. இஸ்லாமியப் படை சிதறுண்டு இருக்கின்றது; மேலும், தம்முடன் மிகவும் குறைவான நபர்களே இருக்கின்றனர் என்பதையும் அன்னார் (ஸல்) அறிந்திருந்தார்கள். பெரும்பாலான ஸஹாபிகள் காயமடைந்து இருந்தனர். மேலும் எஞ்சியவர்கள் களைத்துப் போய் இருந்தனர். இஸ்லாமியப் படையின் ஒரு பகுதி ஒன்று கூடி இருக்கின்றது என்பது எதிரிக்கு தெரிந்து விட்டால் பின்னர் அவன் மீண்டும் தாக்குதல் நடத்துவதற்கு துணிந்து விடுவான். ஆனால், இந்த நிலைமைகளுக்கு மத்தியிலும் வல்ல இறைவனின் கண்ணியத்திற்கான கேள்வி எழுந்தபோது, மௌனமாக இருப்பதை அன்னார் (ஸல்) பொறுத்துக் கொள்ளவில்லை. மேலும், எதிரிக்கு தெரிந்தாலும் சரி; தெரியாவிட்டாலும் சரி; அவன் தாக்குதல் நடத்தினாலும் சரியே!மேலும் நம்மை அழித்து விட்டாலும் கூட பரவாயில்லை. இனி நாம் மௌனமாக இருக்க கூடாது என்று கருதினார்கள். ஆக, நீங்கள் ஏன் அமைதியாக இருக்கின்றீர்கள்? اَللّٰهُ عَزَّوَجَلَّ. اَللّٰهُ عَزَّوَجَلَّ

என்று ஏன் பதில் கொடுப்பதில்லை? என அன்னார் (ஸல்) ஸஹாபிகளிடம் கேட்டார்கள். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 10, பக்கம் 341 -342, 2004-ம் ஆண்டு பதிப்பு)

சூரா கவ்ஸரின் விளக்கவுரையில் இந்த அனைத்து விளக்கத்தையும் அன்னார் (ரலி) எடுத்துரைத்துள்ளார்கள். இதன் விளக்கத்தை படிக்க வேண்டும் என்றால், பின்னர் தஃப்ஸீரே கபீரிலிருந்து படியுங்கள். அறிவை அதிகரிக்கும் இன்னும் ஏராளமான விஷயங்கள் அங்கிருந்து கிடைத்து விடும்.

பின்னர் ஓரிடத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மக்காவின் எந்த பெரும் தலைவர்கள் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை கொல்ல விரும்பினார்களோ இன்று உலகில் அவர்களில் எவருடைய பெயரையும் கூறக் கூடியவர்கள் இருக்கின்றனரா? உஹது மைதானத்தில் அபூ ஸுஃப்யான் குரல் கொடுத்திருந்தார். மேலும், உங்களில் முஹம்மது ((ஸல்) அவர்கள்) உயிருடன் இருக்கின்றாரா? என்று கேட்டார். மேலும், அதற்கு பதில் கிடைக்காதபோது, நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை கொன்று விட்டோம் என்று அவர் கூறினார். பின்னர், உங்களில் அபூபக்ர் (உயிருடன்) இருக்கின்றாரா? என்று அவர் கேட்டார். அதற்கு பதில் கிடைக்காதபோது நாங்கள் அபூபக்ரையும் கொன்று விட்டோம் என்று அவர் கூறினார். பின்னர் உங்களில் உமர் (உயிருடன்) இருக்கின்றாரா? என்று கேட்டார்.அதற்கு பதில் கிடைக்காதபோது நாங்கள் உமரையும் கொன்று விட்டோம் என்று அவர் கூறினார்.(புகாரி, கிதாபுல் மகாஸீ, பாப் கஸ்வா உஹது)

ஆனால், இன்று செல்லுங்கள்! மேலும் உலகின் மூலைகளில் இந்த குரலைக் கொடுக்கக் கூடியவரின் தோழர் நிராகரிப்பாளர்களின் தலைவர் அபூ ஜஹ்லை அழையுங்கள்; மேலும், உங்களில் அபூ ஜஹ்ல் இருக்கின்றாரா? என்று குரல் கொடுங்கள். அப்போது நீங்கள் கண்டு கொள்வீர்கள். அதாவது, முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெயரிலோ கோடிக்கணக்கான குரல் ஒலிக்கத் துவங்கி விடும்.மேலும், ஆம்! முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுள் இருக்கின்றார் என்று முழு உலகமும் முழங்கும். ஏனெனில், அன்னாரின் பிரதிநிதித்துவத்திற்கான கண்ணியம் எங்களுக்கு கிடைத்துள்ளது. ஆனால், அபூ ஜஹ்லை அழைக்கின்றபோது, எந்தக் குரலும் உங்களுக்கு எந்த மூலையிலும் கேட்காது. அபூ ஜஹ்லுடைய சந்ததிகள் இன்றும் உலகில் இருக்கின்றனர். ஆனால், நான் அபூ ஜஹ்லுடைய சந்ததியைச் சார்ந்தவன் ஆவேன் என்று கூறுவதற்கு எவருக்கும் தைரியம் இருக்காது. அநேகமாக உத்பா மற்றும் ஷேபாவின் சந்ததிகளும் இன்று உலகில் இருக்கக் கூடும். ஆனால், நான் உத்பா மற்றும் ஷேபாவின் சந்ததி ஆவேன் என்று ஒருவர் கூற முடியுமா? (தப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 290 - 291, 2004-ம் ஆண்டு பதிப்பு)

ஆக, தூய இறைத் தூதரின் பெயரையே அல்லாஹ் உயர்த்தி இருக்கின்றான்; உயர்த்தி வைத்துள்ளான்.

பின்னர், இது தொடர்பாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபிமார்கள் மீது வருகின்ற துன்பங்களிலும் அல்லாஹ்வினுடைய ஆயிரக்கணக்கான இரகசியங்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஏராளமான துன்பங்கள் வந்தன. உஹது போரின் ஓர் அறிவிப்பு உள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எழுபது வாள்களின் காயங்கள் ஏற்பட்டிருந்தன. மேலும், முஸ்லிம்களின் வெளிப்படையான மோசமான நிலையைக் கண்டு நிராகரிப்பாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னாருடைய பெரும் தோழர்களும் ஷஹீதாகி விட்டார்கள் என்ற நம்பிக்கையில் ஒரு நிராகரிப்பாளர் உரத்த குரலில் விளித்து, உங்களில் முஹம்மது (ஸல்) (உயிருடன்) இருக்கின்றாரோ? என்று கேட்டார். அமைதியாக இருங்கள்; அவருக்கு பதில் கொடுக்காதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அந்த அமைதியினால் அன்னார் மரணித்து விட்டார்கள் என்று அவர் மகிழ்ச்சியடைந்தார். எனவேதான் பதில் வரவில்லை என்று அவர் எண்ணினார். பின்னர் இதேபோன்று, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்தும் குரல் கொடுத்தார். அப்போதும் அங்கிருந்து அமைதி காக்கப்பட்டது. பின்னர், அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விளித்து குரல் கொடுத்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. துர்பாக்கியசாலியே ! நீ என்ன உளறுகிறாய்? அனைவரும் உயிருடன் இருக்கின்றனர் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். இதுபோன்ற கடுமைகளைப் பார்ப்பதும் அவசியமானதாகும். ஆனால், அவர்களின் முடிவு இவ்வாறாக இருக்கின்றது. அதாவது இதற்கு பிறகு இனி நிராகரிப்பாளர்கள் நம் மீது போர் தொடுக்க மாட்டார்கள் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அநேகமாக அகழ்ப் போருக்க பிறகு அநேகமாக இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். உஹது போருக்கு பிறகு அகழ்ப் போர் நிகழ்ந்தது. இது மல்ஃபூஸாத்தின் சான்றாகும். எழுதக் கூடியவரிடமிருந்து இது விடுபட்டு இருக்கக் கூடும். ஆக, இந்த அகழ்ப் போருக்கு பிறகு,அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்: இதற்கு பிறகு இனி நிராகரிப்பாளர்கள் நம் மீது போர் தொடுக்க மாட்டார்கள்; மாறாக, நாம் நிராகரிப்பாளர்கள் மீது தாக்குதல் தொடுப்போம். மக்காவிலிருந்து புறப்பட்ட நேரமோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்துனை கடினமான தருணமாக இருந்தது! (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 266 -267, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஆனால் தற்போது அல்லாஹ் நிலைமைகளை மாற்றி விட்டான்.

ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் எடுத்துரைக்கப்படுகின்றது. இதே போரில் மற்றுமொரு ஸஹாபியின் உயிர்த் தியாகமும், வீரமும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பில் தமது இன்னுயிரை கூட தியாகம் செய்து விடக் கூடிய சம்பவம் கிடைக்கின்றது. இவர்கள் அந்த ஸஹாபி ஆவார்கள். அன்னாரைக் குறித்து அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்காக புறப்பட்டு விட்டார்கள் என்று எனது கணவருக்கு தெரிய வந்தபோது எனது கணவரின் மீது குளியல் கண்டிப்பானதாக

இருந்தது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள் என்ற செய்தியை செவியுற்று எந்த அளவிற்கு விரைவாகவும், பரிதவிப்புடனும் அன்னார் வீட்டை விட்டு புறப்பட்டார்கள் என்றால், குளிப்பதைக் கூட அன்னார் அவசியமானதாக கருதவில்லை. மேலும், வாளை எடுத்துக் கொண்டு போர் மைதானத்தை நோக்கி செல்லத் துவங்கி விட்டார்கள். போரின்போது அன்னார் ஒருமுறை நிராகரிப்பாளர்களின் படைத் தளபதி அபூ ஸுஃப்யானிற்கு முன்னால் சென்றடைந்தார்கள். அபூ ஸுஃப்யான் குதிரையின் மீது அமர்ந்திருந்தார். ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்கள் அந்தக் குதிரையின் மீது தாக்குதல் நடத்தி அதனை காயப்படுத்தி விட்டார்கள். அதன் விளைவாக அபூ ஸுஃப்யான் குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டார். அபூ ஸுஃப்யான் கீழே விழுந்த உடனேயே கத்தத் துவங்கினார். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்கள் உடனடியாக வாளை உயர்த்திக் கொண்டு அபூ ஸுஃப்யானை அறுத்து விடுவதற்கு எண்ணம் கொண்டார்கள். அதேவேளை ஷத்தாத் பின் அவ்ஸ் என்பவனின் பார்வை அன்னார் மீது பட்டது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அவனது சரியான பெயர் ஷத்தாத் பின் அஸ்வத் ஆகும். சுருக்கமாக, ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்கள் அபூஸுஃப்யான் மீது வாளை உயர்த்தியதை ஷத்தாத் கண்டான். எனவே அவன் உடனடியாக ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்கள் மீது வாளால் தாக்குதல் நடத்தி அன்னாரை ஷஹீதாக்கி விட்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹன்ழலஃ(ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டதைக் குறித்து கூறினார்கள்: உங்களது தோழரை அதாவது ஹஸ்ரத் ஹன்ழலஃ(ரலி) அவர்களை வானவர்கள் நீராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: நான் வானவர்களை காண்கின்றேன்; அவர்கள் வானம் மற்றும் பூமிக்கிடையில் வெள்ளிப் பாத்திரங்களில் புத்தம் புதிய தண்ணீரைக் கொண்டு ஹன்ழலஃ (ரலி) அவர்களை நீராட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்களின் மனைவியின் பெயர் ஜமீலஃ ஆகும். இவர்கள் நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலின் மகளும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் அபீ பின் ஸலூல் அவர்களின் சகோதரியாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்னார் (ரலி) அதாவது ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) வீடு கூடிய நிலையிலேயே போர் மைதானத்திற்கு சென்று விட்டார்கள். அதாவது, அன்னாருக்கு குளியல் கண்டிப்பானதாக இருந்தது. ஹஸ்ரத் ஜமீலா (ரலி) அவர்களின் குரலைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனவே வானவர்கள் அன்னாரை நீராட்டிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ஜமீலா (ரலி) அவர்களுடன் நடந்த திருமணத்திற்கு பிறகான முதல் இரவாக அது இருந்தது. அந்த நாள் காலையில் உஹது போர் நடந்தது.

ஓர் அறிவிப்பில் உள்ளது: ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எதிரியுடன் போரிட புறப்படுங்கள் என்ற அறிவிப்பை ஹன்ழலஃ (ரலி) அவர்கள் செவியுற்றபோது, குளிக்காமலேயே புறப்பட்டு விட்டார்கள். அந்த நாள் இரவுதான் ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் கனவு கண்டிருந்தார்கள். அதாவது, திடீரென வானத்தில் ஒரு கதவு திறந்தது; மேலும் அன்னாருடைய கணவர் ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்கள் அந்த வாசலினுள் நுழைந்தார்கள். அதன் பிறகு உடனடியாகவே அந்தக் கதவு அடைக்கப்பட்டு விட்டது. ஓர் அறிவிப்பில் உள்ளது: ஹன்ழலஃ (ரலி) அவர்கள் தம்முடன் வீடு கூடியிருந்தார்கள் என்ற விஷயத்திற்கு ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் தமது கோத்திரத்தைச் சேர்ந்த நான்கு பெண்மணிகளை சாட்சியாக ஆக்கியிருந்தார்கள். தாம் கருத்தரிப்பது தொடர்பாக மக்களுக்கு ஐயம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக அன்னாருக்கு அவ்வாறு செய்ய நேரிட்டது. இன்றைய நாட்களிலும் பழிசுமத்துகின்ற மக்கள் இருக்கின்றனர்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் இந்த ஐயத்தை போக்குவதற்காக சுயமே சாட்சிகளை உருவாக்கிக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஜமீலஃ (ரலி) அவர்கள் சுயமே கூறுகின்றார்கள்: நான் ஏன் இவ்வாறு செய்தேன் என்றால் நான் கனவில் கண்டேன்: விண்ணில் ஒரு கதவு திறந்தது. அதில் அன்னார் நுழைந்து விட்டார்கள். மேலும் அந்தக் கதவு அடைக்கப்பட்டு விட்டது.

ஆக, ஹன்ழலஃவின் நேரம் வந்து விட்டது என்பதை நான் புரிந்து கொண்டேன் ; மேலும், நான் அன்னாரின் மூலமாக அந்த இரவில் கருவுற்று இருந்தேன். இந்த கருவின் மூலமாக அப்துல்லாஹ் பின் ஹன்ழலஃ பிறந்தார். குறைஷிகள் ஹஸ்ரத் ஹன்ழலஃ (ரலி) அவர்களை கொலை செய்த பிறகு அன்னாரின் பூத உடலை சிதைக்கவில்லை. அதாவது காது, மூக்கு, கண் போன்றவற்றை துண்டிக்கவில்லை. ஏனெனில், அன்னாரின் தந்தை அபூ ஆமிர் ராஹிப் குறைஷிகளுடன் இருந்தார். ( அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 327 - 328, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவமும் உள்ளது. ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ (ரலி) அவர்கள் பத்ர் மற்றும் உஹது போரில் கலந்து கொண்டிருந்தார்கள். மேலும், உஹது போரில் ஷஹீதாகிவிட்டார்கள். உஹது போர் நாளன்று என்னிடம் ஸஃது பின் ரபீஃயைக் குறித்த செய்தியை யார் கொண்டு வருவார்? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் என்று ஒரு நபர் கூறினார். ஆக, அவர் சென்று கொலையுண்டவர்களில் தேடத் துவங்கினார். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் அந்த நபரைப் பார்த்து, நீர் எப்படி இருக்கின்றீர்? என்று கேட்டார்கள். அதற்கு, நான் உம்மைக் குறித்த செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) என்னை அனுப்பியுள்ளார்கள் என்று அவர் கூறினார். அப்போது, ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது ஸலாத்தை எட்ட வைக்கவும்; மேலும், எனக்கு ஈட்டியினால் பனிரெண்டு காயங்கள் ஏற்பட்டுள்ளன ;மேலும் என்னுடன் போரிட்டவர்கள் நரகத்தை சென்றடைந்து விட்டனர்; அதாவது எவரெல்லாம் எனக்கெதிராக (போர்க் களத்தில்) சண்டையிட்டனரோ அவர்களை நான் கொன்று விட்டேன் என்ற செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கவும்; மேலும், எனது சமுதாயத்திடம் இதனைக் கூறவும்; அதாவது, அவர்களில் ஒருவர் கூட உயிருடன் இருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்றால் பின்னர் அல்லாஹ்விற்கு பதில் கூறுவதற்கு அவர்களுக்கு எந்த சாக்குப்போக்கும் இருக்காது.

அன்னாரிடம் சென்ற அந்த நபர் ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்று எடுத்துரைக்கப்படுகின்றது. ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபை பின கஅப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; என்று ஸஃது பின் ரபீஃ உங்களிடம் கூறுகின்றார் என்று எனது சமுதாயத்திடம் கூறுங்கள். மற்றோர் அறிவிப்பும் உள்ளது: நீங்கள் உக்பாவின் இரவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் என்ன உடன்படிக்கை செய்தீர்களோ அதனை நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களில் ஒரு கண் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அதாவது உங்களில் ஒருவர் உயிருடன் இருக்கும் நிலையில் நிராகரிப்பாளர்கள் உங்களது இறைத் தூதர் (ஸல்) அவர்களை நோக்கி சென்றடைந்து விட்டால் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பதில் கூறுவதற்கு உங்களுக்கு எந்த சாக்குப்போக்கும் இருக்காது.

அதாவது நீங்கள் உங்களது உயிர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காகவும், அவனது மார்க்கத்திற்காகவும் தியாகம் செய்து விட வேண்டும். இறைத் தூதர் (ஸல்) அவர்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதே மரணத்தருவாயிலும் ஸஹாபிகளுக்கு இருந்த உணர்வு ஆகும். ஹஸ்ரத் அபீ பின் கஅப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்: நான் அப்போது அங்குதான் இருந்தேன். அதாவது, ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களுக்கு அருகிலேயே இருந்தேன். அந்நிலையில் ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்து விட்டது. அந்நேரத்தில் அவர்கள் முற்றிலும் காயமடைந்திருந்தார்கள். நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு திரும்பிச் சென்று ஆஜரானேன். இந்த உரையாடல் நிகழ்ந்தது என்று அனைத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான் கூறிவிட்டேன். இது அன்னாரின் நிலைமையாக இருந்தது. மேலும் அன்னார் (ரலி) இவ்வாறு ஷஹீதானார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக. அவர் உயிருடன் இருந்தபோதும், மரணத்திற்கு பிறகும் கூட அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நலம் விரும்பியாக இருந்தார்.

ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ (ரலி) மற்றும் ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது (ரலி) ஆகியோர் ஒரே கபரிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டனர். (தப்காத்துல் குபரா, தொகுதி 3, பக்கம் 396, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களும் போர்க் களத்தில் இறங்கி சென்றிருந்தார்கள். ஷஹீதுகளின் உடல்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்நிலையில் போர் முடிந்திருந்தது. இரத்தக் கண்ணீர் வடிக்கும் அந்த நிலை முஸ்லிம்களின் முன்னால் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் காயமுற்று இருந்தார்கள். இருப்பினும், அன்னார் (ஸல்) போர்க் களத்திற்கு வந்தார்கள். ஷஹீதானவர்களின் உடல்களை பார்வையிட்டுக்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கொண்டிருந்தார்கள். பின்னர் கூறினார்கள்: எழுபது முஸ்லிம்கள் இரத்தமும், மண்ணும் கலந்தவாறு மண்ணில் கிடக்கின்றனர். மேலும் சடலங்களை சிதைக்கின்ற அரபு நாட்டினுடைய காட்டுமிராண்டித்தனமான சடங்கு செய்யப்பட்டிருந்தது. அவர்களுடைய உறுப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. முகங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு கொலையுண்டவர்களில் ஆறு பேர் மட்டும் முஹாஜிர்களாக இருந்தனர். மேலும், மீதமுள்ள மற்ற அனைவரும் அன்ஸாரி ஸஹாபிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். குறைஷிகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 23 ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய சிறிய தந்தையார் மற்றும் பால்குடி சகோதரரான ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் உடல் அருகே சென்றார்கள். அப்பொழுது நிலை குலைந்து விட்டார்கள். ஏனெனில், அபூ ஸுஃப்யானின் மனைவியான அநியாயக்காரி ஹிந்தா அன்னாருடைய உடலை மிகவும் கொடூரமாக சிதைத்து இருந்தார். அன்னார் (ஸல்) சிறிது நேரம் வரை மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் துன்பம் மற்றும் கோபத்திற்கான அடையாளங்கள் தென்பட ஆரம்பித்தன. மக்காவின் இந்த கொடிய காட்டுமிராண்டிகளுடன் அவர்களைப் போன்ற நடைமுறையைக் காட்டவில்லையென்றால் இவர்கள் சுயநினைவிற்கு வரமாட்டார்கள் என்ற நிலை அன்னாருடைய இயல்பில் ஒரு நொடிப் பொழுதிற்கு மட்டும் தோன்றியது; அவ்வாறு செய்யவில்லையென்றால் அவர்களுக்கு படிப்பினை கிடைக்காது என்ற நிலை உருவானது. ஆனால்,ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பொறுமையை மேற்கொண்டவாறு இந்த எண்ணத்திலிருந்து தம்மை காத்துக் கொண்டார்கள். இன்னும் கூறப்போனால், அன்னார் (ஸல்), இந்த உறுப்பை வெட்டி சடலத்தை சிதைக்கும் அந்த அந்த நடைமுறையை இஸ்லாத்தில் நிரந்தரமாக தடை செய்து விட்டார்கள். மேலும் கூறினார்கள்: எதிரிகள் என்ன செய்தாலும், நீங்கள் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களிலிருந்து விலகியிருக்க வேண்டும்; மேலும் கருணையின் நடைமுறையைக் காட்ட வேண்டும்.

அடுத்து, அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: குறைஷிகள் மற்ற சடலங்களுடனும் இவ்வாறே நடந்து கொண்டனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரி மகனான அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் உடலும் மிகவும் மோசமான முறையில் சிதைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வோர் உடலையும் கடந்து சென்றவாறு அடுத்த உடலை பார்த்தார்கள். அப்போது அன்னாருடைய முகத்தில் துயரம் மற்றும் சோகம் ஆகியவற்றின் அடையாளங்கள் அதிகமாகிக் கொண்டே சென்றன.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் - பக்கம் 500)

இந்த ஷஹீதுகளின் ஷஹாதத் சம்பவங்கள் மற்றும் அவர்களின் தியாகங்களைப் பற்றிக் கூறும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அன்ஸாரின் தலைவர் ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு,நேசம் தொடர்பாக கூறுகின்றார்கள்: உஹது போருடைய ஒரு சம்பவம் இருக்கின்றது. போருக்குப் பிறகு, நீங்கள் சென்று காயமடைந்தவர்களை பாருங்கள்! என்று ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் காயமடைந்தவர்களை பார்வையிட்டவாறு ஹஸ்ரத் ஸஃது பின் ரபீஃ (ரலி) அவர்களை சென்றடைந்தார். அன்னாரோ மிகவும் காயமடைந்து இருந்தார்கள். அன்னார் (ரலி) இறுதி மூச்சை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது, உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும், உங்கள் உறவினர்களுக்கும் ஏதாவது தூதுச் செய்தி இருந்தால் என்னிடம் கூறுங்கள் என்று அன்னாரிடம் இவர்கள் கேட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் புன்சிரித்தவாறு கூறினார்கள்: யாராவது ஒரு முஸ்லிம் இந்தப் பக்கம் வந்தால் அவரிடம் இந்தத் தூதுச் செய்தியை கொடுத்தனுப்ப வேண்டும் என்று நான் காத்துக் கொண்டிருந்தேன்; எனவே நீங்கள் உங்களது கையை எனது கையில் வைத்து எனது தூதுச் செய்தியை அவர்களிடம் கொண்டு சேர்ப்பீர்கள் என்று எனக்கு வாக்குறுதி வழங்குங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். இந்த நிலையிலும் அன்னாருக்கு எந்த அளவிற்கு எண்ணம் இருந்தது பாருங்கள்! தமது கையின் மீது கையை வையுங்கள் என்று அன்னார் (ரலி)கூறினார்கள். அது உறுதியான வாக்குறுதியை பெறுவதற்கான வழிமுறையாகும்; ஒரு வெளிப்பாடாகும். அதாவது தமது தூதுச் செய்தியை நீங்கள் உறுதியாக எட்ட வைக்க வேண்டும் என்பதற்கான வெளிப்பாடாகும் அது. மேலும், இதன் பிறகு அன்னார் (ரலி) வழங்கிய தூதுச் செய்தி என்னவென்றால் அன்னார் (ரலி) கூறினார்கள்: எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு எனது ஸலாத்தைக் கூறுங்கள்; மேலும் எனது கோத்திரத்திடமும், எனது உறவினர்களிடமும் கூறுங்கள்; கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நம்மிடம் இருக்கும் மிகச் சிறந்த அமானிதம் ஆவார்கள். நாம் எமது உயிரினால் இந்த அமானிதத்தைப் பாதுகாத்து வந்தோம்; தற்போது நாம் விடைபெறுகின்றோம். இனி இந்த அமானிதத்தின் பாதுகாப்புப் பணியை உங்களிடம் நாம் ஒப்படைக்கின்றோம். நீங்கள் அந்த அமானிதத்தைப் பாதுகாப்பதில் பலவீனத்தை வெளிப்படுத்தி விடாதீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! நான் மரணித்துக் கொண்டிருக்கின்றேன் என்று மனிதன் கருதும் அந்நேரத்தில், என்னென்ன எண்ணங்கள் வரக் கூடும்! எனது மனைவியின் நிலை என்னவாகும்? எனது பிள்ளைகளை யார் கவனிப்பார்? என்று மனிதன் சிந்திப்பான். ஆனால், இந்த ஸஹாபியோ அப்படி எந்த தூதுச் செய்தியையும் வழங்கவில்லை. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாதுகாத்தவாறு இந்த உலகை விட்டு செல்கின்றோம்; நீங்களும் இதே வழியில் எங்களுக்கு பின்னால் வரவேண்டும் என்று மட்டுமே அவர் கூறினார். அவர்களிடம் இந்த ஈமானிய அம்சம் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் இந்த உலகத்தையே புரட்டிப் போட்டு விட்டார்கள். மேலும் கைஸர், கிஸ்ரா போன்ற பேரரசுகளை கூட அவர்கள் வீழ்த்திவிட்டனர். இந்த மக்கள் யார்? என்ற வியப்பில் ரோமானியப் பேரரசின் கைஸர் இருந்தார். மேலும், உம்மால் அந்த அரேபியர்களை தோற்கடிக்க முடியாது; நீ திரும்பி வந்து விடு; மேலும் வீட்டில் வளையல்களை அணிந்து கொண்டு அமர்ந்து விடு என்று கிஸ்ரா தனது படைத் தளபதியிடம் கூறினார். அதாவது பெண்களைப் போன்று வீட்டில் அமர்ந்து கொள்; போருக்காக ஏன் செல்கிறாய்? என்று அவர் தனது படைத்தளபதியிடம் கூறினார். இவர்களோ அசுத்தத்தை உண்ணும் மக்கள் ஆவர்; இவர்களை உம்மால் தடுக்க முடியாதா? என்று அந்த மன்னர் தனது படைத்தளபதியிடம் கூறினார். அதாவது, மோசமான மற்றும் கீழ்தரமான உணவுகளை உண்ணக் கூடிய மக்கள் ஆவர் இவர்கள். அதற்கு அந்த படைத்தளபதி கூறினார்; எங்களுக்கு இவர்கள் மனிதர்களாக தெரியவில்லை ; இது ஏதோ ஒரு சோதனையாக இருக்கின்றது. வாள் மற்றும் அம்புகள் மீது ஏறிக் குதித்துக் கொண்டு இவர்கள் வருகின்றனர்.

இந்த சம்பவத்தை மற்றொரு வடிவத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போர் முடிவுற்ற உடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்றவர்களை பார்ப்பதற்காக ஒரு ஸஹாபியை அனுப்பி வைத்தார்கள். அவர் ஒரு அன்ஸாரி ஸஹாபியைக் கண்டார். அவரோ மிகவும் மோசமான நிலையில் இருந்தார். மேலும், இவர் அவருக்கு அருகில் சென்றார். சகோதரரே! உங்களிடம் ஏதாவது தூதுச் செய்தி இருந்தால் என்னிடம் கூறுங்கள் என்று கேட்டார்; நான் உங்களுடைய நெருங்கியவர்கள் மற்றும் உறவினர்களுக்கு அதனை எட்ட வைப்பேன் என்றார்.

அதற்கு அவர் கூறினார்: மதீனாவைச் சேர்ந்த எவராவது ஒருவர் வந்தால் நான் அவரிடம் இந்த தூதுச் செய்தி கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில்தான் இருந்தேன். உங்கள் வருகை நல்லதாகிவிட்டது. நீங்கள் வந்து விட்டீர்கள்; நீங்கள் உங்களது கையை எனது கையின் மீது வையுங்கள். மேலும் எனது இந்த தூதுச் செய்தியை எனது குடும்பத்தினரிடம் நீங்கள் எட்ட வைத்து விடுவீர்கள் என்று எனக்கு வாக்குறுதி வழங்குங்கள் என்று கேட்டார். நிச்சயமாக உங்களது தூதுச் செய்தியை நான் எட்ட வைத்துவிடுவேன் என்று அந்த ஸஹாபி வாக்குறுதி வழங்கினார். அப்போது அந்த காயமடைந்திருந்த ஸஹாபி கூறினார்: எனது நெருங்கியவர்கள், உறவினர்கள் மற்றும் சகோதரர்களிடம் சென்று இவ்வாறு கூறுங்கள்: முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமது சமுதாயத்தின் மிகச் சிறந்த கருவூலம் ஆவார்கள். மேலும் அன்னார் நமது சமுதாய அமானிதம் ஆவார்கள். அன்னார் நம்மிடம் இருக்கின்றார்கள். உங்களது உள்ளத்திலும் இந்த விலைமதிப்பற்ற கருவூலத்திற்குரிய மகத்துவத்தையும், கண்ணியத்தையும் சரியாக புரிந்து வைத்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எனவே என் மீது கடமையாக இருக்கின்றது என்று நான் புரிந்து வைத்திருக்கின்ற இந்த தூதுச் செய்தியை இதன் மூலமாக உங்களுக்கு வழங்குகின்றேன்; அதாவது நாங்கள் உயிருடன் இருந்த வரை நாங்கள் அந்த அமானிதத்தை ஏமாற்றவில்லை ; அந்த அமானிதத்தைப் பாதுகாப்பதற்காக நாங்கள் முழு ஆற்றலையும் செலவழித்து இருக்கின்றோம்; தற்போது நாமோ மரணமடைகின்றோம். எங்களுக்குப் பிறகு இந்த அமானிதத்தை விட்டு செல்கின்றோம்; அவர்கள் தங்களது உயிரை விடவும் அதிகமாக இந்த தூய அமானிதத்தை பாதுகாப்பார்கள் என்றும் ; மேலும் இதில் அவர்கள் எவ்வகையிலும் கவனக்குறைவாக இருக்க மாட்டார்கள் என்றும் நான் என்னுடைய அனைத்து மகன்கள் மீதும், எனது சகோதரர்கள் மீதும் மற்றும் அவர்களுடைய சந்ததிகள் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன்.

மேலும், ஓரிடத்தில் அன்னார் (ரலி) இவ்வாறும் எழுதியிருக்கின்றார்கள்: அன்ஸாரி தலைவர் ஒருவர் காயமுற்றிருந்தார். மேலும்,அன்னாரின் நிலை எவ்வாறு இருந்தது என்றால், சில நிமிடங்களிலேயே அவர் மரணிக்கக் கூடியவராக இருந்தார். ஒரு ஸஹாபி அவரைத் தேடிக் கொண்டு சென்றார். மேலும்,அவருக்கு அருகில் சென்று அமர்ந்து விட்டார். அவரது நிலையை விசாரித்தார்.

மேலும் கூறினார்: உங்களின் மனைவி, மக்கள், உறவினர்களுக்கு கூற வேண்டிய ஏதாவது தூதுச் செய்தி இருந்தால் கூறுங்கள். அதற்கு அவர் கூறினார்: ஆம்! இருக்கின்றது. நான் இதற்காகத்தான் காத்திருந்தேன். யாராவது ஒரு முஸ்லிம் கிடைத்தால் அவருடைய கையில் இந்த செய்தியை அனுப்ப வேண்டும் என்று நான் காத்திருந்தேன்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மரணத்தருவாயில் வீட்டில் இருந்தால் அது எவ்வளவு கடுமையானது என்பதை ஒவ்வொரு நபரும் நன்கு அறிந்தவராக இருக்கின்றார். ஒருவர் வீட்டில் இருக்கும் நியையில் மரணித்துக் கொண்டிருந்தால் அந்த தருணமும் கடுமையானதாக இருக்கின்றது. சில நிமிடங்கள் இன்னும் கிடைத்தால் மனைவி மக்கள் மற்றும் சகோதரர்களிடம் வேறு ஏதாவது விஷயங்களை கூறி விடலாம்; அவர்களுக்காக ஏதாவது உயில் எழுதி விடலாம் என்பதே மரணிக்கக் கூடியவரின் விருப்பமாக இருக்கின்றது. ஆனால், அந்த ஸஹாபியோ தமது மனைவி மக்களுடன் இல்லை ; வீட்டிலும் இல்லை ; மருத்துவமனையின் மிக மிருதுவான படுக்கையிலும் அவர் படுத்திருக்கவில்லை. மாறாக, கற்களால் நிறைந்த மண்ணில் அவர் வீழ்ந்து கிடக்கின்றார். ஆனால் அவ்வாறான நிலையிலும், எனது மனைவிக்கு ஸலாம் கூறுங்கள்; மேலும் எனது மனைவியிடம் எனது பிள்ளைகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்று கூறுங்கள் என்றோ அல்லது தனது சொத்துக்களை இவ்வாறு பிரித்துக் கொள்ளும்படி கூறுங்கள் என்றோ அல்லது தனது செல்வங்கள் இன்ன இன்ன இடத்தில் இருக்கின்றன; அதைப் பெற்றுக் கொள்ளும்படி தமது மனைவியிடம் கூறுங்கள் என்றோ அவர் கூறவில்லை. (அவர் செல்வந்தராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.) மாறாக அவர் கூறுகின்றார்: என்னுடைய பிள்ளைகள் மற்றும் சகோதரர்களுக்கு என் புறமிருந்து இந்தத் தூதுச் செய்தியைக் கூறுங்கள்: முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களிடம் இருக்கும் விலைமதிப்பற்ற அமானிதம் ஆவார்கள். எனக்கு உயிர் இருந்தவரை அதனை அர்ப்பணம் செய்து அந்த அமானிதத்தை நான் பாதுகாத்தேன். ஆனால், என்னுடைய நேசத்திற்குரிய சகோதரர்கள் மற்றும் பிள்ளைகளே! என்னுடைய கடைசி நேரத்தின் உயில் என்னவென்றால், இப்போது நீங்களும் உங்களது உயிரின் மூலமாக இந்த அமானிதத்தைப் பாதுகாக்க வேண்டும். மேலும் இதனைக் கூறியவாறு அவர் தமது உயிரைத் துறந்தார்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மீது இருந்த நேசத்தின் எவ்வாறான வெளிப்பாடு இது! மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். அல்லாஹ் நம்மிடமும் இவ்வாறான தூதர் (ஸல்) அவர்களின் மீதான அன்பின் உயிரோட்டத்தை உருவாக்குவானாக! மேலும் இந்த சிந்தனை உருவாகிக் கொண்டிருக்கும் வரை நாம் இறைவனுடனான தொடர்பில் முன்னேறிக் கொண்டே செல்வோம். மேலும், நமது பலவீனங்கள் (நம்மிடமிருந்து) அகன்று கொண்டே செல்லும். நாம் உண்மையான முறையில் முயற்சிகளை செய்யக் கூடியவர்களாக இருப்போம். எனவே சரியான இஸ்லாமிய முறைகளில் இறை வணக்கங்களில் நம்முடைய ஒழுக்கங்கள் மற்றும் பழக்க வழக்கங்களை உருவாக்குவோம். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பேறை வழங்குவானாக!

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சில ஜனாஸா தொழுகைகளை நான் தொழ வைப்பேன். மர்ஹூம்களின் நற்குறிப்பு இருக்கின்றது. முதலாவது நற்குறிப்பு, ஏமனைச் சேர்ந்த டாக்டர் மன்ஸூர் ஸூபூத்தி ஸாஹிப் அவர்களுடையதாகும். மன்ஸூர் ஸூயூத்தி ஸாஹிப் ஏமன் நாட்டில் இறைவழியில் சிறைக்கு சென்றிருந்தார். அஹ்மதிய்யத்தின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். அங்கு சிறையில் இருந்த வேளையிலேயே ஜனவரி 26-ம் தேதி தமது 63-ம் வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் சிறையில் இருந்தார்கள்.மேலும் அஹ்மதிய்யத்தின் காரணமாகவே அன்னார் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். மேலும், மர்ஹூமிற்கு சரியான சிகிச்சை கொடுக்கப்படவில்லை. மேலும் அன்னாருடன் சில தவறான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன..எவ்வாறு இருப்பினும் அங்கு சிறைவாசத்தின் நிலையில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.எனவே இவர் ஷஹீது என்றழைக்கப்படுவார். இந்த அடிப்படையில் ஏமன் நாட்டினுடைய முதலாவது ஷஹீது இவர் ஆவார். மர்ஹூம் தமக்குப் பின்னால் வயதான தாய் மற்றும் மனைவி மட்டுமின்றி அய்மன் மற்றும் பிலால் என்ற இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

மர்ஹூமுடைய சகோதரர் நாஸிர் ஸூபூத்தி ஸாஹிப் அவர்கள் இங்கு லண்டனில் வசித்து வருகின்றார். அவர்கள் கூறுகின்றார்கள்: மர்ஹூமின் பூத உடல் பிப்ரவரி 1-ம் தேதி அவருடைய மகனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், ஏறக்குறைய அனைத்து அஹ்மதிகளும் தற்போது சிறையில் உள்ளனர். ஏறக்குறைய அங்கு அனைத்து ஆண்களையும் சிறைபிடித்திருக்கின்றனர். எனவே அஹ்மதி அல்லாத நபர்கள் அவருடைய ஜனாஸாவை தொழ வைத்தார்கள். மேலும், நல்லடக்கம் செய்தார்கள்.பிறகு இவர் கூறுகின்றார். அதாவது அடுத்து, நாஸிர் ஸூபூத்தி ஸாஹிப் கூறுகின்றார்:

அவருடைய பாட்டனார் அப்துல்லாஹ் முஹம்மது உஸ்மான் ஸூபூத்தி ஸாஹிப் அவர்கள் ஏமன் நாட்டின் முதல் அஹ்மதி ஆவார்கள். மேலும், டாக்டர் மன்ஸூர் ஸூபூத்தி ஸாஹிப் அவர்களின் தந்தையார் முஹம்மது அப்துல்லாஹ் ஸூபூத்தி ஸாஹிப் அவர்கள் ஏமன் நாட்டினுடைய முதல் ஷாஹித் முரப்பி ஆவார்கள். மர்ஹூமுடைய தாயார் ஷாருக் நஸ்ரீன் ஸாஹிபா ரப்வாவின் ஸய்யித் பஷீர் அஹ்மத் ஷாஹ் ஸாஹிப் மற்றும் ஃபராக் கானம் ஸாஹிபா ஆகியோரின் மகள் ஆவார்கள். ஃபராக் கானம் ஸாஹிபா ஜூனுதிய்யா குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள். இமாம் மஹ்தி தோன்றினால் நீங்கள் பனிமலையில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் சென்று பைஅத் செய்யுங்கள் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் படி செயல்படும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்துள்ளது. அன்னாருக்கு தம்முடைய தாயார் ஹலீமா பானு ஸாஹிபா மற்றும் சகோதரர் ஸய்யித் ஹாஜி ஜூனூதுல்லாஹ் ஸாஹிப் ஆகியோருடன் இணைந்து இந்தக் கட்டளையை செயல்படுத்துவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது..

ஆக, இந்த மக்கள் காஷ்கரிலிருந்து பனிமலையில் கடந்து காதியான் வந்தனர்; மேலும் பைஅத் செய்தனர். மன்ஸூர் ஸூபூத்தி ஸாஹிபின் தாயார் இந்தக் குடும்பத்தின் உறுப்பினராக இருந்தார்கள். அன்னாரின் தாய் வழிப்பாட்டி பனிமலையில் நடந்து வந்த மக்களில் ஒருவராக இருந்தார்கள்.

ஷஹாதத் சம்பவம் தொடர்பாக அன்னாரின் மகன் பிலால் ஸூபூத்தி ஸாஹிப் கூறுகின்றார்: செக்யூரிட்டி ஃபோர்ஸ் எங்களது வீட்டில் பலவந்தமாக நுழைந்தது. தந்தையார் அவர்களை தள்ளிவிட்டார்கள். மேலும், அவர்களுடைய நெஞ்சில் துப்பாக்கியை வைத்தனர். மேலும், என்னையும் தந்தையுடன் அழைத்துச் செல்ல முற்பட்டனர். அப்போது தந்தையார் கூறினார்கள்: என்னைக் கொன்று விடுங்கள்; ஆனால், எனது மகனை அழைத்துச் செல்லாதீர்கள். அஹ்மதி அல்லாதவர்கள் ஜனாஸா தொழுதார்கள். மகனும் அவர்களுடன் இருந்தார். ஓர் அஹ்மதி மட்டும்தான். பதினாறு வயதுடையவர் ஆவார். அவர் கலந்து கொண்டார். வேறு எந்த ஆண் அஹ்மதிகளும் இல்லை. எவ்வாறு இருப்பினும், கூறப்படுகின்றது: அவர்கள் எனது தந்தையிடமிருந்து பணத்தை பறித்துக் கொண்டனர். மேலும் கூறினர்: உமக்கு வெளியிலிருந்து யாரோ பணம் அனுப்புகின்றனர். எனது தந்தை கூறினார்: எனக்கு யாரும் பணம் அனுப்பவில்லை. இது எனது உழைப்பு மற்றும் வருமானமே ஆகும்.

அஹ்மதிகளை குறித்து இந்த தப்பெண்ணத்தை ஆலிம்கள், பெயர் தாங்கி ஆலிம்கள் அஹ்மதி அல்லாதவர்களிடத்தில் உருவாக்கி வைத்துள்ளனர். நாம் நவூதுபில்லாஹ் மேற்கத்திய சக்திகளிடமிருந்து பணம் பெற்று உண்கின்றோம்; மேலும் அவர்களுடைய இஸ்லாத்திற்கு எதிரான திட்டங்களை நாம் கொண்டிருக்கின்றோம் என்று பரப்பி வைத்துள்ளனர். ஆனால் உண்மை என்னவென்றால்,ஒவ்வோர் அஹ்மதியும் பொருள் தியாகம் செய்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புகின்றார். மேலும் மனித குலத்திற்கு தொண்டாற்றுகின்றார்.எவ்வாறு இருப்பினும், இதனுடைய மற்ற விவரங்கள் மிகவும் நீண்டதாகும்.

இதன் பிறகு நான் அன்னாருடைய மனைவி எனக்கு அனுப்பிய அந்த தூதுச் செய்தியை அன்னாருடைய கூற்றை கூறிவிடுகின்றேன். அவர் கூறுகின்றார்: சிறைபிடித்தவர்கள் என்னுடைய கணவரை சிறையில் வைத்திருந்த இடத்தை எனக்கு காண்பித்துக் கொடுத்தார்கள். அவர்கள் என்னிடம் கூறினர்: என்னுடைய கணவர் தன்னுடைய அறையில் பெரும்பாலும் தொழுகைகளில், நஃபில்களில் அழுது கொண்டு இருந்தார்.அவர்கள் மேலும் கூறினர்: டாக்டர் ஸாஹிபை அவர்களை கைது செய்ததற்கு காரணம் என்னவென்றால்,டாக்டர் ஸாஹிபிற்கு பிரிட்டனிலிருந்து பணம் வருகின்றது என்றும் அவர்கள் ஏமன் நாட்டில் மிலிட்டியா படையை தயார் செய்வதற்காக அதனை செலவு செய்கின்றார்கள் என்று சில அஹ்மதிகள் செய்தி அனுப்பி இருந்தார்கள்.

விசாரணையில் இது பொய்யான குற்றச்சாட்டு என்று தெரிய வந்தது. நாங்கள் அவரை விடுதலைச் செய்யவே இருந்தோம். அதற்குள் பதற்றத்தின் காரணமாக அன்னாரின் உடல்நலம் பாதிக்கப்பட்டு விட்டது.

எவ்வாறு இருப்பினும், இது அவர்களுடைய கூற்றாகும். இதனை அவர்கள் மர்ஹூமின் மனைவியிடம் கூறியிருக்கின்றனர். எவ்வாறு இருப்பினும், உயர் அதிகாரிகளின் செயல்பாடு வேறொன்றாக இருக்கின்றது. மேலும் அவர்களுக்கு கீழ் பணி செய்யக் கூடியவர்களோ இன்னும் தான்தோன்றித்தனமாக நடக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களுடைய கடுமையின் காரணமாக அன்னாருடைய உடல்நலத்தில் இந்த பாதிப்பு ஏற்பட்டு இருக்கின்றது.

எவ்வாறு இருப்பினும் மர்ஹூமின்

சகோதரர் நாஸிர் ஸூபூத்தி ஸாஹிப் அன்னாருடைய வாழ்க்கையைப் பற்றி கூறுகின்றார்கள்: என்னுடைய சகோதரர் டாக்டர் மன்ஸூர் மிகவும் கருணையுள்ளவர்; மேலும் நன்மையை நாடக் கூடிய சகோதரர் ஆவார். படிப்பில் மிகவும் புத்திசாலியாக இருந்தார். நாட்டில் முதல் பத்து மாணவர்களில் ஒருவராக இருந்தார். அவருக்கு அரசாங்கம் சார்பாக பரிசும் வழங்கப்பட்டிருந்தது. ஐவேளை தொழுகையையும், நஃபில் தொழுகைகளையும் தொழக் கூடியவர் ஆவார். தொழுகைக்குப் பிறகு தொடர்ச்சியாக திருக்குர்ஆன் ஓதக் கூடியவரும், சந்தா சரியாக செலுத்தக் கூடியவரும் ஆவார். உறவினர்களைக் காட்டிலும் மற்றவர்களுக்கு மருத்துவம் செய்வார்; உதவி செய்வார். நோயாளிகளுடன் எப்போதும் சிரித்தவாறு பேசுவார். ஏழை நோயாளிகளிடம் பணம் வாங்க மாட்டார். மருந்தும் கொடுப்பார். மேலும் யாருக்காவது மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் உதவியும் செய்வார். ஏழைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய நேரிட்டால் தம்முடைய சம்பளத்திலிருந்து தொகையை விட்டுக் கொடுப்பார்.

பிறகு கூறுகின்றார்கள்: எங்களது அண்டை வீட்டுக்காரர்கள் யாராவது நோய்வாய்ப்பட்டால் எங்களது சகோதரரிடம் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்வார்கள். மேலும் அவர் வேறு நகரத்திற்கு சென்று விட்டார் என்றால் அண்டை வீட்டார்கள் மிகவும் கவலைக்குள்ளாகி விடுவார்கள். பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். அவர்களை அன்னார் ஹஜ்ஜும் செய்ய வைத்தார்கள்.

டாக்டர் ஸாஹிப் அவர்களின் தாயார் ஷாருக் நஸ்ரீன் ஸாஹிபா கூறுகின்றார்கள்: நான் கருவுற்று இருந்த அந்த காலத்தில் ஒரு கனவுக் கண்டேன். ரப்வாவைச் சேர்ந்த ஒரு நல்ல பெண்மணி; அவர்களுடைய பெயர் ஸைனப் ஆகும். என்னுடைய தாயாரை மடியில் அமர்த்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வருகின்றார்கள் என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்களைத் தேடி நான் இங்கும், அங்கும் தேடினேன். ஆனால், எவரும் தென்படவில்லை. அதன் பிறகு கண் விழித்து விட்டேன். டாக்டர் ஸாஹிப் சிறுவராக இருக்கும்போது தப்லீஃக் செய்வதற்கான ஆர்வம் இருந்தது. பள்ளிக் கூடத்தில் மார்க்க வகுப்பு நடத்தும் ஆசிரியருக்கு அஹ்மதிய்யத்தைக் குறித்து தப்லீஃக் செய்வார். ஆசிரியரும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அவருடைய பேச்சைக் கேட்பார்கள்.

அன்னாருடைய மகன் அஹ்மத் ஸூபூத்தி ஸாஹிப் ஜெர்மனியில் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஒருபோதும் என்னை ஏசி பேசியது கிடையாது. ஒரேயொரு முறை ஒரு அடி எனக்கு நினைவிருக்கின்றது. நான் 13 வயதுடையவனாக இருந்தேன். அப்போது ஜமாஅத்தான தொழுகையை தொழ மாட்டேன் என்று மறுத்து விட்டேன். எனவே என்னை சிறிது அடித்தார்கள். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. கூறுகின்றார்கள்: எனது தந்தை அவர்கள் எப்போதும் கஷ்டத்தின் தருணத்தில் துஆ செய்யுமாறு என்னிடம் கூறிவந்தார்கள். அதன்படி தாமும் நடந்து வந்தார்கள். நான் அவர்களை ஸஜ்தாவில் அழுது பார்த்துள்ளேன். பள்ளிக்கூடத்தின் நாட்களில் குழந்தையாக இருந்த அந்தப் பருவத்தில் ஃபஜ்ர் வேளையில் ஜமாஅத்தாக தொழுவதற்காக எங்களை எழுப்புவார்கள். ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவார்கள். அதன் பிறகு திருக்குர்ஆன் திலாவத் செய்வார்கள். அறுவை சிகிச்சைப் பிரிவில் பி.எச்.டி செய்துள்ளார்கள். அது மட்டுமின்றி உர்தன் சென்றிருந்தார்கள். அங்கு ஐந்து வருடம் தங்கினார்கள். கூறப்படுகின்றது: நானும் அன்னாருடன் சென்றிருந்தேன். அங்கு ஜுமுஆ தொழுகைக்கான பள்ளிவாசல் இருக்கின்றது; அல்லது சென்டர் இருக்கின்றது. அது ஒரு மணிநேரம் பயணத் தொலைவில் இருந்தது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அங்கு வாகனத்தை ஓட்டிச் செல்வார்கள். புத்தகம் வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். ஜமாஅத் நூல்களை அதிகமாக படிப்பார்கள். உர்தனில் இருந்து திரும்பி வந்த அந்தத் தருணத்தில் பை மிகவும் கனமாக இருந்தது. அன்பளிப்புகள் வாங்கி வந்திருப்பதாக நான் நினைத்தேன். பெற்றோர்கள் வாங்கி வருவதை அறிய வேண்டும் என்ற ஆர்வம் குழந்தைகளுக்கு இருக்கும் அல்லவா? ஆனால், பையை திறந்துப் பார்த்தபோது, அன்பளிப்புகள் இருக்கவில்லை ; மாறாக தப்ஸீரே கபீரின் அரபி மொழியாக்கம் மற்றும் வேறு சில ஜமாஅத் நூல்கள் இருந்தன. உறவினர்களை சந்திப்பதற்காக செல்வார்கள்; அவர்கள் அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தாலும் சரியே! கூறுகின்றார்கள்: என்னையும், எனது தாயாரையும் உடன் அழைத்துச் செல்வார்கள். நான் இது தொடர்பாக அன்னாரிடம் கேட்டபோது, அதாவது அஹ்மதி அல்லாத உறவினர்களை சந்திப்பது கட்டாயமா என்ன? என்று கேட்டபோது, கூறினார்கள்: உறவுகளை பேணுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். இரத்த உறவுகளை பேணவில்லையென்றால் அல்லாஹ் வெறுப்படைந்து விடுகின்றான் என்றும் கூறினார்கள். ஸூபூத்தி ஸாஹிப் கூறினார்கள்: மர்ஹூம் அவர்கள் எப்பொழுதும் நல்லொழுக்கத்தைக் கொண்டவராகவும், புன்சிரிப்புடன் அன்பு கொள்ளக் கூடிய நபராகவும், ஒத்துழைப்பு நல்கக் கூடியவராகவும், தூய வள்ளல்த் தன்மை கொண்டவராகவும், கருணை கொண்டவராகவும் மேலும் நல்லறிவு படைத்தவராகவும் இருந்தார்கள. எப்பொழுதும் கல்வியில் முன்னோடியாக இருந்தார்கள். முழு ஏமன் நாட்டிலும் மிகவும் பிரபலமான மருத்துவராக இருந்தார்கள். மக்கள்த் தொண்டிலும், அஹ்மதிய்யத்தின் தொண்டிலும் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். அஹ்மதிகள் மற்றும் அஹ்மதி அல்லாதவர்கள் என அனைவரும் விரும்பக் கூடியவராக இருந்தார்கள். மேலும் அனைவருக்கும் பெரிய துக்கம் ஏற்பட்டுள்ளது. அன்னாருடைய மரணத்தினால் அஹ்மதி அல்லாத மக்களுக்கு பெரும் துக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜமாஅத்தைச் சாராத மக்களின் கருத்துகளும் இருக்கின்றன. ஏமனின் டாக்டர்களின் யூனியன் இவ்வாறு அறிக்கை கொடுத்துள்ளது: பொது மருத்துவ ஆலோசகர் டாக்டர் மன்ஸூர் ஸூபூத்தி ஸாஹிப் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று துக்கத்துடனும், வருத்தத்துடனும் அறிவிக்கப்படுகின்றது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

பின்னர் இதே மெடிக்கல் கவுன்சில் மக்கள் கூறுகின்றனர்: அன்னாரின் இரகசியங்கள் நிறைந்த மரணத்தினால் மருத்துவத் துறை வட்டாரத்தில் பெரும் துக்கமும், நிம்மதியின்மையும் பரவியுள்ளது. இப்போது வரை கிடைக்கக் கூடிய விவரங்களின் அடிப்படையில் டாக்டர் ஸாஹிப் அவர்களின் உடல்நலம் கைது செய்யப்படுவதற்கு முன்பு வரை நல்ல ஆரோக்கியமாக இருந்துள்ளது. அவரை கைது செய்ததிற்கான காரணமும் கூறப்படவில்லை. மேலும் இரண்டு வாரம் வரை அன்னாரை எங்கு வைத்திருந்தார்கள்? என்பதும் தெரியவில்லை. மரணத்திற்கு ஒருநாள் முன்பு தான் மிகவும் மோசமான நிலையில் பொது வெளிக்கு கொண்டு வந்தனர். அன்னாருடைய அஹ்மதி அல்லாத நண்பர்கள் சமூக வலைதளங்களில் எழுதியுள்ளனர். ஜமாஅத்தைச் சாராத காலித் அதீ என்ற ஒரு மருத்துவர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஸனா மருத்துவ மனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் முதன்முறையாக பணிபுரியும் தருணத்தில் நான் அன்னாரைக் கண்டேன். அங்கு பல மருத்துவர்கள் ஓர் இளைஞராக இருக்கக் கூடிய மருத்துவரை சுற்றி நிற்பதை நான் கண்டேன். நான் கேட்ட போது ஒரு நண்பர் கூறினார்: இவர் மன்ஸூர் ஸூபூத்தி ஆவார். இவர் பொது மருத்துவ ஆலோசகர் ஆவார். எல்லா மருத்துவர்களை விடவும் அதிகம் உழைக்கக் கூடியவரும், ஒத்துழைப்பு நல்கக் கூடியவரும் ஆவார். எல்லா மருத்துவர்களும், மருத்துவ மாணவர்களும் இவருடன் டியூட்டி கொடுப்பதை விரும்புகின்றனர். ஏனெனில், அனைவருக்கும் மிக அதிகமான விஷயங்களை கூறவேண்டும்; புரிய வைக்க வேண்டும் என்பதற்காக அன்னார் முயற்சிகளை மேற்கொள்வார்கள். அன்னாருக்கு செல்வத்தின் மீது எந்த ஆசையும் கிடையாது; அதேபோன்று பதவியின் மீதும் எந்த ஆசையும் கிடையாது; புகழ்ச்சியின் மீதும் எந்த ஆசையும் கிடையாது. மிகவும் அமைதியான இயல்பு படைத்தவர்கள் ஆவார்கள். தம்முடைய உடலை நன்கு கவனித்துக் கொள்ளக் கூடியவரும், எப்பொழுதும் புன்முறுவல் செய்யக் கூடியவரும் ஆவார். மிக உயர்வான ஒழுக்கங்களை கொண்டவராகவும் இருந்தார். தற்பெருமை உலகத்தின் நேசம் பல மைல்கள் தூரம் அவரை விட்டு விலகியிருந்தன.

ஒரு நண்பர் எழுதுகின்றார்: அன்னாருடைய மரணம் ஏமன் நாட்டிற்கு மாபெரும் இழப்பாகும். ஏமன் ஒரு நல்ல மனிதரை இழந்து விட்டது. மிகவும் தூய உள்ளம் படைத்தவர் ஆவார். அவர் தமது வாழ்க்கையை நோயாளிகளுக்கு தொண்டு செய்வதில் கழித்திருக்கின்றார். மற்றொரு நண்பர் எழுதுகின்றார்: டாக்டர் மன்ஸூர் அவர்களின் கையில் ஷிஃபா (குணம்) இருந்தது. அவர் நல்லொழுக்கம் படைத்தவராக இருந்தார். தெற்கு ஏமனில் அனைத்துப் பத்திரிகைகளிலும் அன்னாருடைய மரணச் செய்தி பல்வேறு தலைப்புகளின் கீழ் வெளியாகியுள்ளன. உதாரணமாக, ஒரு பிரபலமான பத்திரிகை இவ்வாறு எழுதுகின்றது; மிகவும் பிரபலமான மருத்துவரின் மரணம்; மிகவும் பிரபலமான மருத்துவர் கடத்தப்பட்டார் போன்ற செய்திகள் வந்துள்ளன. ஒருவர் எழுதியுள்ளார்: எவ்வாறு இருப்பினும், அன்னார் மூலமாக அஹ்மதிய்யத்தின் பெயர் பெருமளவில் பரவியுள்ளது. மேலும் தப்லீஃக்கிற்கான வழியாகவும் ஒருவேளை ஆகலாம்;

அல்லாஹ் அவ்வாறு செய்வானாக. மேலும் அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அன்னாரின் உறவினர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.மேலும் நிலைமைகளை நல்லதாக ஆக்குவானாக. மேலும் மீதமுள்ள சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். தற்போது அங்கு சிறிய ஜமாஅத்தே இருக்கின்றது. அல்லாஹ் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் அனைத்து ஆண்களும் விடுதலையாகுவதற்கான வாய்ப்பை உருவாக்குவானாக!

இரண்டாவது நற்குறிப்பு கபாபீர் ஜமாஅத்தின் அமீர் ஷரீஃப் ஓதே ஸாஹிப் அவர்களின் தந்தையார் மதிப்பிற்குரிய ஸலாஹூத்தீன் முஹம்மது ஸாலிஹ் அப்துல் காதிர் ஓதே ஸாஹிப் அவர்களுடையதாகும். ஜனவரி 31-ம் தேதியன்று இதய வலியால் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அறுவை சிகிச்சையின்போதே சுமார் 85-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்கள். தமக்குப் பின்னால் மனைவியையும், மூன்று மகன்களான ஷரீஃப் ஓதே, முனீர் ஓதே, அமீர் ஓதே ஆகியோரையும் மகள் மனால் ஓதேவையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாருக்கு பேரன் பேத்திகள் உள்ளனர். மன்ஸூர் முனீர் ஓதே மற்றும் பஷீருத்தீன் மஹ்மூத் ஓதே ஆகியோர் அன்னாரின் இரண்டு பேரன்கள் ஆவர். இவர்களில் ஒருவர் இங்கிலாந்து ஜாமிஆவிலும் மற்றொருவர் கனடா ஜாமிஆவிலும் படித்து வருகின்றனர்.

ஷரீஃப் ஓதே ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் அவர்களின் பாட்டனார் அல்ஹாஜ் ஸாலிஹ் அப்துல் காதிர் ஓதே ஸாஹிப் அவர்கள் பாலஸ்தீனத்தின் ஆரம்ப காலத்து அஹ்மதிகளில் ஒருவர் ஆவார்கள். அன்னார் 1928-ல் பைஅத் செய்த பிறகு அன்னாருடைய முப்பாட்டனார் அப்துல் காதிர் ஓதே ஸாஹிப் அவர்களும் பைஅத் செய்தார்கள். சிறிது காலத்திற்கு பிறகு அன்னாருடைய தந்தையார் முஹம்மது ஓதே ஸாஹிப் அவர்களும் பைஅத் செய்தார்கள். இவ்வாறு மர்ஹூமின் தந்தையார், பாட்டனார் மற்றும் முப்பாட்டனார் என அனைவரும் அஹ்மதிகள் ஆவர். மர்ஹூம் 1939-ல் பிறந்தார்கள். மேலும் இவர்கள் பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். இவர்களுடைய வயது 14ஆக இருந்தபோது கடும் குளிராக இருந்த ஒரு நாளில் இவர்கள் வெளியே ஏதோ ஒரு வேலையின் நிமித்தமாக சென்றிருந்தார்கள். குளிர் ஆடைகளை சரிவர அணியவில்லை. இதனால் உடல் உறைந்து விட்டது. சுயநினைவு இழந்து விழுந்து விட்டார்கள். வெகுநேரம் தேடிய பிறகு அன்னாரைத் கண்டுபிடித்து மருத்துவமனையில் சேர்த்தார்கள். மிகவும் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தார். இவர் உயிர் பிழைப்பது அற்புதம் ஆகும்; ஒருவேளை இவர் உயிர் பிழைத்து விட்டாலும் கூட இவருக்கு குழந்தைபேறு ஒருபோதும் இருக்காது என்று மருத்துவர்கள் கூறினார். எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு அப்போது அங்கு முரப்பியாக இருந்த சவ்த்ரி முஹம்மது ஷரீஃப் ஸாஹிப் துஆவிற்காக கடிதம் எழுதினார்கள். அதற்கு பிறகு அருளாக அன்னாருக்கு சுகத்தை வழங்கினான். திருமணம் நடைபெற்றது. அல்லாஹ் சந்ததிகளை வழங்கினான். இன்று மகன்களும்.ஒரு மகளும் கூட இருக்கின்றார். மர்ஹூம் தமது தந்தையைப் போன்று முபல்லிஃக்குகளுக்கு தொண்டாற்றுவதில் முன்னோடியாக இருந்தார்கள். இதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தமது உடலாலும், உள்ளத்தாலும் தொண்டற்றி வந்தார்கள். மேலும் இதற்கான சான்றை இரங்கலுக்காக வந்த ஒவ்வொரு நபரும் வழங்கியுள்ளார். ஷரீஃப் ஓதே அவர்கள் கூறுகின்றார்கள்: விருந்தினர்களுக்கு அன்னாருடைய உபசரிப்பின் பழக்கம் ஏற்பட்டு விடும். விருந்தினர்கள் நாங்கள் அன்னாரிடம் செல்கின்றோம் என்று கூறுவார்கள். மேலும் உபசரிப்பை பெறுவார்கள். ஒரு பாதிரியார் சந்திப்பிற்காக வரவிருந்தார். அவர் கூறினார்: தற்போது உங்களது தந்தை இருக்கின்றாரா?. அதற்கு, தற்போது அன்னார் வெளியில் சென்றுள்ளார்கள் என்று கூறினார்கள். அப்போது, அன்னார் வந்ததற்கு பிறகு நான் வருகின்றேன்; அன்னாரின் உபசரிப்பில் நான் மிகவும் இன்பமடைகின்றேன் என்று அந்த பாதிரியார் கூறினார்.

மர்ஹூம் ஏழைகள், தேவையுடையவர்கள் போன்றவர்களை கவனித்து வந்தார்கள். அவர்களுடைய செலவீனங்களை செய்து வந்தார்கள். சில புதிதாக பைஅத் செய்தவர்களின் உறவினர்கள் அவர்களின் தொடர்பை துண்டித்து விட்டனர்; அல்லது அந்த புதிய அஹ்மதிகள் கபாபீரில் வந்து வசிக்கத் துவங்கிவிட்டனர். அப்படிப்பட்ட அனைவருக்கும் மர்ஹூம் பரிவு கொண்ட ஒரு தந்தையயைப் போன்று இருந்தார்கள். அவர்களுடைய மரணத்தையொட்டி ஒரு பெண்மணி கூறுகின்றார்; எனது கணவர் தமது அதிகமான நேரத்தை மர்ஹூம் அவர்களுடன் கழித்து வந்தார்கள். இனி நான் யாருடன் செல்வது? என எனக்குப் புரியவில்லை என்று எனது கணவர் கூறுகின்றார்.

பின்னர் ஷரீஃப் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: தந்தையார் தமது செயல்களின் மூலம் எங்களுக்கு தர்பிய்யத் வழங்கி வந்தார்கள். விஷயங்களை நாவினால் புரிய வைப்பதற்கு பகரமாக தமது செயல்களால் எங்களுக்கு புரிய வைத்து வந்தார்கள். இவ்வாறு இந்த பணியை செய்யுங்கள் என்று செய்து காட்டி வந்தார்கள். அவர்களுக்கு நூல் வாசிப்பு மிகவும் பிடித்த பழக்கமாக இருந்தது. ஜமாஅத் நூல்களில் ஏதாவது ஒன்றை அன்னார் படித்துக் கொண்டிருப்பார்கள். அதனால் அன்னாருடைய அறிவு விசாலமானதாக இருந்தது. கூறுகின்றார்கள்: அன்னார் முதியவராக இருந்தபோதும், அன்னாருக்கு எங்களுடைய உதவி தேவைப்படவில்லை. மாறாக அன்னார் எங்களுக்கு உதவி செய்து வந்தார்கள். தமது மகன்கள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர் என்பதில் அன்னார் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள்.

அன்னாருடைய பேத்தி டாக்டர் யாஸ்மீன் கூறுகின்றார்கள்: நான் சில ஆண்டு காலமாக என்னுடைய வீட்டில் வசித்து வருகின்றேன். நான் இதனைக் கண்டுள்ளேன்; என்னுடைய தாய் வழிப் பாட்டனார் ஐவேளை தொழுகை மற்றும் தஹஜ்ஜுத் தொழுகையை நிலைநாட்டக் கூடியவராகவும் இருந்தார்கள். மேலும் வெகு நேரத்தை ஜமாஅத்தின் பள்ளிவாசலிலும், மர்கஸிலும் கழித்து வந்தார்கள். விருந்தினர்களுக்கு உணவு சமைப்பது மற்றும் தொண்டாற்றுவது, மர்கஸில் பராமரிப்பு பணிகளை செய்தல் போன்றவை அன்னாருடைய வழக்கமாக இருந்தது. ஜமாஅத் நூல்களை படிப்பதை அன்னார் மிகவும் விரும்பக் கூடியவராக இருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால் மரணமடைந்த அந்த நாளில் கூட அன்னாரின் படுக்கையில் ஒரு நூல் திறந்து வைக்கப்பட்டிருந்தது. கூறுகின்றார்கள்: வீட்டில் ஏதாவது பாராமரிப்பு பணி இருந்தால் மர்ஹூம் நானா நானியிடம் கூறுவார்கள்: எங்களுக்கு இது தேவையில்லை. ஏனெனில் நாங்கள் விரைவாக மரணமடைந்து விடுவோம்; எனவே இதில் ஆகும் செலவுகளை தேவையுடையவர்களுக்காக பிரித்து கொடுத்து விடுங்கள்.

அன்னாரின் இதய அறுவை சிகிச்சையின் நேரத்தில் மருத்துவர் பார்த்தபோது, அன்னாரின் இதயம் மிகவும் பலவீனமாக இருந்தது. இன்னும் கூறப்போனால் அதன் இரத்த நாளங்கள் அடைத்திருந்தன. இப்போது வரை இவர் எவ்வாறு சுற்றி திரிகின்றார்? என்று அந்த மருத்துவர் மிகவும் வியப்பிற்குள்ளானார். எவ்வாறு இருப்பினும், நான் நடந்து சுற்றித் திரியும் நிலையிலேயே எனக்கு மரணம் வரவேண்டும் என்பது அன்னாரின் துஆவாக இருந்தது. இவ்வாறு கடைசி நாள் வரை நடமாடிக் கொண்டே எவருடைய தேவையும் இன்றி அன்னார் இருந்தார்கள்.

ஷரீஃப் ஓதே ஸாஹிப் கூறுகின்றார்கள்: தந்தையார் மற்றவர்களுக்கு மனம் திறந்து செலவு செய்வார்கள். ஒருநாள் ஒரு வயது முதிர்ந்த உறவினர் அன்னாரிடம் உதவி செய்யும்படி கூறினார். அப்போது, தந்தையார் தமது சட்டைப் பையில் இருந்த அனைத்தையும் எடுத்து அவரிடம் கொடுத்து விட்டார்கள். மவ்லானா மர்ஹூம் ஃபஸ்ல் இலாஹி பஷீர் ஸாஹிப் கபாபீரின் முபல்லிஃக் ஆக இருந்தார்கள். அன்னார் மர்ஹூமிடம் கபாபீர் பள்ளிவாசலுக்காக சந்தா கொடுக்கும்படி கூறினார்கள். அப்போது எங்கிருந்தோ அன்னாருக்கு ஒரு பெரும் தொகை வந்திருந்தது. மர்ஹூம் அந்த பெரும் தொகையை அப்படியே எடுத்து கொடுத்து விட்டார்கள். ஓர் இளைஞர் எழுதுகின்றார்: அன்னாருக்கு குடல் இறக்கத்திற்கான அறுவை சிகிச்சை நடந்தது. அப்போது அன்னாருடைய உடல் நிலையை விசாரித்தபோது அன்னாருக்கு வலி இருந்தது. எனவே நான் அன்னாரிடம், நீங்கள் ஏன் இங்கு பணி செய்கின்றீர்கள்? உங்களுடைய நிலையோ இப்படி இருக்கும்போது நீங்கள் ஏன் இங்கு பணி செய்ய வேண்டும்? என்று கேட்டேன். கூறுகின்றார்கள்: சரிதான்! ஆனால், சிறிய வேலை தான்; சில பொருட்களை இங்கிருந்து எடுத்து அங்கு வைக்கின்றேன். மேலும், ஒரு கதவு உடைந்து இருக்கின்றது.அதன் பராமரிப்பு பணிகளை செய்கின்றேன்; அவ்வளவுதான்! என்று மர்ஹூம் கூறினார்கள். அப்போது, உங்களுக்கு அறுவை சிகிச்சை நடந்துள்ளது. நீங்கள் இவ்வளவு கடுமையான பணிகளை செய்யக் கூடாது என்று நான் கூறினேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: இவை இல்லாமல் என்னால் இருக்க முடியாது. ஜமாஅத்தினுடைய தொண்டு தான் என்னுடைய வேலை ஆகும்.

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஸைஃபுத்தீன் அபூ அஸது எழுதுகின்றார்: ஸலாஹுத்தீன் ஸாஹிப் ஓதே அவர்களிடம் நன்மை மற்றும் நல்லவற்றையே கண்டிருக்கின்றோம்.நாங்கள் கபாபீரில் தங்கியிருந்த தருணத்தில் அன்னாரை ஜமாஅத்தின் மீது அதிக பற்றுக் கொண்டவராகக் கண்டோம். மிகவும் நேசிக்கக் கூடியவர்; ஒவ்வொருவருக்கும் உதவி செய்யக் கூடியவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் அமீருடைய தந்தையாக இருந்தபோதிலும் விருந்தினருக்கு தொண்டு செய்யக் கூடியவராக இருந்தார்கள். அன்னார் ஜமாஅத்தின் அமீருடைய தந்தை ஆவார்கள் என்று எனக்கு வெகு காலத்திற்கு பிறகு தான் தெரிய வந்தது. எனக்கு அந்த சிந்தனையே வந்ததில்லை. அன்னார் எவ்வாறு தொண்டாற்றினார்கள் என்றால் எனக்கு அந்த சிந்தனையே வரவில்லை. மிகவும் பணிவுடன் இருப்பார்கள். அவர் இன்னாருடைய தந்தை ஆவார் என்று ஒருவர் என்னிடம் கூறினார்.

டாக்டர் அய்மன் அல்மால்கீ கூறுகின்றார்கள்:ஃபஜ்ர் தொழ வைப்பார்கள். பின்னர் நேராக விருந்தினர் இல்லத்திற்கு சென்று விடுவார்கள். எந்தக் களைப்புமின்றி இரவு வரை பணி செய்வார்கள். வாரத்தின் ஏழு நாட்களும் அன்னாருடைய பணி இவ்வாறே இருந்தது. கிலாஃபத்தின் மீது அன்பு கொண்டவராகவும், மேலும் ஜமாஅத் அமைப்பை மிகவும் மதிக்கக்கூடியவராகவும் இருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், மகன் அமீர் ஆவார். ஆயினும், அமீரைக் கண்டதும் எழுந்து நின்று விடுவார்கள். ஜமாஅத்தினுடைய தொண்டு மற்றும் தர்ப்பியத்தை மேலும் ஜமாஅத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் வாழ்வின் இறுதிவரை முழு ஆர்வத்துடனும், உத்வேகத்துடன் ஈடுபட்டிருந்தார்கள். இவ்வாறான ஆர்வத்திற்கான உதாரணம் மக்களிடம் மிகக் குறைவாகவே தென்படுகின்றது. நான்கு கலீஃபாக்களின் காலகட்டத்தையும் அன்னார் கண்டிருக்கின்றார்கள். மேலும், கிலாஃபத் தொடர்பாக உள்ளத்தை கவரக் கூடிய வகையில் பேசுவார்கள்.

முஹம்மது ஆலாவனா ஸஹாபி எழுதுகின்றார்கள்: 20 வருடங்களுக்கு முன்னர் நான் பைஅத் செய்திருந்தேன்.மேலும் அதன் பிறகு கபாபீர் வந்தேன். அங்கு மர்ஹூம் மிகவும் அன்புடனும், பண்புடனும் சந்திப்பார்கள். நான் அவரை பார்த்துள்ளேன். அன்னார் முதிய வயதுடையவராக இருந்தபோதிலும் எந்த அளவிற்கு பற்றுடன் பணி செய்தார்கள் என்றால் அந்த விஷயங்களை இளைஞர்களிடம் கூட நம்மால் பார்க்க முடியவில்லை. மிகவும் கருணை கொண்ட பரிவு காட்டக் கூடியவராக அன்னார் இருந்தார்கள்.

நமர் அஜ்வஃ ஸாஹிபா கூறுகின்றார்கள்: நான் அல்கலீல் நகரத்தைச் சேர்ந்தவள் ஆவேன். நான் இரண்டு குழந்தைகளுடன் இங்கு வந்தேன். என்னிடம் எந்த வீடும் இல்லை. மர்ஹூம் என்னிடம் கூறினார்கள்: நீங்கள் உங்களது இரண்டு மகள்களையும் எங்களிடம் விட்டு விடுங்கள்; நீங்கள் விருந்தினர் இல்லத்தில் தங்கிக் கொள்ளுங்கள். ஆக, இரண்டரை மாதம் வரை அன்னார் எனது குழந்தைகளை கவனித்துக் கொண்டார்கள். மேலும் எனது பிள்ளைகளுக்கான உணவு மற்றும் இதரத் தேவைகளை அன்னார் நிறைவேற்றினார்கள்.

கூறுகின்றார்கள்: அன்னார் எனக்கு கருணை கொண்ட ஒரு தந்தையைப் போன்றவர் ஆவார்கள். அன்னாரின் மரணம் எனக்கு எப்படி உள்ளது என்றால், உடலிலிருந்து ஆன்மா சென்றுவிட்டது.

கபாபீர் முரப்பி ஷம்ஸூத்தீன் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: பள்ளிவாசல் மற்றும் மிஷன் ஹவுஸின் எந்தப் பழையப் பொருளையும் வீணாக்க விரும்ப மாட்டார்கள். மாறாக, அந்தப் பொருட்களை பராமரிப்பு செய்து பயன்பாட்டிற்கு தகுதிவாய்ந்ததாக ஆக்கிவிடுவார்கள்.

இந்த சிக்கனத்தின் நடைமுறை அவசியம் ஆகும். மற்ற பகுதிகளிலும் இவ்வாறு இருக்க வேண்டும்.

சில நேரத்தில் நான் பார்த்துள்ளேன்; பள்ளிவாசலுக்கு யாராவது உதவியை நாடியவாறு வந்தால் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வார்கள். மேலும் அவர்களுடன் அமர்ந்து அவர்களுக்கு உணவு பரிமாறுவார்கள்.

மர்ஹூமின் பேத்தி ரானா ஓதே ஜஹாங்கீர் ஸாஹிபா ஆவார். கூறுகின்றார்கள்: நான் எப்பொழுதும் எனது பாட்டனாரை அதிகாலையில் எழுவதை பார்த்திருக்கின்றேன். மேலும் ஐவேளை தொழுகைகளை முறையாக தொழு வந்தததைக் கண்டிருக்கின்றேன். கூறுகின்றார்கள்: எனது பாட்டனார் ஏழைகளை எப்போதும் கருத்தில் கொண்டிருந்தார்கள். நமது பணத்தை நமக்கு செலவு செய்ய வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால், அன்னாரோ இதற்கு பகரமாக தமது பணத்தை தேவையுடையோருக்கு செலவு செய்வதை தமக்கு விருப்பமானதாக கூறி வந்துள்ளார்கள். எப்பொழுதும் இவ்வாறு செய்து வந்தார்கள். இறைவன் மீது உறுதியான நம்பிக்கை இருந்தது. கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு இருந்தது.

அல்லாஹ் அன்னாருடன் பரிவுடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அன்னாருடைய சந்ததிகளுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக. மேலும் அன்னாருடைய நன்மைகளை தொடரச் செய்வதற்கு அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு, ரப்வாசை சேர்ந்த முரப்பி கிராமத்துல்லாஹ் காதிம் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ரைஹானா ஃபர்ஹத் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜனவரி 29-தேதியன்று மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களுடைய குடும்பத்தில் இவர்களுடைய முப்பாட்டனார் குஜ்ராத் மாநிலம் பலானியைச் சேர்ந்த முன்ஷீ ஜலாலுத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக தோன்றியது. அன்னாருடைய பெயரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஸமீமா அஞ்சாமே ஆத்தம் என்ற நூலில் 313 ஸஹாபிகளின் பெயர் வரிசையில் முதல் பெயராக எழுதியுள்ளார்கள். மர்ஹூமா தமக்குப் பின்னால் கணவரை மட்டுமின்றி ஒரு மகன் மற்றும் மூன்று மகன்களையும், ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமாவின் ஒரு மகனான இஹ்ஸானுல்லாஹ் ஸாஹிப் ஸ்பெயினில் முரப்பியாக இருக்கின்றார்கள். தப்லீஃக் களத்தில் இருந்ததனால் அன்னாரால் ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. மேலும் வேறு சில காரணங்களும் உள்ளன. மர்ஹூமாவின் கணவரான கிராமத்துல்லாஹ் காதிம் ஸாஹிப் அவர்களும் வாழ்வை அர்ப்பணித்த முரப்பி ஆவார்கள். அன்னாருடைய மருமகன் ஆஸிஃப் பட் ஸாஹிப்; அவரும் முரப்பி ஆவார்கள். தற்போது தன்ஸானியாவில் தொண்டாற்றும் நற்பேறை பெற்று வருகின்றார்கள்.

மர்ஹூமாவின் ஒரு மகன் இஹ்ஸானுல்லாஹ் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: எங்களுக்காக எப்போதும் துஆவிற்கான ஒரு நிழலை அன்னார் உருவாக்கி வைத்திருந்தார்கள். உருக்கத்துடன் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். மேலும் பணி செய்யும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் கலீஃபாக்களுடைய துஆக்களைக் கொண்ட கவிதைகளை முணுமுணுத்துக் கொண்டும் இருப்பார்கள். இவ்வாறு அன்னாரை சுற்றி இருக்கக் கூடிய பிள்ளைகள் அந்தக் கவிதைகளை மனனம் செய்து விடுவார்கள். சந்தா மற்றும் ஜமாஅத்திற்கான தொண்டுகளை தொடர்ந்து செய்து வந்தார்கள். மர்ஹூமா உடல் ஆரோக்கியத்துடன் இருந்தவரை ஜமாஅத் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்குபெற்று வந்தார்கள். மிகவும் நன்றி செலுத்தக் கூடியவராகவும், சிக்கனத்தை கைகொள்பவராகவும், பொறுமையை மேற்கொண்டு நன்றி செலுத்தக் கூடியவராகவும் இருந்தார்கள். அஹ்மதிய்யத்தின் மீது பெருமிதம் கொண்ட பெண்மணியாகவும் இருந்தார்கள். அன்னாருடைய மகள் நுஃமானா நுஸ்ரத் கூறுகின்றார்கள்: நன்றி செலுத்தக் கூடிய பண்பு மிக அதிகமாக இருந்தது. யாராவது ஒருவர் புகழும் விதமாக ஏதாவது கூறினார் என்றால், அதாவது ஒரு மகன்தான் இருக்கின்றார் ; அவரை ஏன் மார்க்கத்திற்கு அர்ப்பணித்து விட்டீர் என்று ஒருவர் கூறினால்; அப்பொழுது மிகவும் நன்றி கூறியவாறு கூறுவார்கள்; நான் இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவேன். நானோ அல்லாஹ்வுக்காக ஒன்று கொடுத்தேன்; ஆனால் அவனது பல அருட்கள் எனக்கு திரும்பி கிடைத்துள்ளன. அதாவது தம்முடைய பேரக் குழந்தைகளைக் குறித்து கூறுவார்கள். கூறுகின்றார்கள்: அனைத்து அஹ்மதிகளுமே வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆவர்.

ரப்வாவில் பிறந்தவர்; ரப்வாவின் முன்னேற்றத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். தைரியசாலியான பெண்மணியாகவும், நேர்மையான பெண்மணியாகவும் அறியப்பட்டார்கள். சிக்கனமான மற்றும் ஒழுக்கமான நடைமுறையைக் கையாண்டு வாழ்வை கழிப்பவராக இருந்தார்கள். எவ்வாறு நன்றி செலுத்தக் கூடியவராக இருந்தார்கள் என்றால் அதிகமான வசதிகளும்,மனநிறைவும் அன்னாருக்கே இருந்தது போன்று இருந்தது. எந்த முறையீடுகளையும் வைத்ததில்லை. முரப்பியின் வருமானம் குறைவாக இருந்தபோதிலும் கூறிவந்தார்கள்: என்ன கிடைத்து வந்ததோ அதில் இருக்கும் அருட்கள் வேறு எங்கும் கிடைப்பதில்லை.

மகனுக்கு ஜமாஅத்தின் வழக்கு தொடர்பாக 2017-ம் ஆண்டில் ஹிஜ்ரத் செய்ய வேண்டியது நேர்ந்தது. எவ்வாறு என்றால், அவருக்கு வேறு சில காரணங்கள் உள்ளன என நான் கூறியது போன்று பாகிஸ்தான் செல்வது அவருக்கு சாத்தியமற்றதாக ஆகிவிட்டது. தாயாரின் உடல் பலவீனமடைந்திருந்தபோது, அன்னாரை காண செல்ல முடியவில்லை. இருப்பினும் பொறுமை மற்றும் அர்ப்பணிப்புடன் தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று அன்னார் தமது பிள்ளைகளுக்கு வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

மருமகள் கூறுகின்றார்கள்: மர்ஹூமா மிகவும் உருக்கத்துடனும், வேதனையுடன் தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். உண்மையான கனவுகள் அன்னாருக்கு வந்து கொண்டிருந்தன. மிகவும் தெளிவான மற்றும் உண்மையான கனவுகள் அன்னாருக்கு வந்தன. அவை வெளிப்படையாக நிறைவேறிக் கொண்டிருந்தன. நாங்கள் அவற்றைக் கண்டு வியப்படைந்து கொண்டிருந்தோம்.

பிறகு இவர் எழுதுகின்றார்: மகனுடைய வழக்கின் காரணமாக ஹிஜ்ரத் செய்ய நேர்ந்தது. தாய் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அங்கு செல்ல முடியவில்லை.ஆனால் சஞ்சலப்படவில்லை. எப்போதுமே உறுதியான பாதத்துடன் வாழ்வை அர்ப்பணம் செய்வதை நிறைவேற்றி வருமாறு அன்னார் வலியுறுத்தி வந்தார்கள். மேலும் கூறினார்கள்: தற்போது மிகவும் எளிமை இருக்கின்றது; எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம்; மேலும் தாய்மையைக் கூறி (மார்க்க) அர்ப்பணிப்பின் பணியில் தடையாக இருந்ததில்லை. யாரோ ஒருவர் அவரிடம் கூறினார்: தற்போது நீண்ட காலம் ஆகிவிட்டது. அங்கு சென்று சந்திப்பதற்கு காலத்தின் கலீஃபாவிற்கு எழுதுங்கள்; அன்னார் அதற்கு ஏற்பாடு செய்து விடுவார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள்: நான் என் மகனை அர்ப்பணம் செய்துள்ளேன். விண்ணப்பங்களை ஒருபோதும் வைக்க மாட்டேன். அல்லாஹ் மர்ஹூமாவுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அன்னாருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. உறவினர்களுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக.

* * * * *

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

## திருக்குர்ஆனின் மகத்துவத்தின் ஒளியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

(மதிப்பிற்குரிய ஹாஃபிழ் மக்தூம் ஷரீஃப் ஸாஹிப், அடிஷனல் நாஸிர் ஆஃலா, தென் இந்தியா)
காதியான் ஜல்ஸா -2023 சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
وَقَالَ الرَّسُوْلُ يٰرَبِّ اِنَّ قَوْمِى اتَّخَذُوْا
هٰذَا الْقُرْاٰنَ مَهْجُوْرًا

என் இறைவா! என் சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டனர் என்று தூதர் கூறுவார். (ஸூரா அல் ஃபுல்கான்: 31)

திருக்குர்ஆனின் போதனையை கை விட்டபோது முஸ்லிம்களிடம் தோல்வி ஏற்பட்டது.

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! கண்ணிய மிக்க அவையோர்களே! நீங்கள் செவியுற்றதைப் போன்று திருக்குர்ஆனின் மகத்துவத்தின் ஒளியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பது எனது உரையின் தலைப்பு ஆகும்.

கண்ணியம் மிக்க அவையோர்களே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி காலத்தில் மஸீஹ் மவ்வூத் மற்றும் மஹ்தி மவ்வூத் வருவது தொடர்பாக நற்செய்தி வழங்கியுள்ளார்கள். அவரின் வருகையின் மிக முக்கியமான விஷயம் திருக்குர்ஆனுடைய கண்ணியத்தை உயர்வை அதன் மகத்துவத்தை உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவது ஆகும். இதன் அடிப்படையில் ஸூரா அல்ஜும்ஆவில்

وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ

என்ற வசனம் இறங்கியது. அப்போது ஸஹாபிகள் வினவினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் மறுபடியும் வசனத்தை ஓதிக் காட்டி அவர்களை தூய்மைப்படுத்தி அவர்களுக்கு வேதம் மற்றும் நுட்பமான ஞானத்தை கற்றுத் தரும் அந்த மக்கள் யார்? அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடையும். அப்போது ஒரு பாரசீக மனிதர் அதை மறுபடியும் பூமியில் கொண்டு வருவார். சில அறிவிப்புகளில் அறிவு அல்லது குர்ஆன் கைவிடப்படும் அப்போது அதன் மகத்துவம் மற்றும் உயர்வை மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உள்ளத்தில் நிலை நாட்டுவார்கள்.

கண்ணியமிக்க அவையோர்களே! இறந்துபோன ஈமானை மற்றும் கைவிடப்பட்ட திருக்குர்ஆனின் மகத்துவத்தை மறுபடியும் நிலை நாட்ட அல்லாஹ் காதியான் எனும் அறியப்படாத குக்கிராமத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியுமான மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை அனுப்பினான். அன்னார் (அலை) அறிவிப்பு செய்தார்கள்:

اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ

(அல்ஹிஜ்ர்: 10) என்ற தனது வாக்குறுதிக்கு ஏற்ப திருக்குர்ஆனின் கண்ணியத்தை நிலைநாட்ட பதிநான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்லாஹ் என்னை அனுப்பினான். (மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 433)

நீண்ட காலமாக மார்க்கத்தை நிராகரிப்பு தின்று கொண்டு இருந்தது. இப்போது நிராகரிப்பை விழுங்கும் காலம் வந்துள்ளது என்று உறுதியாக நம்புங்கள்.

கண்ணியமிக்க அவையோர்களே!

காலத்தின் வீழ்ச்சியை படம் பிடித்து காண்பித்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்தக் காலம் உண்மையின் எவ்வாறான காலம் என்றால், திருக்குர்ஆனில் மறைந்து கிடந்த அனைத்து கருவூலத்தையும் வெளிப்படுத்த இயல்பாகவே விரும்பும் காலமாகும். …………எனவே உறுதியாக நம்புங்கள்:; அந்தக் கதவு திறக்கப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆனின் மறைந்து கிடந்த அற்புதங்கள் இந்த உலகத்தின் அகம்பாவம் கொண்ட தத்துவ ஞானிகள் மீது வெளிப்பட வேண்டும் என்று இறைவன் உறுதி கொண்டுள்ளான். தற்போது அறைகுறை அறிவாளிகளான இஸ்லாத்தின் எதிரிகளால் இந்த நோக்கத்தை தடுக்க முடியாது. தங்களுடைய தீங்குகளிலிருந்து விலகவில்லையென்றால் அழிக்கப்படுவார்கள். மேலும் இறைவனால் அறியப்பட்டு மண்ணாக்கப்படுவார்கள். அந்த அறிவீனர்களுக்கு தற்போதைய காலம் மீது சிறிதும் கவனம் இல்லை. திருக்குர்ஆன் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும்,அது பலவீனமாக வலுவிழந்தும் ஏளனமாக தென்பட வேண்டும் என்றும் எதிரிகள் விரும்புகின்றனர். ஆனால், அது ஒரு போர் வீரனைப் போன்று வெளிவரும். ஆம்! அது ஒரு சிங்கத்தைப் போன்று மைதானத்தில் வரும். மேலும் உலகத்தின் அனைத்து தத்துவங்களையும் தின்று விடும். மேலும் தனது வெற்றியை காட்டும். மேலும்,

لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ

என்ற முன்னறிவிப்பை நிறைவேற்றி விடும். மேலும்

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ

என்ற முன்னறிவிப்பு ஆன்மிக ரீதியில் உச்சத்தை அடையும்….. தற்போது அந்த இப்னு மர்யமின் ஆன்மிகத் தந்தை உண்மையான ஆசிரியரை (அதாவது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைத்) தவிர இந்த பூமியில் வேறு யாருமில்லை. ஆகையால், இந்தக் காரணத்தினாலும் ஆதமுடன் அவர் ஒப்புமையும் பெற்று இருக்கின்றார். திருக்குர்ஆனின் ஏராளமான கருவூலத்தை அவர் மக்களிடம் விநியோகம் செய்வார். எவ்வாறு என்றால் மக்கள் அதை பெற்று, பெற்று களைப்படைந்து விடுவார்கள்.

لَا يَقْبَلُهٗ اَحَدٌ

என்பதை உண்மைப்படுத்தி விடுவார்கள். ஒவ்வொரு இயல்பும் தனது தகுதிக்கு ஏற்றவாறு தன்னிறைவு பெற்று விடும். (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானி கஸாயீன், தொகுதி 3, பக்கம் 424 -427)

திருக்குர்ஆனின் ஒளி அனைத்து ஒளிகளை விடவும் பிரகாசமாக வெளிப்பட்டது.

எதனிடமிருந்து இந்த ஒளிகளின் ஆறு புறப்பட்டதோ அது பரிசுத்தமானது ஆகும்.

கண்ணியமிக்க அவையோர்களே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த மேற்கோளிலிருந்து தெளிவாகுவது என்னவென்றால், இறுதி காலத்தில் மஸீஹ் மவ்வூத் (அலை) மூலமாக திருக்குர்ஆனின் மகத்துவம் இரண்டு வகையில் வெளிப்படும்.

لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ

என்பதன் கீழ் வெளிப்புற ரீதியில் அனைத்து மார்க்கத்தின் மீதும் திருக்குர்ஆனின் உண்மைத்துவம் கருத்துச் செறிவு நுட்பமான ஞானத்தின் கருவூலம் வெளிப்படுத்தப்பட்டு அனைத்து மார்க்கங்களின் மீதும் திருக்குர்ஆனின் உண்மைத்துவம், மகத்துவம் மற்றும் உயர்வு நிலை நிறுத்த வேண்டும் . மேலும் இஸ்லாத்திற்கு வெற்றியை வழங்க வேண்டும். மறுபுறம் உட்புற நிலையில்,

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ

என்பதற்கு ஏற்ப முஹம்மதிய்ய சமுதாயத்தில் அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக உருவாகக் கூடிய சந்தேகம் மற்றும் ஐயம் போன்றவற்றை திருக்குர்ஆனின் போதனையின் அடிப்படையில் களைந்து மேலும் அசுத்தமான கொள்கைகள் மற்றும் பித்அத்துகளை சுத்தம் செய்து திருக்குர்ஆனின் மகத்துவம் நிலைநாட்டப்பட்டு இஸ்லாம் மார்க்கத்திற்கு உறுதிப்பாடு வழங்க வேண்டும்.

கண்ணியமிக்க அவையோர்களே!

திருக்குர்ஆனின் மகத்துவம் மற்றும் உண்மைத்துவத்தை அனைத்து மார்க்கங்களின் மீதும் வெளிப்படுத்த அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு தன்புறம் இருந்து திருக்குர்ஆனின் சிறப்பான அறிவு மற்றும் ஞானத்தை வழங்கினான். மேலும், அன்னாருக்கு தர்பிய்யத் வழங்கினான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இருப்பின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். அந்த இறைவன் என் மீது கருணையின் பார்வையை செலுத்தினான். மேலும் என்னை ஏற்றுக் கொண்டான். மேலும் என் மீது அருள் புரிந்தான். மேலும் எனக்கு தர்பிய்யத் வழங்கினான். மேலும் எனக்கு அவன் எத்தகைய திருக்குர்ஆனின் ஞானத்தை எனக்கு வழங்கினான் என்றால் அவை என்னைத் தவிர வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை. எனது எதிரிகள் பல முயற்சிகள் செய்தும் கிடைக்காதவற்றை நான் அதன் மூலம் பெற்றேன். மேலும் நான் திருக்குர்ஆனின் புரிதலில் எவ்வளவு உயர்வு அடைந்தேன் என்றால் பெரும்பாலும் மக்களுடைய சிந்தனை கூட அங்கு வரை செல்ல முடியாது. (ஹமாமதுல் புஷ்ரா, ரூஹானீ கஸாயின், தொகுதி 7, பக்கம் 285- 286)

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும். மேலும் அவனது எல்லையற்ற கருணையாகும். அதாவது அவன் என்னைப் போன்ற எளிய மனிதனின் கையால் அவனது மார்க்கத்தின் கண்ணியம் வெளிப்பட வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். நமது எதிரிகள் இஸ்லாம் மீது செய்திருக்கின்ற

ஆட்சேபனைகள் மற்றும் தாக்குதல்களை நான் ஒரு கணம் எண்ணிப் பார்த்தேன். எனது கணிப்பு மற்றும் எண்ணத்தின்படி அவை மூன்றாயிரத்தை எட்டியிருந்தது. தற்போது அதன் எண்ணிக்கை அதை விட அதிகமாக ஆகியிருக்கும் என்று நான் நினைக்கின்றேன். இஸ்லாத்தின் மீது மூவாயிரம் ஆட்சேபனைகள் சுமத்தப்படுகின்ற அளவிற்கு அதன்

அடித்தளம் பலவீனமான விஷயங்களில் அமைந்துள்ளது என்று எவரும் கருத வேண்டாம்; அவ்வாறு ஒருபோதும் இல்லை. இந்த ஆட்சேபனைகள் அனைத்தும் அச்சம் கொண்ட மற்றும் அறிவீனமான மக்களின் பார்வையில் ஆட்சேபனைகள் ஆகும். நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகின்றேன். எங்கு நான் இந்த ஆட்சேபனைகளை கணக்கிட்டேனோ அங்கு இதனையும் ஆராய்ந்து பார்த்தேன். அவற்றிற்குப் பின்னால் உள்ளபடியே ஏராளமான உண்மைத்துவங்கள் இடம் பெற்றுள்ளன. அகப்பார்வை இல்லாத காரணத்தால் ஆட்சேபனை செய்பவர்களுக்கு அவை தென்படவில்லை. ஆட்சேபனை செய்கின்ற குருடர்கள் தடுக்கி விழுந்த அந்த இடங்களில் உண்மையில் இறைவனின் நுட்பமான ஞானங்கள் இருக்கின்றன. அங்கோ நுட்பமான ஞானங்கள் புதைந்து கிடக்கும் கருவூலம் உள்ளது. மேலும் அந்த புதைந்து கிடக்கும் கருவூலத்தை உலகிற்கு முன்னால் வெளிக்கொணர இறைவன் என்னை அனுப்பினான். மேலும் (திருக்குர்ஆன் என்ற) அந்த பளபளக்கும் ஆபரணங்கள் மீது வீசப்பட்ட ஆட்சேபனைகள் எனும் அசுத்தமான சேற்றை அதிலிருந்து அதனை நான் சுத்தம் செய்ய வேண்டும். திருக்குர்ஆனின் கண்ணியத்தை ஒவ்வோர் அசுத்தமான எதிரி சுமத்தும் களங்கத்திலிருந்தும் அதனை சுத்தப்படுத்தவும், பரிசுத்தமாக்குவதற்கும் இறைவனின் தன்மானம் தற்போது மிகவும் உத்வேகம் கொண்டுள்ளது. (மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 38)

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக புதைந்து கிடந்தது கருவூலம் ; இப்போது பெறக் கூடிய ஒருவர் இருந்தால் நான் தருகின்றேன் .

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் என்னுடைய கையால் மேலும் என் மூலமாகவே இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மைத்துவத்தையும் மேலும் அனைத்து எதிரான மார்க்கங்களின் பொய்யையும் நிரூபித்து விடுவான். எனது கையால் வானத்தின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. எனது எழுதுகோல் மூலம் திருக்குர்ஆனின் உண்மைத்துவங்கள் மற்றும் நுட்பமான ஞானங்கள் ஒளிர்கின்றன. (தர்யாகுல் குலூப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 15, பக்கம் 265 -268)

கண்ணியமிக்க அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் பேனாவின் அரசர் என்ற பட்டத்தையும், அன்னாரது பேனாவிற்கு ஸுல்ஃபிகார் அலீ (அலீயின் வாள்) என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளான். அன்னார் (அலை) 90 புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். அவை ரூஹானீ கஸாயீன் என்ற பெயரில் முழுத் தொகுப்பாக வெளிவந்துள்ளன. அன்னாரது 300 பிரசுரங்கள் மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளன. மல்ஃபூஸாத்தின் 10 தொகுதிகள் வெளிவந்துள்ளன. அறிவு மற்றும் ஞானத்தால் நிறைந்த அன்னாரது 700 கடிதங்கள் 5 பாகங்களாக வெளிவந்துள்ளன. உருது கவிதைகள், பாரசீக கவிதைகள், அரபி கவிதைகள் மேலும் அன்னார் வழங்கிய திருக்குர்ஆனின் விளக்கவுரைகள் தனியாக வெளியிடப்பட்டுள்ளன. அன்னார் (அலை) தம்முடைய இந்த எழுத்துகளில், உரைநடை மற்றும் கவிதை நடையில் திருக்குர்ஆனின் உயர்வு, கண்ணியம் மற்றும் அதன் மேலான மகத்துவத்தை உலகத்தின் முன்பு வெளிக் கொணர்ந்தார்கள். அதன் நிகரற்ற அழகை உலகத்தின் முன்பு காண்பித்து அதன் நேசர்களாக அவர்களை ஆக்கினார்கள். மேலும், திருக்குர்ஆனின் எண்ணிலடங்கா அற்புதங்கள், நுட்பமான ஞானங்கள், அறிவு போன்றவற்றின் மீது இருந்த திரையை அகற்றி அதன் ஒளிமயமான நேர்வழி மற்றும் கருணையை உலகத்திற்கு பொதுவாக ஆக்கினார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் மூலமாக திருக்குர்ஆன் மட்டுமே உலகளாவிய ஷரீஅத் ஆகும் என்பதையும், மேலும் அது மட்டுமே உண்மையான வடிவில் கியாமத் வரை உயிருள்ள ஷரீஅத் ஆகும் என்று அழைக்கப்படுவதற்கு தகுதி படைத்துள்ளது என்பதையும், மேலும் அதன் போதனைகள் எல்லா காலத்திற்கும் மேலும் அதன் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாகும்; என்பதையும் நிரூபணம் செய்துள்ளார்கள்.

கண்ணியமிக்க சான்றோர்களே! நான் நேரத்தை கருத்தில் கொண்டு அன்னாரது மகத்துவ மிக்க நூல்களில் இருந்து சிலவற்றை பற்றி மட்டும் கூறுவேன்.

குத்பி பெயரில் ஒரு புத்தகம் எழுதுவது உமக்கு விதிக்கப்பட்டுள்ளது என்று இளமை காலத்தின் தொடக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு கஷ்ஃப் மூலம் செய்தி வழங்கப்பட்டது. குத்பி என்ற சொல்லில் இருக்கின்ற நுட்பம் இதுவாகும். அதாவது அது தனது வலுவான ஆதாரங்கள், உறுதித் தன்மை, ஆட்டம் காணாத சான்றுகள் ஆகியவற்றின் காரணமாக விண்மீன் போன்று வானில் உதிக்கும். மேலும் முழு உலகிற்கும் உண்மை மார்க்கத்தின் பக்கம் வழிகாட்டுவதற்கு காரணியாக அமையும். ஹுஸுர் (அலை) அவர்களின் இந்த கனவு பராஹீனே அஹ்மதிய்யா மூலமாக நிறைவேறியது. இந்த நூல் ஒரு புது உரைநடைக்கான அடித்தளம் அமைத்தது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் 7 ஜோடி புத்தகங்களின் முன்னோட்டமாக நிரூபணம் ஆனது. அன்னார் (அலை) தமது மகத்துவ மிக்க புத்தகமான பராஹீனே அஹ்மதிய்யாவில் அனைத்து மதத் தலைவர்கள் தத்துவ ஞானிகளுக்கு சவால் விட்டார்கள். அதாவது திருக்குர்ஆனின் உண்மைத்துவம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு சான்றாக 300 அறிவு சார்ந்த உறுதியான ஆதாரங்களை திருக்குர்ஆனில் இருந்து காட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் அல்லாத ஒருவர் தம்முடைய மார்க்கத்தின் கொள்கையின் உண்மைத்துவத்தை தம்முடைய இல்ஹாமிய வேதத்தில் இருந்து நிரூபித்து காட்டி விட வேண்டும் என்று சவால் விடுத்தார்கள். ஒருவேளை எண்ணிக்கை அடிப்படையில் அதற்கு நிகராக காட்ட முடியவில்லை என்றாலோ அதிலிருந்து பாதியோ அல்லது மூன்றில் ஒரு பங்கோ அல்லது நான்கில் ஒன்றோ அல்லது ஐந்தில் ஒன்றோ தங்களுடைய இல்ஹாமிய புத்தகத்திலிருந்து காட்டினாலோ அல்லது சான்றுகள் காட்ட முடியவில்லை என்றாலோ நாம் காண்பித்த ஆதாரங்களை எண் அடிப்படையில் முறியடித்தாலோ எந்தவித கால தாமதமும் இல்லாமல் என்னுடைய பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்தை அவருக்கு வழங்கி விடுவேன்.

மேலும் ஹுஸுர் (அலை) கூறுகின்றார்கள்: உண்மையில் இந்த புத்தகம் உண்மையைத் தேடுபவருக்கு ஒரு நற்செய்தியாகவும் மேலும் இஸ்லாம் மார்க்கத்தை மறுக்கக் கூடியவர்களுக்கு இறை சான்றாகவும் இருக்கும். இதற்கான பதிலை கியாமத் வரை அவர்களால் கொண்டு வர முடியாது. ஏனெனில், இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை மறுக்கக் கூடிய ஒவ்வொரு மறுப்பாளருக்கும், எதிரிகளுக்கும் சான்றை முழுமை செய்யக்கூடியதாக இருப்பதற்கும் , தங்களுடைய பொய்யான எண்ணம் மற்றும் பொய்யான கொள்கைகளில் அவர்கள் ஆணவமும், பெருமிதமும் கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் நான் பத்தாயிரம் ரூபாய் பரிசு தொகைக்கான பிரசுரத்தையும் இதனுடன் இணைத்துள்ளேன். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 83)

சோதித்துப் பார்ப்பதற்காக எவரும் வரவில்லை; ஒவ்வொரு எதிரியையும் போட்டிக்காக நாம் அழைத்தோம்!

கண்ணியமிக்க அவையோர்களே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் உயர்வு தொடர்பாக செய்த மிகச் சிறப்பான தொண்டான இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற அன்னாருடைய உலகப் பிரசித்தி பெற்ற நூல். இன்றும் நல்லுள்ளம் கொண்ட மற்றும் நீதியை விரும்பும் மனிதர்களை தன் பக்கம் ஈர்க்கின்றது. அதனுடைய மகத்துவம் தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

26,27,28 டிசம்பர் 1896-ல் டவுண் ஹால் லாஹூரில் வைத்து நடைபெற உள்ள சர்வ சமய மாநாட்டில் திருக்குர்ஆனின் மகத்துவம் தொடர்பாக இந்த எளியவனின் ஒரு கட்டுரை வாசிக்கப்படும். இந்தக் கட்டுரை மனிதனுடைய சக்திகளுக்கு அப்பாற்பட்டதும், மேலும் இறைவனுடைய அடையாளங்களில் ஒரு அடையாளமும் ஆகும். மேலும் குறிப்பாக அவனுடைய உதவியினால் அது எழுதப்பட்டதும் ஆகும். அதில் திருக்குர்ஆனின் உண்மைத்துவமும், ஆழிய ஞானங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலமாக உண்மையில் இந்த வேதம் இறைவனுடைய வேதம் ஆகும்; மேலும் அகில உலகத்தையும் படைத்து பரிபாலிக்கும் இறைவனுடைய வேதமாகும் என்பது சூரியனைப் போன்று தெளிவாகி விடும். எவர் ஒருவர் இந்தக் கட்டுரையின் ஐந்து கேள்விகளின் பதில்களை ஆரம்பத்திலிருந்து



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

இறுதி வரை கேட்பாரோ அவரிடம் ஒரு புதிய நம்பிக்கை உருவாகும். மேலும் ஒரு புது ஒளி அவரிடம் மின்னும் என நான் உறுதியாக நம்புகின்றேன். மேலும் இறைவனுடைய தூய வேதத்தின் ஒரு விளக்கவுரையின் தொகுப்பு அவர்களின் கையில் கிடைக்கும்.எல்லாம் அறிந்த இறைவன் இல்ஹாம் எனக்கு மூலம் கூறினான்: இந்தக் கட்டுரை (மற்ற) எல்லாவற்றின் மீதும் வெற்றி பெறும். அதில் உண்மை மற்றும் நுட்பமான அறிவு மற்றும் இறை ஞானத்தின் ஒளி உள்ளது. மற்ற சமுதாய மக்கள் அங்கு சென்று ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை கேட்பார்கள் எனில் வெட்கப்படுவார்கள். தங்களுடைய புத்தகங்களில் இருந்து இந்த மேன்மையை(அவர்களால்) ஒருபோதும் காட்ட முடியாது. ஏனெனில், அந்த நாள் இந்தத் தூய வேதத்தின் பிரதிபலிப்பு வெளிப்பட வேண்டும் என்று இறைவன் நிர்ணயித்துள்ளான். நான் கனவின் உலகத்தில் இது தொடர்பாக பார்த்தேன். அதாவது எனனுடைய அரண்மனையில் மறைவான ஒரு கை பட்டது. மேலும் அது தொட்டவுடன் அந்த அரண்மைனையில் இருந்து ஓர் ஒளி பிரகாசமாக வெளிப்பட்டது. அது சுற்றுப் புறங்களில் பரவி விட்டது. மேலும் என்னுடைய கைகளிலும் அதனுடைய ஒளி பட்டது. அப்பொழுது ஒரு நபர் எனக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். அல்லாஹு அக்பர்; குரிபத் கைபர் என்று அவர் உரத்தக் குரலில் கூறினார்.இதற்கான விளக்கம் இவ்வாறாகும். அதாவது அந்த அரண்மனை என்பது என்னுடைய உள்ளம் ஆகும். ஒளி இறங்குதல் மற்றும் ஊடுருவுதலின் இடமாகும். மேலும் அந்த ஒளி நுட்பமான ஞானமாகும். மேலும் கைபர் என்பதன் பொருள் அனைத்து மதங்கள் ஆகும். அவற்றில் இணை வைத்தல் மற்றும் பொய்யின் கலப்படம் உள்ளது. மேலும் மனிதனுக்கு இறைவனின் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது அல்லது இறைவனுடைய பண்புகளில் அவனுடைய தகுதியில் இருந்து கீழே விழ வைத்திருக்கின்றது. ஆகையால் எனக்கு சொல்லப்பட்டுள்ளதாவது, இந்தக் கட்டுரை நன்கு பரப்பப்பட்டதன் பிறகு பொய்யான மார்க்கங்களின் பொய் வெளிப்பட்டு விடும். திருக்குர்ஆனின் உண்மைத்துவம் ஒவ்வொரு நாளும் பூமியில் பரவிக் கொண்டே செல்லும். எதுவரையென்றால் தன்னுடைய வட்டத்தை முழுமைப்படுத்தி விடும். பிறகு இந்த கஷ்ஃபின் நிலையில் இருந்து இல்ஹாம் நிலைக்கு மாற்றப்பட்டது. பிறகு எனக்கு இல்ஹாம் இறங்கியது.

إِنَّ اللّٰهَ مَعَكَ

إِنَّ اللّٰهَ يَقُوْمُ أَيْنَمَا قُمْتَ

அதாவது இறைவன் உன்னுடன் இருக்கின்றான். எங்கு நீர் நிற்கின்றாயோ அங்கேயே இறைவனும் நிற்கின்றான். இது இறைவனின் உதவிக்கான ஓர் அறிகுறி ஆகும். (தர்யாகுல் குலாப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 15, பக்கம் 226 -227)

கண்ணியமிக்க அவையோர்களே! இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற இந்தக் கட்டுரை சந்தேகத்திற்கு இடமில்லாமல் திருக்குர்ஆனின் உண்மைத்துவம், நுட்பமான அறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றின் நிகரற்ற,தொட முடியாத விளக்கவுரையாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மூலமாக திருக்குர்ஆனின் கண்ணியத்திற்கெதிராக வெளிப்பட்ட தொண்டுகளில் ஒரு மைல் கல் போன்றதாகும். இறை உதவி பெற்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்தக் கட்டுரை உள்ளூர் அளவில் மட்டுமல்லாமல் முழு இந்தியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள பெரும் அறிஞர் பெருமக்களில் ஒரு பதட்டத்தை உருவாக்கி விட்டது. ஏனெனில், பெரும் ஆராய்ச்சியாளர்கள் கூட இந்தக் கட்டுரையை நல்ல விதத்தில் புகழ்ந்தது மட்டுமல்லாமல் இந்தக் கட்டுரையின் மகத்துவத்தை ஒப்புக் கொண்டவாறு வெளிப்படையாக தமது பத்திரிகைகளில் வெளியிட்டனர். அதாவது இந்தக் கட்டுரை மிகவும் சிறந்ததாக இருந்தது. இந்த அடிப்படையில் ஒரு பத்திரிகை எழுதுகின்றது;

மிர்ஸா ஸாஹிப் அவர்கள் அனைத்து கேள்விகளுக்கும் திருக்குர்ஆனிலிருந்து பதிலை எவ்வாறு வழங்க வேண்டுமோ? வழங்கினார்கள். மேலும் அனைத்து பெரும், பெரும் நிபந்தனைகள் மற்றும் இஸ்லாத்தின் நடைமுறைகளின் அடிப்படையிலும், அறிவு சார்ந்த ஆதாரங்கள் மூலமாகவும் மேலும் தத்துவங்களின் சான்றுகளை முன் வைத்தவாறும் அழகாக தோரணை செய்தார்கள். (சௌதவின் ஸதி ரவால்பிண்டி பத்திரிகை, 1 பிப்ரவரி, 1897)

கண்ணியமிக்க அவையோர்களே! பாதிரி இமாதுத்தீன் ஸைனுல் அக்வால் என்ற தன்னுடைய நூலில் திருக்குர்ஆன் மீது தாக்குதல் தொடுத்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அதற்கு பதில் அளிக்கும் வகையில் நூருல் ஹக் என்ற நூலை எழுதினார்கள். அதில் திருக்குர்ஆனுடைய உண்மைத்துவம் மற்றும் அறிவுச் செறிவை எந்த அளவிற்கு வெளிக்காட்டினார்கள் என்றால் இதுபோன்ற ஒன்று, இரண்டு அல்ல; ஏராளமான உதாரணங்கள் அன்னாருடைய புத்தகங்களில் நமக்கு கிடைக்கின்றன.

உங்களுடைய மார்க்கம் தொடர்பான வாதத்தையும் அதற்கான சான்றையும் நீங்கள் இல்ஹாமாக இறக்கப்பட்ட வேதத்திலிருந்து நிரூபிக்க வேண்டும் என்று ஒவ்வொரு மார்க்கத்தை சார்ந்தவர்களுக்கும் அன்னார் (அலை) அழைப்பு விடுத்தார்கள். இந்த விதிமுறை மற்றும் தரத்தின் அடிப்படையிலேயே விவாதங்கள், முனாஸிராக்கள் மற்றும் கலந்துரையாடல், சொற்பொழிவுகள் போன்ற தருணத்தில் நன்கு பயன்படுத்தி கொண்டு திருக்குர்ஆனின் கண்ணியம் மற்றும் மகத்துவத்தை வெளிப்பத்திக் காட்டினார்கள். ஏனெனில் திருக்குர்ஆன் தனது தூய்மை மற்றும் முழுமையான போதனையின் அடிப்படையில் அனைத்து வானத்தின் வேதங்களிலும் தனித்துவமானதாக உள்ளது.

திருக்குர்ஆனின் அழகும், பொலிவும் ஒவ்வொரு முஸ்லிம்களின் உயிரின் ஒளியாகும். சந்திரன் மற்றவர்களுக்கு நிலவாகும்; நம்முடைய நிலவோ திருக்குர்ஆன் ஆகும். ஆராய்ந்து பார்த்தேன். எங்குமே தென்படவில்லை.

எவ்வாறு தென்படும்! இறைவனுடைய தூய வேதம் தனித்துவமானதாக இருக்கின்றது. அதனுடைய ஒரு வரியில் வசந்த காலம் உருவாகின்றது.

(திருக்குர்ஆனாகிய) உன்னுடைய சிறப்பம்சம் தோட்டத்திலும் இல்லை ; மேலும் அது போன்ற எந்த ஒரு பூந்தோட்டமும் இல்லை.(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உருது கவிதை)

கண்ணியமிக்க அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எங்கு மாற்று மதத்திற்கு எதிராக திருக்குர்ஆனின் கண்ணியத்தை நிரூபித்தார்களோ அங்கு உட்புறமாக முஹம்மதியா உம்மத்தில் திருக்குர்ஆனின் மீது சுமத்தப்பட்ட தவறான கொள்கைகள், பார்வைகள் போன்றவற்றை நீக்கினார்கள். தூய்மை மற்றும் கண்ணியத்தை நிலைநாட்டினார்கள். முஸ்லிம்களிடம் இறைவனுடைய பேசுகின்ற பண்பு இப்பொழுது செயல்படுவதில்லை என்ற தவறான கொள்கை உருவாகிவிட்டது. முன்பொரு காலத்தில் அவன் பேசிக் கொண்டிருந்தான்; ஆனால், இப்பொழுது பேசுவதில்லை. முஜீபுல் தஅவாத் (கேட்பவர்களுக்கு பதில் வழங்கும்) இறைவன் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. வஹீ இல்ஹாமை மறுக்க ஆரம்பித்து விட்டனர்.

ஸர் ஸய்யிது அஹ்மது கான் போன்ற பெரும் அறிஞர் கூட பிரார்த்தனையின் தத்துவத்தை மறுக்கக் கூடியவராக ஆகிவிட்டனர்.

கண்ணியமிக்க அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகையின் அசல் நோக்கம் மேலும் மிகப் பெரிய அற்புதம் என்னவென்றால் அன்னார் (அலை) ஹய்யுல் கய்யூம், முஜீபுல் தஅவாத்(அழைப்புகளுக்கு பதில் கொடுப்பவன்) என்ற இறைவனை முன்வைத்தார்கள். மேலும் அன்னாரின் இருப்பின் மூலமாக உயிருள்ள இறைவன் வெளிப்பட்டான். திருக்குர்ஆனை உண்மையாக பின்பற்றினால் உயிருள்ள இறைவன் கிடைப்பான்; மேலும் இறைவனுடன் புத்தம் புதிய முறையில் கலந்துரையாடல் என்ற பாக்கியம் கிடைக்கும் என்பதை நிரூபித்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் தன்னுடைய ஆன்மிக சிறப்பம்சம் மற்றும் தன்னுடைய சுய ஒளியின் மூலமாக தன்னை உண்மையாக பின்பற்றக் கூடியவர்களை ஈர்க்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அவருடைய உள்ளத்தை ஒளிமயமாக ஆக்குகின்றது. மேலும் பெரும் பெரும் அடையாளங்களைக் காட்டியவாறு இறைவனுடன் எவ்வாறான உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது என்றால் துண்டு துண்டாக ஆக்கக் கூடிய வாளால் கூட அது அறுந்து விடாது. அது உள்ளத்தின் கண்களைத் திறக்கின்றது. மேலும் பாவங்களால் அழுக்கான ஊற்றுகளை அடைக்கின்றது. மேலும் இறைவனுடன் புத்தம், புதிய கலந்துரையாடலுக்கான நற்பேறை வழங்குகின்றது. மேலும் மறைவானவற்றின் அறிவைத் தருகின்றது. மேலும் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதன் படி தன்னுடைய சொற்களால் செய்திகளை வழங்குகின்றது. மேலும் எவரெல்லாம் அந்த திருக்குர்ஆனை உண்மையாகப் பின்பற்றக் கூடிய நபராக இருக்கின்றாரோ அவரை எவர் எதிர்க்கின்றார்களோ இறைவன் தன்னுடைய கோபத்தின் அடையாளங்கள் மூலமாக அவர்களிடம் வெளிப்படுகின்றான். மேலும் தன்னுடைய கூற்றுகளுக்கு கட்டுப்படக் கூடிய அந்த அடியாருடன் அந்த இறைவன் இருக்கின்றான். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம்

305 -309)

மேலும் கூறுகின்றார்கள்: கேட்கக் கூடியவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறேன். அதாவது அந்த இறைவன் கிடைப்பதனால் மனிதனுக்கு ஈடேற்றம் மற்றும் நிரந்தரமான மகிழ்ச்சி கிடைக்கின்றது. திருக்குர்ஆனை பின்பற்றாமல் அது ஒருபோதும் கிடைக்காது. உறுதியாக நம்புங்கள்; அதாவது எவ்வாறு கண்களில்லாமல் பார்க்க முடியாதோ அல்லது காதுகளின்றி கேட்க முடியாதோ அல்லது நாவுகளின்றி பேசமுடியாதோ அதேபோன்றுதான் திருக்குர்ஆன் இல்லாமல் அந்த நேசத்திற்குரியவனின் முகத்தைப் பார்க்க முடியாது. நான் இளைஞனாக இருந்தேன். இப்பொழுது முதியவனாக ஆகிவிட்டேன். ஆனால், இந்த தூய ஊற்றின் திறந்து கிடக்கின்ற நுட்பமான ஞானத்தின் பானத்தை அருந்திய எவரையும் நான் கண்டதில்லை. (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், ரூஹானீ கஸாயீன் தொகுதி 10, பக்கம் 442 - 443)

திருக்குர்ஆன் இறைவனுடயதும் இறைவனின் சொற்களும் ஆகும் ; அது இல்லாமல் ஞானத்தின் தோட்டமும் முழுமை ஆகாது. முழு உலகமும் அலசிப் பார்த்தேன். அனைத்து கடைகளையும் பார்த்தேன். இறை ஞானத்தின் பானம் இந்தக் கண்ணாடி குப்பியில் மட்டும்தான் உள்ளது.

ஏகத்துவத்தின் செடி காய்ந்து விட்டது. மறைவிலிருந்து இந்த வெண்மையான ஊற்று எங்கிருந்தோ தென்பட்டது.

கண்ணியமிக்க அவையோர்களே!

முஸ்லிம்களிடம் திருக்குர்ஆன் தொடர்பாக நாசிக் மன்ஸூக் என்ற ஒரு தவறான கொள்கை நிலை கொண்டு விட்டது.

அல்லாமா முஹம்மது பின் ஹஸம் முஸ்லிம்களுடைய இந்தக் கொள்கை தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் மன்ஸூக் வசனம் என்பதன் பொருள் என்னவென்றால், ஒரு வசனம் திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது; ஆனால், அது செயல்படுத்த தேவையில்லை. வெறும் ஓதினால் மட்டும் போதுமானது; அதன் மீது அமல் செய்ய கட்டளை இல்லை என்பதாகும். ஏனெனில், மன்ஸூக் ஆனதன் காரணத்தினால் அதனுடைய கட்டளை பொய்யாகி விட்டது. (நாஸிக் மன்ஸூக், பக்கம் 246) (நவூதுபில்லாஹ்)!

ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹல்வி (ரஹ்) அவர்கள் ஐந்து வசனங்கள் இருக்கின்றன என்றும், அல்லாமா ஸுயூத்தி அவர்கள் 20 வசனங்கள் என்றும், இன்னும் சில ஆலிம்களோ நாஸிக் மன்ஸூக் வசனங்களின் எண்ணிக்கை 500 வரை இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்கள். இதனால் மீதமுள்ள திருக்குர்ஆனின் வசனங்களின்மீதான நம்பிக்கையும் இல்லாமல் போய் விடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகவும் வலுவாக இந்த தவறான கொள்கையை பொய் என்று கூறி திருக்குர்ஆனின் கண்ணியத்தை நிலை நாட்டினார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாம் உறுதியான நம்பிக்கையுடன் இந்த விஷயத்தின் மீது ஈமான் கொள்கின்றோம். அதாவது திருக்குர்ஆன் வானத்தின் இறுதி வேதமாகும். மேலும் அதன் ஒரு கோடோ, புள்ளியோ அதனுடைய நடைமுறை மற்றும் எல்லைகள், ஏவல்கள் மற்றும் கட்டளைகள் அதிகமும் ஆகாது. மேலும் அதில் குறைவும் ஆகாது. மேலும் இனி எந்த ஒரு வஹீயோ அல்லது இல்ஹாமோ இறைவன் புறம் இருந்து (அதற்கு எதிராக) இறங்காது.

ஏதாவது திருக்குர்ஆனின் கட்டளையில் மாற்றம் கொண்டு வரவோ அல்லது குறைக்கவோ அல்லது ஏதாவது ஒரு கட்டளையை திருத்தி மாற்றவும் வேண்டும் என்றோ எவராவது எண்ணினார் என்றால் அவர் நம்முடைய பார்வையில் நம்பிக்கையாளர்களுடைய ஜமாஅத்திலிருந்து வெளியில் சென்றவரும், மறுப்பவரும், நிராகரிப்பாளரும் ஆவார். (இஸாலாயே அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 169 -170)

கண்ணியமிக்க அவையோர்களே! அஹ்லே ஹதீஸ் தரப்பிலிருந்து திருக்குர்ஆன் மீது ஹதீஸிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற குழப்பம் திருக்குர்ஆனுடைய கண்ணியத்தில் குறைவை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இந்த அடிப்படையிலும் அன்னார் (அலை) திருக்குர்ஆனின் மகத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் மத்தியில் திருக்குர்ஆனின் மகத்துவம் நிலை பெற்றிருக்கவில்லை. ஷியாக்கள் இமாம்களின் கூற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மற்றப் பிரிவுகள் ஹதீஸ் எனும் யூகத் தொடரை திருக்குர்ஆனுக்கு நீதிபதி ஆக ஆக்குகின்றனர். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 444)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய ஒரு கனவு தொடர்பாக கூறுகின்றார்கள்:

இன்று இரவு எனக்கு கனவில் காட்டப்பட்டது. மிகவும் மிருதுவானதும், அழகானதும், கனிகளால் நிறைந்து தொங்கக் கூடியதுமான மரம் ஒன்று இருக்கின்றது. சிலக் கூட்டத்தினர் செயற்கையாக மேலும் பலவந்தமாக ஒரு படரும் கொடியை இணைக்க விரும்புகின்றனர். அதற்கு வேர் இல்லை. மாறாக, இணைக்கப்பட்டுள்ளது. அது ஒட்டுண்ணிச் செடியைப் போன்று இருக்கின்றது.

அந்தக் கொடி மரத்தின் மீது சிறிது சிறிதாக படரும் பொழுது, அதன் பழங்களுக்கு சேதம் ஏற்படுத்துகின்றது. மேலும் அந்த மிருதுவான மரத்தின் வடிவத்தில் ஓர் அருவெறுப்பான விகாரமான உருவம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்த மரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் கனிகள் வீணாகிப் போவதற்கான கடும் அபாயம் உள்ளது. இன்னும் கூறுவதாயின் சிறிது வீணாகியும் விட்டது. அப்போது அதனைப் பார்த்து எனது உள்ளம் பதற்றமடைந்து உருகி விட்டது. நல்ல தூய்மையான மனிதனின் வடிவத்தில் நின்ற ஒருவரிடம் நான் இது என்ன மரம்? இந்த உன்னதமான மரத்தைத் தனது பிடிக்குள் அமுக்கி வைத்துள்ள இது என்னக் கொடி? என்று கேட்டேன்.

அப்போது அவர் பதில் அளித்தவாறு இவ்வாறு கூறினார்: இந்த மரம் இறை வார்த்தை திருக்குர்ஆன் ஆகும். இந்தக் கொடி திருக்குர்ஆனுக்கு எதிராக உள்ள அல்லது எதிராக வைக்கப்படும் ஹதீஸ்களும், கூற்றுகளும் ஆகும். அவற்றின் பெரும்பான்மை இந்த மரத்தை அமுக்கி விட்டது. அதற்கு சேதம் விளைவித்துக் கொண்டிருக்கின்றது. அப்பொழுது நான் கண் விழித்து விட்டேன். (ரீவ்யூவ் பர் முபாஹிஸா படாலவி சக்டால்வி ரூஹானீ கஸாயீன், தொகுதி 19, பக்கம் 212 அடிக்குறிப்பு)

தோட்டம் காய்ந்து கிடந்தது கனிகள் விழுந்து கிடந்தன:நான் இறைவனின் அருளைக் கொண்டு வந்தேன். பிறகு பழங்கள் உருவாகின.

கண்ணியமிக்க அவையோர்களே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது.

يَا يَحْيٰى خُذِ الْكِتَابَ بِقُوَّةٍ ۔ وَالْخَيْرُ كُلُّهٗ فِي الْقُرْاٰنِ

மேலும் கூறுகின்றார்கள்: இதில் நம்மை யஹ்யா (அலை) அவர்களுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில், ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்களுக்கு இறைவனின் வேதமாகிய தவ்ராத்தை விட்டு விட்டு ஹதீஸ் மீது அதிக நம்பிக்கை வைப்பவர்களாக இருந்த யூத சமுதாயத்தை எதிர் கொள்ள நேர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் அஹ்லே ஹதீஸ் பிரிவை நமக்கு எதிர் கொள்ள வேண்டியது உள்ளது. ஏனெனில், நாம் திருக்குர்ஆனை முன்வைக்கின்றோம். ஆனால் அவர்களோ ஹதீஸை முன்வைக்கின்றார்கள். (மல்ஃபூஸாத், பாகம் 2, பக்கம் 203)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் எல்லா வழிவகைகளிலும் ஹதீஸை விட முன்னுரிமை பெற்றதாகும். மேலும் ஹதீஸ்களின் நம்பகத்தன்மை மற்றும் நம்பகமின்மையை ஆராய்வதற்கு (திருக்குர்ஆனாகிய) அது நீதிபதி ஆகும்.

மேலும் இறைவன் என்னை திருக்குர்ஆனை பரப்புவதற்காக அனுப்பியுள்ளான். அதனால் திருக்குர்ஆனுடைய சரியான நோக்கம் என்னவோ அதை மக்கள் முன்பு நான் வைக்க வேண்டும். (அல்ஹக் முபாஹிஸா, லூதியானா ரூஹானி கஸாயீன் தொகுதி 4, பக்கம் 30)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இப்பொழுது திருக்குர்ஆனுடைய சரியான வெளிப்பட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். இறைவன் இதற்காகவே என்னை அனுப்பியுள்ளான். மேலும் நான் அவனுடைய இல்ஹாம் மற்றும் வஹீயின் மூலமாக திருக்குர்ஆனை புரிந்து கொள்கின்றேன். (மல்ஃபூஸாத் பாகம் 3, பக்கம் 450)

மேலும் கூறுகின்றார்கள்: என்னுடைய நிலை ஒரு சாதாரண மனிதனை போன்றது அல்ல. மாறாக என்னுடைய இருப்பு நபிமார்களின் சுன்னத்தைப் போன்றதாகும். என்னை வானத்தின் நபராக கருதுங்கள். பிறகு பாருங்கள்! முஸ்லீம்கள் மத்தியில் உள்ள இந்த அனைத்து சண்டைகளும் மேலும் அனைத்து குழப்பங்களும் ஒரு நொடிப் பொழுதில் காணாமல் போகும்.

எவர் இறைவன் புறமிருந்து நிர்ணயிக்கப்பட்டு நீதிபதியாக அனுப்பப்பட்டுள்ளாரோ அவர் திருக்குர்ஆனுக்கு என்ன அர்த்தம் வழங்குகின்றாரோ? அதுதான் சரியானதாகும். மேலும் எந்த ஹதீஸை அவர் சரி என்று கூறுகின்றாரோ? அந்த ஹதீஸ் மட்டுமே சரியானதாகும். (மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 399)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய ஜமாஅத்திற்கு போதனை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

உங்களுக்குக் கூற வேண்டிய முக்கிய போதனை என்னவெனில், திருக்குர்ஆனை ஒதுக்கப்பட்ட வேதத்தைப் போன்று கைவிட்டு விடாதீர்கள் என்பதாகும். ஏனெனில் உங்களின் வாழ்வு அதிலேயே அடங்கியிருக்கின்றது. எவர்கள் திருக்குர்ஆனை கண்ணியப்படுத்துவார்களோ அவர்கள் வானத்தில்

கண்ணியப்படுத்தப்படுவார்கள். எவர்கள் ஹதீஸ் மற்றும் பிற சொற்களை விட திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் அளிப்பார்களோ அவர்கள் வானத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுவார்கள். பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறு எந்த வேத நூலும் இல்லை. (நூஹ் நபியின் கப்பல் பக்கம் 28)

மேலும் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் திருக்குர்ஆன் என்ற சொல்லை சிந்தித்துப் பார்த்தேன். அப்பொழுது எனக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த அருளான சொல்லில் ஒரு வலுவான முன்னறிவிப்பு இருக்கின்றது. அது என்னவென்றால், இந்தக் குர்ஆன் அதாவது படிப்பதற்கு தகுதியான வேதமாகும். மேலும் ஒரு காலத்தில் வேறு பல நூல்களும் இதனுடன் படிப்பதற்காக முன்வைக்கப்படும். ஆனால், மேன்மேலும் அதிகமாக படிப்பதற்கு தகுதியான வேதம் இதுவாகவே இருக்கும். அப்பொழுது இஸ்லாத்தின் கண்ணியத்தை பாதுகாப்பதற்கு, மேலும் பொய்களை வீழ்த்துவதற்கு இந்த ஒரு புத்தகமே படிப்பதற்கு தகுதியானதாக இருக்கும். மேலும் மற்ற வேதங்கள் முழுவதுமாக கைவிடுவதற்கு தகுதி பெற்றதாகிவிடும். மேலும் கூறப்படுகின்றது: ஃபுர்கான் என்பதன் பொருளும் இதுவே ஆகும். அதாவது இது ஒரு புத்தகம் உண்மை மற்றும் பொய்யை பிரித்தறியக் கூடியதாக இருக்கின்றது. மேலும் எந்த ஒரு ஹதீஸோ அல்லது வேறு எந்தவொரு புத்தகமோ இதனுடைய தரத்தை ஒருபோதும் அடைய முடியாது. இப்பொழுது அனைத்து புத்தகங்களையும் விட்டு விடுங்கள். மேலும் இரவும், பகலும் அல்லாஹ்வுடைய வேதத்தையே படியுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 386)

கண்ணியமிக்க அவையோர்களே!

திருக்குர்ஆனுடைய கண்ணியத்தை வீழ்த்துவதற்கு காரணமாக இருக்கின்ற மிக முக்கியமான விஷயம் ஜிஹாது தொடர்பான முஸ்லிம்களுடைய தவறான பார்வை ஆகும். அதாவது ஜிஹாது என்பதன் பொருள் மாற்று மதத்தினர்களை கட்டாயமாக இஸ்லாத்தில் இணைப்பது; வாளால் சண்டையிடுவது என்று கூறப்படுகின்றது. முஸ்லிம்களிடம் இரத்தம் சிந்தக் கூடிய மஹ்திக்கான சிந்தனையும் உள்ளது. அன்னார் (அலை) திருக்குர்ஆனின் கூற்றின் அடிப்படையில் திருக்குர்ஆனின் சரியான விளக்கம் மற்றும் உண்மைத்துவத்தை கூறுகின்றார்கள். அதாவது உண்மையான ஜிஹாது ஆன்மாவுடன் செய்யும் ஜிஹாதாகும். மேலும், திருக்குர்ஆனின் போதனைகளை பரப்புவது மேலும் அதை நிறைவேற்றுவது மிகப் பெரிய ஜிஹாத் என்று அன்னார் (அலை) விளக்கம் தந்தள்ளார்கள்.

இதேபோன்று ஈஸா மஸீஹ் (அலை) உயிருடன் உள்ளார் என்ற கொள்கை திருக்குர்ஆனின் கூற்றுப்படி 30 வசனங்களைக் கொண்டு அன்னார் (அலை) மறுப்பு தெரிவித்து இஸ்லாத்திற்கு மீண்டும் புத்துயிர் வழங்கியுள்ளார்கள். மேலும் இந்த அடிப்படையிலும் அன்னார் (அலை) திருக்குர்ஆனின் கண்ணியத்தை மிகவும் வெளிப்படுத்திக் காட்டினார்கள். அன்னார் (அலை) தமது கவிதையில் கூறுகின்றார்கள்: ஃபுர்கான் (எனும் திருக்குர்ஆன்) அவரை தெளிவாக இறந்தவர் என்று கூறுகின்றது;அவர் இறந்து விட்டார் என்ற செய்தியை நமக்குத் தருகின்றது. மரணித்தவரில் இருந்து அவர் வெளியே இல்லை என்கிறது. 30 வசனங்கள் இதற்கான சான்றை பகர்கின்றன.

கண்ணியமிக்க அவையோர்களே!

அல்லாஹுதலா திருக்குர்ஆனில் சிறந்த சமுதாயத்திற்கு அனைத்து ஆன்மிக பரிசுகளுக்கான நற்செய்தியையும் வழங்குகின்றான். ஆனால், கவனமற்ற முஸ்லிம்கள் காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கு பொருத்தமற்ற விளக்கத்தை வழங்கி அனைத்து விதமான நுபுவ்வத்தின் கதவுகளும் அடைக்கப்பட்டுள்ளன என்று புரிந்து வைத்துள்ளனர்.

அன்னார் (அலை) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதன் உண்மையான ஞானத்தை முன் வைத்தவாறு கூறுகின்றார்கள்:அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருட்களின் உச்சம் தொடர்பான முத்திரை வழங்கப்பட்டுள்ளது. முஹம்மதின் முத்திரை எவர் மீது இருக்கின்றதோ அவருக்கு மட்டுமே நுபுவ்வத் என்ற பரிசு வழங்கப்படும்.

முஸ்தஃபாவின் மடியில் தான் அது உள்ளது. அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஒரு மனிதன் திருக்குர்ஆனின் வெளிப்படையான சொற்களையும் அவற்றின் பொருட்களையும் விட்டு விடாமல், மறுக்காமல் அவற்றிற்கேற்ப செயல்பட்டு வந்தால் அவரை அந்த திருக்குர்ஆன் ஒரே வாரத்தில் தூய்மையானவராக ஆக்கிவிடும். நீங்கள் திருக்குர்ஆனை விட்டும் விலகி ஓடாமலிருந்தால் அது உங்களை இறைத் தூதர்களைப் போன்று ஆக்கிவிடும். திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதமாவது அதனைப் படிப்பவர்களுக்கு ஆரம்பத்திலேயே இவ்வாறான துஆவை கற்றுக் கொடுத்திருக்கின்றதா? மேலும் இந்த நம்பிக்கையை வேறெந்த வேதமாவது உங்களுக்கு அளித்துள்ளதா?

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

அதாவது இறைவா! நீ எங்களுக்கு முன்னுள்ள நபி, ரஸூல் ஸித்தீக், ஷஹீது ஸாலிஹ் ஆகியோருக்கு காண்பித்துக் கொடுத்த உனது அருட்கொடையின் வழிகளை எங்களுக்கும் காட்டித் தந்தருள்வாயாக!

ஆகவே நீங்கள் உங்களின் தைரியத்தையும் உறுதியையும் விட்டு விடாமல் முன்னேறுங்கள். திருக்குர்ஆனின் அழைப்பை நீங்கள் ஒருபோதும் ஏற்க மறுக்காதீர்கள். அது உங்களின் முன்னோர்களுக்கு அருளப்பட்ட அருட்கொடையை உங்களுக்கு அளிக்க விரும்புகின்றது.

திருக்குர்ஆனின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு ஒரு கண்ணியமிக்க அடையாளமான திருக்குர்ஆன் விரிவுரை என்ற அடையாளத்தை அல்லாஹ் வழங்கினான். அன்னாருடைய அனைத்துப் புத்தகங்களிலும் திருக்குர்ஆனுடைய விளக்கம் நீதிபதியைப் போன்று இருக்கின்றது. இதனால் அன்னாருக்கு கண்ணியம் வழங்கியவாறு திருக்குர்ஆனின் மொழியான அரபியில் திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாக சில புத்தகங்கள் எழுதும் நற்பேறு கிடைத்தது. மேலும் எதிரிகளை இதற்கு எதிராக விளக்கம் எழுதுவதற்கு அன்னார் (அலை) சவால் விடுத்தார்கள். ஆனால், எவருக்கும் அன்னாரை எதிர் கொள்வதற்கான தைரியம் ஏற்படவில்லை. பீர் மெஹர் அலி ஷா கோல்டவிக்கு தஃப்ஸீர் எழுதுவதற்கான சவால் விடுத்தவாறு அன்னார் (அலை) இஜாஸுல் மஸீஹ் என்ற பெயரில் அரபி மொழியில் சொற்செறிவும், ஞானமும் மிகுந்த சூரா ஃபாத்திஹாவின் விளக்கவுரையை எழுதினார்கள். இந்த புத்தகம் தொடர்பாக இல்ஹாம் இறங்கியது.

مَنْ قَامَ لِلْجَوَابِ وَ تَنَمَّرَ
فَسَوْفَ يَرَىٰ أَنَّهُ تَنَدَّمَ وَتَذَمَّرَ

அது எவர் ஒருவர் கோபத்தால் இந்த புத்தகத்திற்கு பதில் எழுதுவதற்காக தயாராகின்றாரோ அவர் விரைவில் வெட்கப்படுவார். மேலும் நஷ்டவாளியாக அவருடைய காலம் முடிவுக்கு வரும் என்பதை அறிந்து கொள்வார். இல்ஹாமில் சொல்லப்படுவதற்கு ஏற்றவாறு பீர் மெஹர் அலி ஷா கோல்டவிக்கு இதற்கு எதிராக விளக்கம் எழுத தைரியம் ஏற்படவில்லை. இறுதியாக வெட்கப்பட்டவராகவும் நஷ்டவாளியாகவும் தோல்வியின் முகத்தை பார்த்தார். இந்தப் புத்தகத்தின் அறிவு ஆழிய கருத்து போன்றவற்றை வெளிப்படையாக ஒப்புக் கொண்டவாறு அரபு நாட்டினுடைய பத்திரிகைகளும் எழுதியுள்ளன.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் அற்புதங்களின் நிழலில் எனக்கு உண்மைத்துவம் மற்றும் ஆழியச் செறிவின் அடையாளம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. எவராலும் இதை எதிர் கொள்ள முடியாது. (ஸூரத்துல் இமாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 13, பக்கம் 496 - 497)

மேலும் கூறுகின்றார்கள்: நான் பலமுறை கூறியிருக்கின்றேன். என்னுடைய எதிரியும் ஓர் அதிகாரத்திற்கு விளக்கம் எழுதட்டும். மேலும் நானும் விளக்கம் எழுதுகின்றேன். பிறகு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால், எவருக்கும் இதற்கான தைரியம் இல்லை. . இவருக்கு அரபி இலக்கண சீகா தெரியாது என்று முஹம்மது உசேன் பட்டாலவி போன்றோர் கூறியுள்ளனர். ஆனால், அவர்களிடம் புத்தகம் காண்பிக்கப்பட்டபோது, குழப்பி கிண்டப்பட்ட சட்னி என்று சாக்குப் போக்குகளை கூறி அவர்கள் விலகிக் கொண்டார். ஆயினும், ஒரு பக்கத்தையாவது எழுதி காண்பித்து அரபி இவ்வாறு இருக்க வேண்டும் என்று அவரால் நிரூபிக்க முடியவில்லை. நோக்கம் என்னவென்றால், இது என்னுடைய உண்மைத்துவத்திற்கான சிறப்பான அடையாளமாகும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 183)

கண்ணியமிக்க அவையோர்களே!

முந்தைய விரிவுரையாளர்கள் திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள நபிமார்கள் மற்றும் சமுதாயங்களின் சம்பவங்களை வெறும் ஒரு கதையாக கூறியிருந்தனர். அது மட்டுமின்றி சில வசனங்களுக்கு எவ்வாறான விளக்கங்களை வழங்கி இருந்தார்கள் என்றால் அதனால் நபிமார்களுக்கு கண்ணியக் குறைவு ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நபிமார்களுடைய கதைகளுக்கு அறிவு சார்ந்த மேலும் தத்துவங்கள் மூலமாக மேலும் முன்னறிவிப்புகளின் உருவத்தை தந்து திருக்குர்ஆனின் மகத்துவத்தையும், மேன்மையையும் அன்னார் (அலை) வெளிப்படுத்திக் காட்டினார்கள். மேலும் நபிமார்களின் கண்ணியத்தை

நிலைநாட்டினார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எந்த அளவிற்கு திருக்குர்ஆனில் கதைகள் உள்ளனவோ அவை கதைகள் அல்ல ; மாறாக முன்னறிவிப்புகளாகும். அவை உண்மையில் கதைகளின் வடிவத்தில் எழுதப்பட்டுள்ளன. நிச்சயமாக தவ்ராத்தில் வெறும் கதைகளே எழுதப்பட்டுள்ளன. ஆனால் திருக்குர்ஆனின் ஒவ்வொரு சம்பவமும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்திற்கான ஒரு முன்னறிவிப்பு ஆகும். இந்த சம்பவங்கள் முன்னறிவிப்புகளின் படி மிக உயர்வான பண்புகளின் அடிப்படையில் நிறைவேறியது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 271)

மேலும் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் தன்னுடைய அனைத்து போதனைகளை அறிவின் அடிப்படையிலும், தத்துவங்களின் அடிப்படையிலும் முன் வைக்கின்றது. எனவே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது தன்னுடைய கருணையை காட்டி இருக்கின்றது. அதாவது அவர்களுடைய போதனைகள் கதைகளாக சொல்லப்பட்டிருந்தன. அதற்கு அறிவுடன் தொடர்பு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. நான் உண்மையாகவே கூறுகின்றேன். எந்த நபரும் திருக்குர்ஆனை படிக்காத வரை இந்த சம்பவங்கள் மற்றும் கதைகள் மூலமாக ஈடேற்றம் அடைய முடியாது. ஆகையால் திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆனால் கதைகள் நிறைந்து இருக்கின்றன என்பதற்காக அல்ல. மாறாக ஒரு தத்துவம் கூறப்படுள்ளது என்பதை புரிந்தவாறு (ஓதுங்கள்) (மல்ஃபூஸாத், பாகம் 2, பக்கம் 113)

கண்ணியமிக்க அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் திருக்குர்ஆனில் உள்ள ஒரு மாபெரும் அறிவு சார்ந்த அற்புதம் அது திருக்குர்ஆனின் கண்ணியத்தை மிகவும் உயர்த்தக் கூடியதாக இருக்கின்றது. அதாவது பௌதீக, ஆன்மிக நிலைகளின் ஆறு படித்தரங்களை வெளிப்படுத்தியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

எந்த அளவிற்கு வேதங்கள் வானத்தின் வேதங்கள் என்று அழைக்கப்படுகின்றனவோ அல்லது எந்த ஞானிகள் ஆன்மா மற்றும் இறைவன் தொடர்பாக எழுதியுள்ளார்களோ மேலும் எந்த மக்கள் எல்லாம் ஸூஃபிகளின் நடைமுறையின்படி நுட்பமான ஞானத்தை எழுதியிருக்கின்றார்களோ அவர்களில் எவருடைய சிந்தனையும் இந்த விஷயத்தில் ஒருபோதும் முன்னேறி செல்ல முடியாது. அதாவது இந்த பௌதீக, ஆன்மிக போட்டிகளில் அவர்களால் தமது இருப்பை காண்பிக்க முடியாது. இந்த வாதத்தில் என்னுடன் யாருக்காவது கருத்து வேறுபாடு இருக்கின்றது என்றால், மேலும் பௌதீக ஆன்மிகப் போட்டியில் வேறு எவராவது இதை காண்பித்து இருக்கின்றார் என்று அவர் நினைக்கின்றார் என்றால், அவ்வாறான சூழலில் என்னுடைய பதில் என்னவென்றால் இந்த அறிவு சார்ந்த அற்புதத்தின் முன்னுதாரணத்தை வேறு ஏதாவது ஒரு வேதத்திலிருந்து அவர் காண்பிக்க வேண்டும். மேலும் நானும் தவ்ராத் மற்றும் இஞ்சீலையும், மேலும் இந்துக்களுடைய வேதங்களையும் பார்த்திருக்கின்றேன். ஆனால், உண்மையாகவே கூறுகின்றேன். இதுபோன்ற அறிவு சார்ந்த அற்புதங்கள் திருக்குர்ஆனை தவிர்த்து வேறு எந்த வேதத்திலும் இல்லை. (தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை), பாகம் 6)

இறைவா! உன்னுடைய ஃபுர்கான் ஓர் உலகமாகும்.. என்ன தேவைகள் இருக்கின்றதோ அவை அனைத்தும் இதில் கிடைக்கின்றது. உலகத்தில் எதனையும் இந்த ஒளியுடன் ஒப்பிடுவது சாத்தியமில்லை. ஒவ்வொரு பண்பிலும் ஒவ்வொரு கூற்றிலும் இது தனித்துவமாக இருக்கின்றது.

கண்ணியமிக்க அவையோர்களே!

இறுதியாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒரு மேற்கோளுடன் என்னுடைய இந்த உரையை நான் நிறைவு செய்கின்றேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்: ஒவ்வோர் அஹ்மதிக்கும் இன்றைய பொறுப்பு என்னவென்றால், இந்த மாபெரும் இறை வேதத்தை இந்த திருக்குர்ஆனை திலாவத்து செய்வதற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். உங்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உலகத்தையும் காப்பாற்றுங்கள். எந்த மக்களுக்கு இஸ்லாத்தின் பால் கவனம் ஏற்பட்டதோ ஆனால், அஹ்மதியாக ஆகவில்லையோ அவர்களில் பெரும்பாலானவர்கள் இறுதியில் உண்மையான இஸ்லாம் மற்றும் உண்மையை தேடியவாறு அஹ்மதிய்யத்தின் மடியில் வருவார்கள். இன்ஷாஅல்லாஹ்!

ஆகையால் ஒவ்வோர் அஹ்மதியும் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று இஸ்லாத்தின் எதிரிகளின் சக்திகள் எல்லாவிதமான விலங்குகள் மற்றும் அதிபயங்கரமான வளையங்களை பயன்படுத்த துடித்துக் கொண்டிருக்கின்றன. வீணானவற்றின் ஒரு புழுதிப்புயல் வீசிக் கொண்டிருக்கின்றது. ஆகையால் நம்முடைய வேலை முன்பை விட அதிகமாக இறைவனின் வார்த்தைகளை படிப்பதாகும். அதை புரிவதாகும். அதன் மீது ஆழ்ந்து சிந்திப்பதாகும். அதை கவனித்து அதனுடைய விஷயங்களை புரிந்து அதன் மீது அமல் செய்து முன்பை விட அதிகமாக இந்த வேதத்தை இறக்கக் கூடிய இறைவனின் பக்கம் குனிய வேண்டும். இதன் மூலமாக இந்த வேதத்தில் மறைந்து கிடக்கின்ற அந்த அருட்களை பெறக் கூடியவர்களாக நாம் திகழ்வோம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன். (குத்பா ஜுமுஆ மார்ச் 7, 2008)

ஞாபகத்தில் வையுங்கள். உயர்வான சிந்தனையை வையுங்கள்.

ஆகையால் உங்களுடைய பயணப் பொருளை வைத்துக் கொள்ளுங்கள்.

அன்பிற்குரியவர்களே! உண்மை நேர்மைக்கான மருந்தை கையில் வையுங்கள். இந்த நாள் அருளுக்கு உரியதாகும். என்னை பார்க்கக் கூடிய இறைவன் தூய்மையானவன் ஆவான்.

தமிழாக்கம்
மவ்லவி
M.`ஷஹாபுதீன்

* * * * * *

2ம் பக்கத் தொடர்ச்சி.........

## தலையங்கம்

இருப்பதாக முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அது உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள். அதாவது அன்னாரின் வருகை என்பது ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் நிழல் வடிவிலான வருகையே ஆகும். அன்னாரின் வருகை என்பது முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகையே ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

وَاٰخَرِيْنَ مِنْهُمْ

என்ற வசனத்தின் அடிப்படையில் நிழல் வடிவில் நான் அதே காத்தமுல் அன்பியா நபியாவேன். மேலும், இறைவன் இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்னரே பராஹீனே அஹ்மதிய்யாவில் எனக்கு முஹம்மத் என்றும் அஹ்மத் என்றும் பெயர் சூட்டியுள்ளான். மேலும் என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பாகவே ஆக்கியிருக்கின்றான். (ஏக் கலத்தி கா இஸாலா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 18)

ஹஸ்ரத் இமாம் முஹ்ய்யுத்தீன் இப்னு அரபி (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறுதிக் காலத்தில் தோன்றும் இமாம் மஹ்தி ஷரீஅத் கட்டளைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றக் கூடியவராக இருப்பார். மேலும் இறை ஞானத்திலும் கல்வியிலும் உண்மைத்துவத்திலும் அன்னாரை தவிர மற்ற அனைத்து நபிமார்களும், இறை நேசர்களும் அன்னாரை பின்பற்றக் கூடியவர்களாக இருப்பர்..... ஏனெனில், இமாம் மஹ்தியின் அக நிலை ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அக நிலையாக இருக்கும்.(ஷரஹ் ஃபுஸூஸுல் ஹிகம் மத்பத்துஸ் ஸாஹிர் மிஸ்ரியா, பக்கம்51)

ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

முஹம்மதிய்ய சமுதாயத்தில் தோன்றக் கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு இந்த தகுதி இருக்கின்றது. அதாவது நபிமார்களின் தலைவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒளிகளின் பிரதிபலிப்பு அவரிடத்தில் இருப்பதற்கு அவருக்கு தகுதி உள்ளது. அந்த வாக்களிக்கப்பட்டவர் உலகில் தோன்றும்போது அவருடைய அந்தஸ்து உம்மத்தைச் சார்ந்த ஒருவர் என்ற அந்தஸ்து மட்டுமே அவருக்கு இருக்கும் என்று பொது மக்கள் கருதுகின்றனர். அவ்வாறு ஒருபோதும் கிடையாது. மாறாக, அவரோ முஹம்மதிய்ய பெயருக்கான முழுமையான விளக்கமாக இருப்பார். மேலும், அன்னாருடைய இரண்டாம் பிரதியாக இருப்பார். எனவே அவருக்கும் உம்மத்தைச் சார்ந்த ஒரு சாதாரண நபருக்குமிடையில் மாபெரும் வித்தியாசம் உள்ளது. (ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹி) அவர்களின் நூல்: அல்கைருல் கஸீர், பக்கம் 72, மதீனா பிரஸ் பஜனூர்)

அல்லாஹ் நமக்கு ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயர் அந்தஸ்தை சரியான வடிவில் அடையாளம் காண்பதற்கான நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.

* * * * * *

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் வழிகாட்டல்களின் ஒளியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒளிமயமான எதிர்காலம்

(மதிப்பிற்குரிய முஸஃப்பர் அஹ்மத் நாஸிர் ஸாஹிப், நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)
காதியான் ஜல்ஸா -2023 சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِيْ ؕ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ
اَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ اللّٰهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِي السَّمَآءِ ۝ وَمَثَلُ كَلِمَةٍ خَبِيْثَةٍ كَشَجَرَةٍ خَبِيْثَةِ اجْتُثَّتْ مِنْ فَوْقِ الْاَرْضِ مَا لَهَا مِنْ قَرَارٍ

நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும், வெற்றிக்குரியவனுமாவான். (58:22)

(செவியேற்பவரே!) தூய்மையான வாக்கு பற்றிய உண்மை நிலையை அல்லாஹ் எவ்வாறு விளக்கியுள்ளான் என்பதனை நீர் காணவில்லையா? அது தூய்மையான ஒரு மரத்தைப் போன்றது. அதன் வேர் உறுதியாக (நிலைபெற்று) உள்ளது. அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது.

ஒவ்வொரு காலத்திலும், அது தன் இறைவனின் அனுமதியுடன் தனது (புத்தம் புதிய) பழத்தை வழங்குகின்றது. மக்கள் அறிவுரையினைப் பெற வேண்டுமென்பதற்காக அல்லாஹ் அவர்களுக்கு உவமைகளை விளக்குகின்றான். (14: 25 - 26)

அல்லாஹ்வின் புறமிருந்து அவனுடைய கட்டளைகளை எடுத்துக் கூறக் கூடிய ஒருவர் மக்களிடம் அனுப்பப்படும்போது, நானும் என்னுடைய தூதரும் வெற்றி பெற்றே தீருவோம் என்ற அல்லாஹ்வினுடைய தொன்று தொட்ட நடைமுறைக்கு ஏற்ப அல்லாஹ்வினுடைய இந்த நிரந்தர வாக்குறுதி ஆனது அவனுடைய நபி மற்றும் தூதர்களுக்கு ஆதரவாக நிறைவேறுவதற்கு உலகம் சான்று பகர்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவிலும், உலகம் முழுவதிலும் இஸ்லாத்தின் நிலை மிகவும் இழிவிற்குரியதாக இருந்தது. முஸ்லிம்கள் பெயரளவில் முஸ்லிம்களாகவே இருந்தனர். அவர்களின் ஈமான் மற்றும் செயல் ரீதியான பலவீனங்களைக் கண்டு, கிறிஸ்தவம் மற்றும் பிற மார்க்கங்கள் இஸ்லாத்தின் மீது நாலாப் புறமிருந்தும் தாக்குதல் தொடுத்தன. ஆனால் அதற்கு பதில் கூறும் தைரியம் கூட முஸ்லிம்களுக்கு இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உள்ளங்கள் எல்லாம் வல்ல இறைவனின் சன்னிதானத்தில் மனம் கலங்கி சிரம் பணிந்தன. இஸ்லாத்தின் இந்த மோசமான நிலையைப் பார்த்து வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உள்ளம் அமைதியற்றதாக காணப்பட்டது. அதன் காரணமாக இறைவனிடம் இவ்வாறு அன்னார் (அலை) கோரிக்கை வைத்தார்கள்:

மீண்டும் மார்க்கத்தின் வசந்த காலத்தை வெளிப்படுத்துவாயாக! என்னுடைய அன்பிற்குரிய அனைத்து ஆற்றல் வாய்ந்த (இறை)வனே! இன்னும் எதுவரை நாம் மக்களை வழிகேட்டில் நடத்தக் கூடிய நாட்களை பார்த்துக் கொண்டே இருப்பது!

முஸ்தஃபாவின் மார்க்கத்தை பலவீனமான நிலையில் என்னால் ஒருபோதும் காண முடியாது!

என்னுடைய அரசனே! என்னை என்னுடைய நோக்கத்தில் வெற்றி பெறக் கூடியவனாக ஆக்குவாயாக!

எனவே அல்லாஹ்வின் கருணையானது தன்னுடைய தன்மான உணர்வை வெளிப்படுத்தியது. மேலும் எல்லாம் வல்ல இறைவன் தனது வாக்குறுதியின்படி இஸ்லாத்தின் பாதுகாப்பையும் மறுமலர்ச்சியையும் நிறுவினான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கனவில் இவ்வாறு காண்கின்றார்கள்:

மக்கள் மார்க்கத்தை உயிர்ப்பிக்கக் கூடிய ஒருவரை தேடுகின்றார்கள். அப்போது ஒருவர் அன்னாரை சுட்டிக்காட்டி

هٰذَا رَجُلٌ يُحِبُّ رَسُوْلَ اللّٰهِ

(அதாவது இவர் தான் இறைவனின் தூதரை நேசிக்கும் மனிதர்) என்று கூறினார். அவ்வாறே ஒரு தோட்டம் நடப்படுவதைப் பற்றிய ஒரு (கஷ்ஃப் எனும்) ஆன்மிகக் காட்சி அன்னாருக்குக் காட்டப்பட்டது. மேலும் அன்னார் அந்தத் தோட்டத்தின் தோட்டக்காரராக நியமிக்கப்படுகின்றார்கள். 1882-ம் ஆண்டின் தொடக்கத்தில் அன்னாருக்கு அல்லாஹ்

قُلْ اِنِّيْ اُمِرْتُ وَ اَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ

என்ற இல்ஹாமை அருளினான்.

நீர் கூறுவீராக! எனக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. மேலும் நம்பிக்கையாளர்களில் நானே முதன்மையானவன் ஆவேன்.

இதுதான் அன்னார் இறைவன் புறமிருந்து வந்தவர் மற்றும் மார்க்கத்தை புதுப்பிக்கக் கூடியவர் என்பதற்கான முதல் இல்ஹாமாக இருந்தது.பின்னர் அல்லாஹ் அன்னார் மீது இதையும் தெளிவுபடுத்தினான். முஹம்மதிய்ய உம்மத்தில் எந்த இமாம் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் தோன்றுவார் என்ற வாக்குறுதி உள்ளதோ அந்த வாக்குறுதியானது அன்னாரின் வருகையின் மூலம் நிறைவேறியது. மேலும் அன்னாருக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உதவியாளர், இமாம் மஹ்மதி மற்றும் மஸீஹின் சாயலில் தோன்றியவர் என்ற அந்துஸ்தையும் இறைவன் வழங்கினான்.

எந்த நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) இறைவனின் அனுமதியுடன் அஹ்மதிய்யா இயக்கத்தை நிறுவினார்களோ அந்த ஆரம்ப காலகட்டத்தில் அன்னார் முற்றிலும் தனித்திருந்தார்கள். உலக ரீதியான எந்தவோர் உதவியும், ஒத்தாசையும் இல்லை. ஆனால், வானம் மற்றும் பூமியின் படைப்பாளன் மற்றும் அன்னாரை அனுப்பிய சர்வ வல்லமையுள்ள என்றும் அழிவே இல்லாத அந்த இறைவன் அன்னாருடன் இருந்தான். மீண்டும் இதே மறைவானவற்றை அறிகின்ற அந்த இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று அன்னார் இவ்வாறு அறிவித்தார்கள்:

இறைவன் எனக்கு மீண்டும், மீண்டும் இந்த செய்தியை வழங்கியுள்ளான். அவன் எனக்கு மிகுந்த கண்ணியத்தை அளிப்பான். மேலும் என்னுடைய அன்பை உள்ளத்தில் குடிபெயரச் செய்வான். என்னுடைய இயக்கத்தை பூமியில் உள்ள அனைத்து இடங்களிலும் பரவச் செய்வான். மேலும் அனைத்து பிரிவுகளின் மீதும் எனது ஜமாஅத்தை வெற்றி பெறச் செய்வான். என்னுடைய இயக்கத்தைச் சார்ந்த மக்கள் அறிவு மற்றும் இறை ஞானத்தில் எந்த அளவிற்கு முழுமை பெறுவார்கள் என்றால் தன்னுடைய உண்மையின் ஒளியைக் கொண்டும், தன்னுடைய சான்றுகள் மற்றும் அடையாளத்தைக் கொண்டும் அனைவரின் வாயையும் அடைத்து விடுவார்கள். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்தும். இந்த இயக்கம் மிக வேகமாக முன்னேற்றம் அடையும். மேலும் மலரும் எந்த அளவுக்கு என்றால் பூமியை முழுவதுமாக சூழ்ந்து விடும்................

இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறுகின்றான்; நான் உமக்கு அருள் மீது அருளை வழங்கிக் கொண்டே செல்வேன். எதுவரை என்றால் அரசர்கள் உம்முடைய ஆடையிலிருந்து அருட்களைத் தேடுவார்கள். (தஜல்லியாத்தே இலாஹிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 20, பக்கம் 409)

மீண்டும் அன்னார் மிகுந்த கம்பீரத்துடனும் எதிர்ப்பார்ப்புடனும் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் இறை உதவியின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்தவாறு இவ்வாறு அறிவித்தார்கள்:

பாருங்கள்! அந்த காலம் விரைந்து வரவிருக்கின்றது. மாறாக இன்னும் அருகில் உள்ளது. இறைவன் இந்த இயகத்தை உலகில் பெரும்பாலானோர் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பரப்பி விடுவான். மேலும் இந்த இயக்கமானது கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கில் பரவிவிடும். உலகில் இஸ்லாம் என்று கூறினாலே இந்த இயக்கம் தான் இருக்கும். இந்த விஷயங்கள் மனிதனுடைய விஷயங்கள் அல்ல. இது அந்த இறைவனின் வஹீயின் வார்த்தைகள் ஆகும். அந்த இறைவனிடமிருந்து எந்தவொரு விஷயமும் மறைவானதாக இல்லை. (தஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 17, பக்கம் 182)

### அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒளிமயமான எதிர்காலம்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எந்த இறைவன் பொய்க்கு எதிரானவனும் இட்டுக்கட்டு கூறுபவர்களை முற்றிலுமாக அழித்து விடுபவனுமாகவும் இருக்கின்றானோ அந்த கண்ணியம் மற்றும் வல்லமையுள்ள இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். நான் அவன் புறமிருந்தே வந்துள்ளேன். அவன் அனுப்பியதனாலே குறித்த நேரத்தில் நான் வந்துள்ளேன். அவனுடைய கட்டளைக்கு ஏற்பவே நான் நிற்கின்றேன். நான் எடுத்து

வைக்கின்ற ஒவ்வோர் அடியிலும் அவன் என்னுடன் இருக்கின்றான். அவன் ஒருபோதும் என்னை வீணாக்க மாட்டான். மேலும் அவன் எந்தப் பணியை செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளானோ அந்தப் பணியை முழுமைப்படுத்தும் வரை என்னுடைய ஜமாஅத்தை அழிவுக்கு உட்படுத்த மாட்டான். (அர்பயீன், பாகம் 2, ரூஹானீ கஸாயீன் தொகுதி 7, பக்கம் 348)

உண்மையைத் தேடுகின்றவர்களே! உங்களுக்கு வாழ்த்துகள்!என்னுடைய அன்பிற்குரியவன் முகத்தை காட்டக் கூடிய அந்த நாள் தற்போது அருகில் உள்ளது. மார்க்கத்தின் உதவிக்காக விண்ணில் ஒரு ஆக்ரோஷம் எழுந்துள்ளது; தற்போது இலையுதிர் காலம் கடந்து பழங்கள் கொடுக்கின்ற நாட்கள் வந்து விட்டன.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! 40 நபர்களைக் கொண்டு துவங்கப்பட்ட இந்த அஹ்மதிய்யா படை இன்று தன் எண்ணிக்கையில் கோடான கோடி வரை எட்டியுள்ளது. மேலும் ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. உலகில் அஹ்மதிய்யத்தின் செடி நடப்படாத எந்த ஒரு நாடும் இல்லை. தூய்மையான மரத்தைப் போன்று அதனுடைய வேர்களும் உலகிலுள்ள எல்லா திசைகளிலும் மிகுந்த உறுதியுடன் தடம் பதித்துள்ளது. அதனுடைய கிளைகள் உலகில் உள்ள எல்லா திசைகளிலும் நிழல் தருகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துகின்றது. சாதி, இனம், மதம் பேதமின்றி எந்தவொரு பாகுபாடுமின்றி அஹ்மதிய்யத் என்ற மரத்தின் அடர்ந்த நிழலின் கீழ் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதில் தழைத்துள்ளது. இறை உதவி மற்றும் ஒத்தாசைக்கான எண்ணற்ற அடையாளங்கள் உள்ளன. உண்மை என்னவென்றால் ஒவ்வொரு புதிய விடியலும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கான தூதுச் செய்தியை கொண்டு விடிகின்றது. மேலும் அஹ்மதிய்யத்தின் சூரியன் ஒருபோதும் அஸ்தமாவதே இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எப்படிப்பட்ட எதிர்பார்ப்பு மற்றும் கம்பீரத்தோடு இதனை கூறியுள்ளார்கள் என்று பாருங்கள்!

எல்லா மக்களும் இதை கவனமாகக் கேளுங்கள்! இது வானம் மற்றும் பூமியை படைத்த அந்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் தன்னுடைய இந்த ஜமாஅத்தை அனைத்து நாடுகளிலும் பரவச் செய்வான். சான்றுகள் மற்றும் அத்தாட்சிகளின் ஒளியில் அனைவரின் மீதும் இதை வெற்றி பெறச் செய்வான். அந்த நாள் வருகின்றது. மாறாக அருகில் இருக்கின்றது. உலகத்தில் கண்ணியத்துடன் நினைவு கூறப்படுகின்ற ஒரே மார்க்கம் இதுவாகத்தான் இருக்கும். இறைவன் இந்த மார்க்கம் மற்றும் இந்த இயக்கத்திற்கு மிகுந்த மேலான அந்தஸ்து மற்றும் வழக்கத்திற்கு அதிகமான அருளை வழங்குவான். மேலும் இதை அழிக்க வேண்டும் என எண்ணுகின்ற ஒவ்வொருவரையும் தோல்வி பெறச் செய்வான். மேலும் இந்த வெற்றியானது தொடரும். எதுவரை என்றால் கியாமத் வந்து விடும். தற்போது வரை மூன்று நூற்றாண்டுகள் இன்றைய தினத்திலிருந்து முழுமை அடைந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களாக இருக்கட்டும்; கிறிஸ்தவர்களாக இருக்கட்டும்; மிகுந்த அவநம்பிக்கை மற்றும் தப்பெண்ணம் கொண்டவாறு இந்த பொய்யான கோட்பாட்டை விட்டு விடுவார்கள். மேலும் உலகில் ஒரேயொரு மார்க்கம் தான் இருக்கும். ஒரேயொரு தூதர் தான் இருப்பார்.......... நான் ஒரு விதையை விதைப்பதற்காகவே வந்துள்ளேன். எனவே என்னுடைய கையினால் அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும்; அதை எவராலும் தடுக்க முடியாது (தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 66 -67)

**அஹ்மதிய்யா கிலாஃபத் குறித்த மகத்துவமான வாக்குறுதி**

நபிமார்களும் மனிதர்கள் ஆவர். தங்களுடைய இயல்பான வயதை அடைந்த பிறகு இந்த உலகத்தை விட்டு பிரிந்து செல்கிறார்கள். எனவே அவர்களுடைய அந்த இயக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் கிலாஃபத்தின் அமைப்பை நிறுவுகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

مَا كَانَتْ نُبُوَّةٌ قَطُّ إِلَّا تَبِعَتْهَا خِلَافَةٌ

எந்தவொரு நபித்துவத்திற்கு பிறகும் கிலாஃபத் நிலை பெறாமல் இருந்ததில்லை. (கன்ஸுல் உம்மால் ஹதீஸ் எண்: 32246) இந்த நடைமுறைக்கு ஏற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் தொடர் ஆரம்பமானது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு நற்செய்தி வழங்கியவாறு கூறுகின்றார்கள்: இரண்டாவது வல்லமையை காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை நாள் வரை துண்டிக்கப்படாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாம் வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாம் வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். பராஹீனே அஹ்திய்யாவில் உள்ள இறைவனின் வாக்குறுதியானது என்னைப் பற்றி அல்ல. மாறாக, அது உங்களைப் பற்றியதாகும். நான் உன்னை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான். எனவே என்னை பிரியும் நாள் உங்களுக்கு வர வேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். ( நூல்: உயில், பக்கம் 12 -13)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் திருக்குர்ஆனின் நற்செய்திகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மகத்துவம் வாய்ந்த காலகட்டம் ஆரம்பமானது. அதனுடைய ஐந்தாவது தோற்றமாக ஸய்யிதுனா வ இமாமினா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இன்று உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தை வழிநடத்துகின்றார்கள்.

**நபித்துவ வழியில் கிலாஃபத்தின் காலகட்டம்**

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! முன்னறிவிப்பிற்கு ஏற்ப இந்த அருளுக்குரிய கிலாஃபத்தின் காலட்டம் குறைந்தது ஓராயிரம் ஆண்டுகள் வரை நீடிக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஏழாவது ஆயிரம் இறைவன் மற்றும் அவனுடைய மஸீஹிக்குரியதாக இருக்கின்றது. மேலும் ஒவ்வொரு நன்மை, அருள், ஈமான், சீர்திருத்தம், இறையச்சம், ஏகத்துவம், இறை வணக்கம் மற்றும் அனைத்து விதமான நன்மை மற்றும் நேர்வழிக்கான காலகட்டமாகும். தற்போது நாம் ஏழாம் ஆயிரத்தின் துவக்கதில் இருக்கின்றோம். இதற்கு பிறகு வேறு எந்த மஸீஹூற்கும் தடம் பதிப்பதற்கான இடம் இல்லை. ஏனெனில், ஏழு காலகட்டம் தான் இருக்கின்றது. அது நன்மை மற்றும் தீமையைக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது. அந்த விநியோகத்தை அனைத்து நபிமார்களும் கூறியுள்ளார்கள். ........மேலும் அனைத்து நபிமார்களும் இறுதி மஸீஹ் தொடர்பாக எந்த அளவிற்கு கூறியுள்ளார்களோ உலகில் எந்தவொரு முன்னறிவிப்பும் இந்த அளவிற்கு தொடர்ச்சியாகவும் வலுவாகவும் கூறப்படவில்லை. (லெக்சர் லாஹூர், ரூஹானீ கஸாயின், தொகுப்பு, 20, பக்கம் 186)

மேலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: சூரத்துல் அஸ்ரில் உலகின் இருள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அது தொடர்பாக எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய இல்ஹாம் மூலம் எனக்கு அறிவித்திருந்தான். (அல் ஹகம் தொகுதி 6, பக்கம் 25, ஜூலை 17, 1902)

**முன்னேற்றத்திற்கான அனைத்து முன்னறிவிப்புகளும் கிலாஃபத் காலத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது**

அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இந்த மகத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் அந்த அனைத்து விதமான முன்னறிவிப்புகளும் முழுமையடைவது நிர்ணயிக்கப்பட்டதாக இருந்தது. அவை இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றியுடன் தொடர்புடையவையாகும். அவை உலகிலிருந்து இணை வைத்தலை ஒழித்து ஏகத்துவத்தை வெற்றி பெற செய்வதுடன் தொடர்புடையவையாகும். அவை உலகின் சாந்தி, சமாதானம் மற்றும் மனித குலத்தின் மகிழ்ச்சியுடன் தொடர்புடையவையாகும். ஏனெனில், அனைத்து முன்னறிவிப்புகளும் இந்த கிலாஃபத்தில் தான் முழுமையடைகின்றன. இது உலகின் எப்படிப்பட்ட இறுதியான காலகட்டம் என்றால் அதன் பிறகு எந்த ஒரு காலகட்டமும் இல்லை. ஆக, இந்த கிலாஃபத்தின் மூலமாக உலகம் முதலில் தோன்றியது போன்று மீண்டும் ஒருமுறை ஆதமின் சந்ததிகள் ஒரே கையின் கீழ் ஒன்றிணைந்து ஒரே குடும்பத்தை போன்ற தோற்றத்தை மேற்கொண்டு விடுவார்கள். இந்த கிலாஃபத்தின் மூலமாக இஸ்லாம் வெற்றி பெறும். அனைத்து பொய்யான மார்க்கங்களும் அழிந்து விடும் அல்லது வெறும் சம்பிரதாயமாக மட்டுமே எஞ்சி இருக்கும்.

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாக கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் முன்னறிவிப்புகள்**

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டல்**

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாம் மிகவும் நலிவடைந்த இந்த காலகட்டத்திலும் எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய ஒரு தூதர் மூலம் அவன் புறமிருந்து இஸ்லாத்திற்கான வெற்றி மற்றும் உதவியின் நேரம் மீண்டும் வந்து விட்டது என்ற நற்செய்தியை மீண்டும் வழங்கியுள்ளான். மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைவார்கள். மீண்டும் இஸ்லாமியர்களுக்குள் அதே ஆன்மிகத்தின் ஆன்மா ஊதப்படும். எவர்கள் ஆணவத்தை மேற்கொள்ளவில்லையோ அவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். மேலும் இறைவனுடைய பணிக்கு கண்ணியமளியுங்கள். அதன் மூலம் நீங்களும் கௌரவிக்கப்படுவீர்கள். (ஹகாயிகுல் ஃபுர்கான, தொகுப்பு 4, பக்கம் 533)

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டல்**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

தீர்மானிக்கப்பட்ட மற்றும் உறுதியான விஷயம் என்னவென்றால் சூரியன் மறையலாம். நட்சத்திரங்கள் தன்னுடைய இடத்தை விட்டு நகர்ந்து விடலாம். பூமி சுற்றுவதை நிறுத்தி விடலாம். ஆனால், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் வெற்றியில் தற்போது எந்தவொரு நபரும் தடை ஏற்படுத்த முடியாது. திருக்குர்ஆனின் கட்டளைகள் மீண்டும் நிலைநாட்டப்படும். அதன் மூலம் உலகம் தன்னுடைய கைகளினால் செய்த சிலைகள் அல்லது மனிதர்களை வணங்குவதை விட்டு விட்டு ஏக இறைவனை வணங்கும். உலகின் நிலை இந்த திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிராக இருந்தாலும் கூட இஸ்லாத்தின் ஆட்சி இஸ்லாமிய ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்படும். அதன் பிறகு மீண்டும் அதனுடைய வேரை அசைத்துப் பார்ப்பது மனிதனால் சாத்தியமே இல்லை. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், பக்கம் 324)

**ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டல்**

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒருநாள் வரும்:. எல்லாம் வல்ல இறைவனால் நிறுவப்பட்ட இயக்கமானது இவ்வளவு பெரிய ஆற்றல் வாய்ந்ததாக உள்ளதே! என்பதை மக்கள் வியப்புடன் காண்பார்கள். வெளிப்படையாக பார்க்கும்போது பலவீனமாக தென்படுகின்றனர். மேலும் செல்வத்திலிருந்தும் விலக்கப்பட்டு இருக்கின்றார்கள். காரணிகளிலிருந்தும் விலக்கப்பட்டிருக்கின்றார்கள். உலகின் கௌரவத்திலிருந்தும் விலக்கப்பட்டு இருக்கின்றார்கள். எல்லா புறமிருந்தும் தூற்றப்படுகின்றார்கள். இழிவுபடுத்தப்படுகின்றார்கள். மேலும் இந்த இயக்கத்தை உலகம் தன்னுடைய காலடியில் நசுக்க விரும்பியது. ஆனால், எல்லாம் வல்ல இறைவனின் அருளால் விண்ணின் உயரத்தை எட்டி விட்டது.

மேலும் அன்னார் இரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் வெற்றி தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் இதற்கு முன்னரும் பலமுறை கூறியுள்ளேன். என்னுடைய கணிப்பின்படி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாம் நூற்றாண்டானது இஸ்லாத்தின் வெற்றிக்கான நூற்றாண்டாகும். இதில் அனைத்து உலகிலும் இஸ்லாம் வெற்றி பெறும் முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரியே ; அஹ்மதிய்யா ஜமாஅத் செய்த அந்தத் தொண்டுகளை எடுத்துக் கூறியவாறு உண்மையிலேயே இந்த அஹ்மதிய்யா ஜமாஅத் தான் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக நிறுவப்பட்டுள்ளது என்று பறைசாற்றக் கூடியவர்களாக திகழ்வார்கள். மேலும் அது உலகத்தின் உள்ளங்களை வெற்றி கொண்டு முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பாதங்களில் சமர்ப்பித்து விடும். (துவக்கவுரை: ஆண்டு மாநாடு டிசம்பர் 26, 1978)

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் நற்செய்தி**

ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு நகரத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கொடி நாட்டப்படும்

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர்கள் நம்மை அழிக்க வேண்டும் என விரும்புகின்றார்களோ அது அந்த மக்களின் ஒருபோதும் நிறைவேறாத கனவாகும். எந்தக் கனவு பூர்த்தியாகும் என்றால் என்னுடைய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கனவு மட்டுமே பூர்த்தியாகும். அந்தக் கனவானது அன்னாரின் உண்மை பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் கனவாகும். முழு உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி நாட்டப்படும். மேலும் இஸ்லாத்தின் எதிரியின் அனைத்து கனவுகளும் நிறைவேறாமல் போய்விடும். தகர்க்கப்படும். அவர்கள் தோல்வி அடைந்தவாறு வெளியேறுவார்கள். மேலும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் நகரத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கொடி நாட்டப்படும். அதாவது அந்தக் கொடியானது உண்மையிலேயே ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கொடியாகும். இஸ்லாத்தின் அனைத்து எதிரிகளின் ஒவ்வொரு கனவும் முறியடிக்கப்படும். (அல்ஃபஸ்ல் நாளிதழ் ஜூன் 9, 1983)

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள்**

இந்த காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது.

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டின்போது ஆற்றிய உரையில் கூறுகின்றார்கள்:

இந்த காலகட்டம் எதில் ஐந்தாவது கிலாஃபத்துடன் கிலாஃபத்தின் புதிய நூற்றாண்டின் நாம் நுழைகின்றோமோ இன்ஷாஅல்லாஹ் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கான காலகட்டமாகும். நான் உங்களுக்கு நிச்சயம் உறுதி அளிக்கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உதவிகளின் எப்படிப்பட்ட கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. மேலும் திறக்கப்பட உள்ளது என்றால் ஒவ்வொரு வரக் கூடிய நாளும் ஜமாஅத்தின் வெற்றிக்களுக்கான நாட்கள் அருகில் உள்ளதை காண்பிக்கின்றது........ நான் மிகத் தெளிவான கண்ணோட்டத்துடன் கூறுகின்றேன். இந்தக் காலகட்டத்தில் எல்லாம் வல்ல இறைவனின் அளவில்லா உதவிகள் மற்றும் ஒத்தாசைகளை பெற்றவாறே முன்னேற்றத்தின் விசாலமான பாதையில் சென்று கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ். இந்த காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது. இனி எதிர்வரும் காலங்களிலும் இந்த முன்னேற்றம் ஒருபோதும் நின்று விடாது. கலீஃபாக்களின் தொடர்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். மேலும் அஹ்மதிய்யத்தின் பாதம் முன்னே சென்று கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ். (மே 27, 2008 கிலாஃபத் நூற்றாண்டு தினம் அன்று ஆற்றிய சொற்பொழிவு)

தமிழாக்கம்
மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * *

24ம் பக்கத் தொடர்ச்சி.........
**விகிதாச்சார சந்தா & வஸிய்யத் சந்தா**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கூற்றிற்கேற்ப, ஏற்பட்டுள்ள இந்த சோம்பல் மற்றும் அலட்சியத்திற்காக இஸ்திக்ஃபார் செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது குரலுக்கு லெப்பைக் என்று கூறியவாறு விரைவில் இந்த வஸிய்யத் அமைப்பில் இணைந்து விடுங்கள். மேலும் உங்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; உங்களது சந்ததிகளையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் அருட்களிலும் பங்கு பெறுங்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை தந்தருள்வானாக. ஆமீன்.

(2004-ம் ஆண்டு யூ.கே ஜல்ஸா ஸாலானாவின் நிறைவுரை)

* * * * *

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

## இறையருட்களின் பொலிவும் அஹ்மதிய்யா இயக்கத்தின் முன்னேற்றங்களும்

(மவ்லானா அதாவுல் முஜீப் லோன் ஸாஹிப், முதல்வர்- ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான்)

காதியான் ஜல்ஸா -2023 சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اِنَّا لَنَنْصُرُ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا فِي
الْحَيٰوةِ الدُّنْيَا وَيَوْمَ يَقُوْمُ الْاَشْهَادُ

அவனது அருளினால் ஒரு துளி நதி ஆகிவிட்டது. நான் மண்ணாக இருந்தேன். அவன்தான் என்னை கார்த்திகை நட்சத்திரமாக ஆக்கிவிட்டான்.

கண்ணியத்திற்குரிய கூட்டத்தின் தலைவர் மற்றும் அவையோர்களே! நீங்கள் செவிமடுத்ததைப் போன்று இறையருட்களின் பொலிவும், அஹ்மதிய்யா இயக்கத்தின் முன்னேற்றங்களும் என்பது எனது சொற்பொழிவின் தலைப்பு ஆகும்.

தனது தூதர் மற்றும் நம்பிக்கையாளர்களுக்குமான அடையாளங்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருக்கின்றான். அவற்றில் மிகவும் பிரகாசமான, ஒளிமயமான ஓர் அடையாளம் இறை உதவி மற்றும் இறையருட்கள் என்பதாகும். இது ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு கிராமத்திலும் தென்படுகின்றது. இந்த வகையில் அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّا لَنَنْصُرُ رُسُلَنَا وَالَّذِيْنَ اٰمَنُوْا فِي الْحَيٰوةِ
الدُّنْيَا وَيَوْمَ يَقُوْمُ الْاَشْهَادُ

(சூரா அல் மூமின்: 52)

நாம் எமது தூதருக்கும், அவர் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களுக்கும் இவ்வுலகில் நிச்சயமாக உதவி புரிவோம். மேலும் அவர்கள் சாட்சியாக நிறுத்தப்படும் நாளிலும் (உதவி) புரிவோம்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَقَدْ سَبَقَتْ كَلِمَتُنَا لِعِبَادِنَا الْمُرْسَلِيْنَ ﴿۱۷۲﴾
اِنَّهُمْ لَهُمُ الْمَنْصُوْرُوْنَ ﴿۱۷۳﴾
وَاِنَّ جُنْدَنَا لَهُمُ الْغٰلِبُوْنَ ﴿۱۷۴﴾

அதாவது நமது அடியார்கள் அதாவது நபிமார்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது ஏற்கனவே நமது முடிவு ஆகிவிட்டது. மேலும் நமது படையே (மூமின்களின் கூட்டமே) வெற்றி பெறும்.

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَ رُسُلِيْ اِنَّ اللّٰهَ قَوِيٌّ عَزِيْزٌ

தானும் தனது தூதர்களும் நிச்சயமாக வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் கொண்டோனும், வெற்றிக்குரியவனுமாவான்.(அல்முஜாதிலா: 22)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கருணையாளனும், அன்பாளனுமான அந்த இறைவன் மீது ஆணை! அவன் பொய்யின் பகைவன் ஆவான். பொய்யர்களை அழிக்கக் கூடியவன் ஆவான். நான் அவன் புறமிருந்தே வந்துள்ளேன். அவன் அனுப்பியதால் குறித்த நேரத்தில் வந்துள்ளேன். அவனது கட்டளைக்கு ஏற்ப நான் நிற்கின்றேன். எனது ஒவ்வோர் அடியிலும் அவன் என்னுடன் இருக்கின்றான். அவன் என்னை வீணாக்க மாட்டான். அவன் எதை நாடியுள்ளானோ அந்த அனைத்து வேலைகளையும் முழுமையடையச் செய்யாமல் எனது ஜமாஅத்தை அவன் அழிவிற்குள்ளாக்க மாட்டான். (அர்பாஈன், பகுதி 2, ரூஹானீ கஸாயீன் தொகுதி 17, பக்கம் 348)

ஈமான், உறுதி, தைரியம் மற்றும் கம்பீரம் வாய்ந்த இந்த அருளுக்குரிய சொற்கள் இக்காலத்தில் அல்லாஹ் மனிதகுலத்தின் நேர்வழிக்காக அனுப்பிய அந்த பரிசுத்தமானவரின் அருளுக்குரிய வார்த்தைகள் ஆகும்.

1882-ம் ஆண்டின் ஆரம்பத்தில் அல்லாஹ் அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக

قُلْ اِنِّيْ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ

என்று அறிவித்தான். இது அன்னாரது மாமூரிய்யத் மற்றும் முஜத்தித்திய்யத்துடைய முதல் இல்ஹாம் ஆகும். இதன் பின்னர் அல்லாஹ் அன்னாருக்கு இதனையும் வெளிப்படுத்தினான். அதாவது உம்மத்தே முஹம்மதிய்யாவில் எந்த இமாம் மஹ்தி குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டதோ அது அன்னாரின் இருப்பில் முழுமையடைந்தது. அன்னாருக்கு ரஸூல் (ஸல்) அவர்களின் பிரதிநிதித்துவத்தில் இமாம் மஹ்தி மற்றும் ஒப்புமையான மஸீஹுடைய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

1889-ம் ஆண்டு மார்ச் 23-ம் நாள் இஸ்லாத்தின் வரலாற்றில் பொன்நாளும், அருளுக்குரிய நாளுமாகும். அன்றைய நாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 40 தூய நபர்களிடத்தில் பைஅத் வாங்கினார்கள். மேலும் இறுதிக் காலகட்டத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட அந்த தூய ஜமாஅத்தும் உருவானது.

எந்தநேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளைக்கேற்ப தோன்றினார்களோ அன்றைய காலத்தின் ஆரம்பத்தில் அன்னார் (அலை) முற்றிலும் தனியாக இருந்தார்கள். உலக உதவியாளரும், நண்பர்களும் எவரும் இருக்கவில்லை. இதனை அன்னார் (அலை) ஒரு கவிதை வரியில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் ஏழையாகவும், ஆதரவற்றவனாகவும், அறியப்படாதவனாகவும், திறமையற்றவனாகவும் இருந்தேன். காதியான் எங்கு இருக்கின்றது என்று எவரும் அறிந்திருக்கவில்லை.

இது எப்படிப்பட்ட காலமாக இருந்ததென்றால் காதியானின் பெயரை கூட மக்கள் அறியாமல் இருந்தனர். ஆனால், அந்த காலத்திலும் கூட வானம் பூமியின் படைப்பாளனும், வல்லமையும் ஆற்றலும் படைத்த அன்னாரை அனுப்பிய இறைவன் அன்னாருடன் இருந்தான். மேலும் அன்னாருக்கு வாக்குறுதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

நான் பூமியின் எல்லை வரை உமது தூதுச் செய்தியை எட்ட வைப்பேன். நான் உமக்கு அருளுக்கு மேல் அருள் புரிவேன். எந்த அளவுக்கு என்றால் அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருள் தேடுவார்கள்.

يَاْتِيْكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ
وَيَاْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ

உம்மை நோக்கி மக்கள் எந்தளவு வருவார்கள் என்றால் பாதைகள் பள்ளம் ஆகிவடும்.

ينصرك رجال نوحى اليهم من السماء

உமக்கு வானத்திலிருந்து நாம் வஹீ இறக்கக் கூடிய மக்கள் உதவி செய்வார்கள்

இந்த வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ் மழையைப் போன்று தனது அருட்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீதும் அன்னாரது ஜமாஅத்தின் மீதும் இறக்கினான். மேலும் இறக்கிக் கொண்டே செல்கின்றான்.

அன்னாருக்கு அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி முழுமையடைவது மற்றும் ஜமாஅத் மீது இறையருட்கள் இறங்குவதில் எந்த அளவு உறுதியான நம்பிக்கை இருந்ததென்றால் அன்னார் (அலை) இது பற்றி கூறுகின்றார்கள்: நான் உம்முடன் இருக்கின்றேன்; மேலும் எனது வானத்தின் படைகளும் உம்முடன் இருக்கின்றன என்று இறைவன் ஆறுதல் வழங்காத இரவுகள் என் மீது மிகக் குறைவாகவே கழிந்துள்ளன. (அடிக்குறிப்பு தஹ்ஃபா கோல்டுவிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 17, பக்கம் 49)

அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முன்னறிவிப்புக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் மீது இறையருட்களின் பொழிவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, அன்னாரது மகத்தான கலீஃபாக்களின் காலத்திலும் தொடர்ந்தது. தற்போது நாம் நமது கண்களால் ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலகட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளாக அந்த அருட்களை நமது கண்களால் கண்டு வருகின்றோம். இங்கு இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ள நம்மில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்திற்கு சாட்சிகளாக இருக்கின்றோம். அதாவது ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலகட்டத்தில் அல்லாஹ் தனது மஸீஹிடம் செய்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றினான். மேலும் நிறைவேற்றி வருவான்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இறையருட்களின் பொழிவு மற்றும் ஜமாஅத்தின் முன்னேற்றம் ஒரு முடிவில்லா கரைகளைக் கொண்ட கடலைப் போன்றதாகும். அதன் ஆழம் மற்றும் அதன் விசாலம் எந்த அளவு பெரியது என்றால் அதன் எல்லையை அடைவது ஒரு சாதாரண மனிதனால் முடியாததாகும். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் ஜமாஅத்தின் மீது இறையருட்களின் பொழிவு மற்றும் ஜமாஅத்தின் முன்னேற்றம் போன்றவற்றை ஆய்வு செய்தால் எவ்வளவு பெரிய காட்சியாக அது தென்படும் என்றால் மனிதகுலம் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விடும். இந்தக் காட்சி ஒருநாள்; இரண்டு நாள்; ஒரு வருடம்; இரண்டு வருடம் அல்ல ; மாறாக, கடந்த

134 வருடங்களாக சீறும் அலைகளைக் கொண்ட கடலாக இருக்கின்றது. அதனை பார்க்கும்போது கண்கள் மூடிக் கொள்கின்றன.

### ஆன்மிகப் புரட்சி

அவையோர்களே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்கள் எந்த ஆன்மிகப் புரட்சிக்காக தோன்றினார்களோ அந்தப் புரட்சியை நடைமுறையில் கொண்டு வருவதற்காக அல்லாஹ்வின் எப்படிப்பட்ட உதவியும், ஆதரவும் இருந்ததென்றால் அதன் காரணமாக உருவான ஆன்மிகப் புரட்சியின் உதாரணங்கள் கடந்த 1400 வருடங்களில் எங்கும் தென்படவில்லை. காதியான் போன்ற அறியப்படாத ஊரில் இருந்து ஒளியின் எப்படிப்பட்ட கதிர்கள் வெளிப்பட்டதென்றால் அதன் வேகம் சிறிது சிறிதாக முழு உலகையும் முஹம்மதின் ஒளியினால் நிரப்பி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்

يُحْيِ الدِّيْنَ وَ يُقِيْمُ الشَّرِيْعَه

இஸ்லாமை உயிர் பெறச் செய்வதற்காகவும், உண்மையான முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை நிலைபெற செய்வதற்காகவும் தோன்றினார்கள். அன்னாரது வருகையின் மூலம் அஹ்மதிய்யத் ஷிர்க் எனும் இணை வைத்தலின் வேரை அறுத்தது. மேலும், உண்மையான ஏகத்துவத்தை உலகில் நிலைபெற செய்தது. உலகிலிருந்து குழப்பம், தவறான கொள்கைகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களை களைந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்ததன் காரணத்தினால் ஜமாஅத் உறுப்பினர்கள் மீது அல்லாஹ்வின் எப்படிப்பட்ட அருட்கள் இறங்கின என்றால் அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அடையாளம் காட்டிய உயிருள்ள மற்றும் உண்மையான இறைவனை பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் இதற்கு முன்பு நாத்திகத்தின் காற்றினால் தாக்கத்திற்கு ஆளாகியிருந்தனர். மாறாக, நாத்திகர்களாகவே ஆகிவிட்டிருந்தனர். ஆனால் அல்லாஹ்வின் அருளினால் மீண்டும் இறைவனின் பக்கம் வந்தனர். எப்படி வந்தனர் என்றால் இறைவனுடன் பேசினார்கள். இறைவனது உயிருள்ள மற்றும் புத்தம் புதிய அடையாளங்களை தங்களது கண்களால் கண்டனர். அவர்கள்

أُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ

.என்ற காட்சியை சுயம் கண்டனர். ஆன்மிகக் காட்சிகள் காணக் கூடிய இல்ஹாம் இறங்கக் கூடிய மக்களாக ஆகினர். இறை நெருக்கம், இறை சந்திப்பின் இனிய பானங்களை அருந்தினர். இறைவனை அறியாமல் இருத்ததிலிருந்து இறைவனை அறிபவர்களாக எப்படி மாறினார்கள் என்றால் இறையடியார்களாக மட்டும் மாறவில்லை. மாறாக, இறைவன் வெளிப்படுபவர்களாக ஆனார்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழிக்கு காரணியாகவும் ஆனார்கள்.ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றி கூறினார்கள்:

நான் ஆயிரக்கணக்கில் பைஅத் செய்த மக்களில் எந்த அளவு மாற்றத்தை காண்கின்றேன் என்றால் மூஸா நபியின் காலத்தில் அன்னார் மீது நம்பிக்கை கொண்டு அன்னாரை பின்பற்றியவர்களை விட ஆயிரம் மடங்கு சிறந்தவர்களாக கருதுகின்றேன். அன்னாரது ஸஹாபிகளின் நம்பிக்கை மற்றும் திறமையின் ஒளியினைப் பார்க்கின்றேன்....... எனது ஜமாஅத் எந்த அளவு நன்மை மற்றும் திறமையில் முன்னேறியிருக்கின்றது என்றால் இதுவும் ஓர் அற்புதம் ஆகும். ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தால் அர்ப்பணமாகியுள்ளனர். இன்று அவர்களிடம் நீங்கள் உங்கள் அனைத்து பொருட்களையும் விட்டு விடுங்கள் என்றால் அவர்கள் விடுவதற்கு உடனே ஆயத்தமாகியிருக்கின்றனர். (அல்ஃபஸ்ல், செப்டம்பர் 21, 2006)

### இறைவனது கரத்தினால் நடப்பட்ட செடி

அவையோர்களே! அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இறைவனது அருட்களின் பொழிவின் ஒரு பகுதி இதுவும் ஆகும். அதாவது அதிகமான பகைமைகள் இருந்தும் அல்லாஹ் மகத்தான முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே செல்கின்றான். திருக்குர்ஆனில் அதிகாரம் ஃபத்ஹ்வில் இறை ஜமாஅத்தின் துவக்கத்தின் உதாரணம் ஒரு பலவீனமான விதையைப் போன்று கூறப்பட்டுள்ளது. அது ஒரு கதிர் போன்று முளைக்கும்.பிறகு சிறிது சிறிதாக ஒரு பரந்து விரிந்த மரமாக உருவெடுக்கும். அதை கண்டு அதற்கு நீர் பாய்ச்சும் மூஃமின் ஜமாஅத் மகிழ்ச்சி கொள்கிறது. ஆனால், காஃபிர்கள் கோபம் மற்றும் ஆவேசத்திலும் அதிமாகின்றார்கள்.

ஒருவேளை ஜமாஅத் இறைவனது கைகளினால் உருவாக்கப்பட்ட செடியாக இல்லாமல் இருந்திருந்தால் மாறாக ஏதோ ஒரு மனிதனால் உருவாக்கப்பட்டிருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மரணித்த உடனேயே இது அழிந்து போயிருக்கும். இதைப் பற்றி வஃபாதார் பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது: மிர்ஸா ஸாஹிபிற்கு பிறகு ஜமாஅத் அழிந்து போய் விட்டது என்றால் பின்னர் மிர்ஸா ஸாஹிப் பொய்யர் ஆவார் என்று புரிந்து கொள்ளுங்கள்.(நவூதுபில்லாஹ்) ஆனால் முன்னேற்றம் அடைந்தால் அதன் பின்னர் அவரது பிரதிநிதி அல்லது அவரது ஜமாஅத் அவரது அன்பில் முன்னேறினார்கள் என்றால் மிர்ஸா ஸாஹிப் உண்மையாளர் ஆவார் என்று புரிந்து கொள்ளுங்கள். அவர் இறைவனது இல்ஹாமினால் அருள் பெற்றவராவார். மேலும் அவருடைய ஜமாஅத் அல்லது அவரது பிரதிநிதிகள் அழிந்து கொண்டே சென்றார்கள் என்றால் அல்லாஹ்விற்கு இப்படிப்பட்ட மார்க்கப் பிளவு ஒருபோதும் விருப்பமானதல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள். (வஃபாதார் பத்திரிகை, லாஹூர் 14, ஜூலை 1908)

அவையோர்களே! அஹ்மதிய்யத்தின் இந்த மரம் கதிராக இருந்த சமயத்தில் இதனை நசுக்குவதற்கும், கசக்குவதற்கும் பகைவர்களும், நிராகரிப்பாளர்களும் உச்சபட்ச முயற்சியை செய்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்திலும் அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களின் காலத்திலும், தற்போது ஐந்தாவது கிலாஃபத்தின் காலத்திலும் இந்த முயற்சிகளை செய்தனர். தற்போதும் செய்து வருகின்றனர். ஆனால், இறை வாக்குறுதிக்கேற்ப இந்த கதிர்கள் வளர்ந்து பூக்கவும் படரவும் செய்தன. ஒருபுறம் நிராகரிப்பாளர்கள் கோபத்திலும், ஆவேசத்திலும் முன்னேறிக் கொண்டே சென்றனர். ஆனால், மறுபுறம் இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப அஹ்மதிய்யத்திற்கு ஆதரவாக தனது உதவி மற்றும் ஆதரவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். தனது அழிவில்லாத அருட்கள் மற்றும் பரக்கத்துகளை ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு நாளும் காட்டிக் கொண்டே இருந்தான். மேலும் காட்டிக் கொண்டே செல்கின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)அவர்கள் பகைவர்களை நோக்கி எவ்வளவு கம்பீரத்துடன் கூறுகின்றார்கள்:

உங்களது கடுமையான பகைமை மற்றும் எதிரான துஆக்கள் இருந்தபோதிலும் அவன் என்னை விட்டுவிடவில்லை என்பதை பாருங்கள். ஒவ்வோர் இடத்திலும் எனக்கு உதவியாளனாக இருந்திருக்கின்றான். என் மீது எறியப்பட்ட கற்களை அவன் தனது கையில் தாங்கினான். என் மீது எய்யப்பட்ட ஒவ்வோர் அம்பையும் அவன் எதிரிகளின் பக்கம் திருப்பினான். நான் ஆதரவற்று இருந்தேன். அவன் எனக்கு அடைக்கலம் கொடுத்தான். நான் தனித்தவனாக இருந்தேன். அவன் என்னை அரவணைத்தான். நான் ஒன்றுமற்றவனாக இருந்தேன். அவன் எனக்கு கண்ணியத்துடன் புகழை வழங்கினான். இலட்சக்கணக்கான மனிதர்களை என்னை நேசிக்கும்படி செய்தான்......

பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடும்போது எந்த அளவு அறியப்படாதவனாக நான் இருந்தேன் என்றால், அமிர்தசரஸில் ஒரு பாதிரியின் அச்சகம் இருந்தது. அதன் பெயர் ரஜப் அலி ஆகும். அங்குதான் எனது நூல் பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடப்பட்டது. நான் அதன் புரூஃப் பார்ப்பதற்காக தனியாகவே அமிர்தசரஸ் சென்று திரும்பி வருவேன். நான் வரும்போதும் செல்லும்போதும், நீர் யார்? என்று என்னை எவரும் கேட்டதில்லை. என்னை யாரும் அறிந்திருக்கவும் இல்லை. மேலும் எனக்கு எந்த பெரிய அந்தஸ்து இருந்திருக்கவுமில்லை. அந்த பாதிரி மிகவும் ஆச்சரியத்துடன் அந்த முன்னறிவிப்புகளை படித்து விட்டு, ஒரு சாதாரண மனிதனின் பக்கம் ஓர் உலகம் திரும்பும் என்பது எவ்வாறு சாத்தியம் என பேசிக் கொண்டிருப்பர். ஆனால், அந்த விஷயம் இறைவன் தரப்பலிருந்து நிறைவேறியது. நிறைவேறிக் கொண்டும் இருக்கின்றது. (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானீ கஸாயீன் தொகுதி 21, பக்கம் 79 -80)

### கிலாஃபத் அஹ்மதிய்யாவின் காலகட்டங்களில்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முதல் கிலாஃபத் காலகட்டத்திலும் மனித கிலாஃபத்திற்கான ஆட்சேபனையை வைத்து பிளவு ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது. இரண்டாவது கிலாஃபத் காலத்தில் ஒன்றிற்கு பிறகு மற்றொன்று என பல்வேறு குழப்பங்கள் தலை தூக்கின. அஹ்ராரிகளுடைய குழப்பம் எழுந்தது. முழு நாட்டிலும் எதிர்ப்பு உருவானது. மூன்றாவது கிலாஃபத் காலத்தில் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு எதிராக அநீதியான சட்டங்கள் உருவாக்கப்பட்டதற்கு பகைவர்கள் மேளங்கள் கொட்டினர். ஜமாஅத்தின் கையில் பிச்சை பாத்திரம் ஏந்த வைக்கப்படும் என்று கூறப்பட்டது. நான்காவது கிலாஃபத் காலத்தில் மற்றொரு அநீதியாளன் மற்றும் கொடுங்கோல் ஆட்சியாளன் கருப்பு சட்டத்தை கடுமையாக அமல்படுத்தி ஜமாஅத்தினை அழிக்க முயற்சி செய்தான். அஹ்மதிய்யத்தை (நவூதுபில்லாஹ்) ஒரு புற்றுநோய் எனக்

கூறி அதனை வேரோடு பிடுங்குவதற்கான சபதம் செய்யப்பட்டது. தற்போது ஐந்தாவது கிலாஃபத் காலத்தில் பல்வேறு சாக்குபோக்குகளை கூறி ஜமாஅத் உறுப்பினர்களுக்கு கஷ்டம் கொடுக்க முயற்சிக்கப்படுகின்றது. தற்போது வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் சுமார் 100 பேர் வரை ஷஹீதாக்கப்பட்டுள்ளனர்.

**நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் 1898-ம் ஆண்டு இல்ஹாம் மூலமாக நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று கூறினான். இந்த இல்ஹாமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதாகும். உலகில் அஹ்மதிய்யத்தின் ஒளி சென்றடையாத எந்த மூலை உள்ளது! எந்த எல்லையுள்ளது? இந்த இல்ஹாமினை முழுமை செய்யும் வழியாக.

و اشرقت الارض بنور ربها

என்ற அல்லாஹ்வின் நற்செய்தி முழுமையடையாமல் இல்லை.

ஓர் அஹ்மதியல்லாத மவ்லவி கூறுகின்றார்: நாங்கள் மலேசியா சென்றோம். அங்கு காதியானிகள் உள்ளனர். இந்தோனேஷியா சென்றோம்; அங்கு காதியானிகள் உள்ளனர். உலகின் தெற்கில் கடைசி எல்லை கேப்வுண் சவுத் ஆஃப்ரிக்காவின் நகரம் உள்ளது.அங்கு காதியானிகள் உள்ளனர். எனது தந்தை, எனது சகோதரர் ஜாவேது வடக்கின் கடைசிப் பகுதி நார்வே சென்றனர். அங்கும் காதியானி; உலகின் கிழக்குப் பகுதியின் கடைசி எல்லை யல்யா, ஃபிஜீ தீவு அங்கும் காதியானி இருக்கின்றனர். உலகின் மேற்குப் பகுதியின் எல்லை கானா அங்கு காதியானி இருக்கின்றனர். (அல்ஃபஸ்ல் ஆன்லைன் நான் உனது தூதுச் செய்தியை உஷ்கின் எல்லை வரை எட்ட வைப்பேன்)

அல்லாஹ்வின் அருளால் இன்று ஜமாஅத்தின் தூதுச் செய்தியை உலகின் எல்லை வரை சென்றடைய வைப்பதில் மிக அதிகமாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தான் பணியாற்றி வருகின்றார்கள். இவ்வகையில் அன்னாரது குத்பாக்கள், சொற்பொழிவுகள், ஜல்ஸா ஸாலானா சமயத்தில் ஆற்றும் உரைகள், விர்சுவல் சந்திப்புகள், பல்வேறு நாடுகளின் சுற்றுப் பயணம், பிரஸ் கான்பிரன்ஸ், அமைதி கருத்தரங்கம், உலகின் சபைகளில் சொற்பொழிவுகள் மூலம் இதற்கான முன்மாதிரியை நிலைநாட்டுகின்றார்கள். மேலும் உலகில் 11 ஜாமிஆக்களில் கல்வி கற்று வெளிவரும் முபல்லிஃக்குகள், வாக்ஃபீனே நவ் பிள்ளைகள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள், இந்த பணிக்காக அன்னாருக்கு உதவியாளர்களாக இருக்கும் கடமையை நிறைவேற்றுகின்றார்கள்.

கித்மத்தே கல்க் மைதானத்தில் அல்லாஹ்வின் அருளினால் ஜமாஅத்திற்கு கிடைத்துக் கொண்டிருக்கும் வரவேற்பு மறைவாக இல்லை. நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 12 நாடுகளில் 37 மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்கில் 50-க்கும் அதிகமான மருத்துவர்கள் கித்மத்தேகல்கின் மகத்தான கடமையை ஆற்றுகின்றனர். ஐந்தாவது கிலாஃபத் காலத்தில் 300-க்கும் மேற்பட்ட பள்ளிக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த திட்டத்தின் கீழ் 680 -க்கும் மேற்பட்ட பள்ளிக் கூடங்களில் ஏழை நாடுகளில் அறிவின் ஒளியை ஜமாஅத் பரப்புகின்றது. மனிதம் முதலில் என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு 60 நாடுகளில் பதிவு செய்யப்பட்டு மனித குலத்தின் பணிகளில் உலகளாவிய அளவில் அசாதாரண சேவை செய்வதற்கான நற்பேறை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ينصرك رجال نوحي اليهم من السماء

(கனவுகள் மற்றும் ஆன்மிகக் காட்சிகள் மூலம் அஹ்மதிய்யத்தை ஏற்கும் காட்சிகள்)

சகோதரர்களே! அஹ்மதிய்யா இயக்கத்தின் முன்னேற்றங்களில் தப்லீஃக் களத்தில் இறையருட்கள் இறங்குதல் மற்றும் இறையுதவி என்பது ஒரு பகுதியாக இருக்கும் பட்சத்தில் அஹ்மதிய்யத்தை ஏற்பதில் கனவு மற்றும் ஆன்மிகக் காட்சிகள் மூலமாக அல்லாஹ்வின் வழிகாட்டல் என்பது மற்றொரு பகுதியாக இருக்கின்றது.

ஹுஸுர் அன்வர் தனது குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளில் எடுத்துரைத்த நூற்றுக்கணக்கான சம்பவங்களில் ஒன்றை மட்டும் எடுத்துரைக்கின்றேன். ஹுஸுர் அன்வர் மே 27,2022-ம் ஆண்டு ஜுமுஆ குத்பாவில் ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்: கெனீ பஸாவ் ஆஃப்ரிக்காவின் ஒரு தொலை தூரப் பகுதியில் இருக்கும் ஊர் ஆகும். அப்துல்லாஹ் ஸாஹிப் என்ற ஒருவர் இருக்கின்றார். இவர் முதலில் கிறிஸ்தவராக இருந்தார். அவர் கூறுகின்றார்: சில நாட்களுக்கு முன்பு கனவில் ஒரு வெள்ளை நிற தாடியைக் கொண்ட ஒரு மனிதர் தலைப்பாகை அணிந்திருந்ததைக் நான் கண்டேன். அவர் மக்களிடம் சொற்பொழிவு ஆற்றுகின்றார். மிகவும் அமைதியுடன் மக்கள் அந்த சொற்பொழிவை கேட்கின்றனர். அவர் ஆற்றக் கூடிய சொற்பொழிவு மிகவும் எளிமையானதாகவும், எங்களது மக்களிலிருந்து தனித்தும் இருந்தது.

அவர் கண்விழித்தபோது அவருக்கு எதுவும் புரியவில்லை. பிறகு அதை அவர் மறந்தும் விட்டார். சில நாட்களுக்குப் பிறகு ஏறக்குறைய அதேபோன்ற கனவு மீண்டும் வந்தது.அதன் மூலம் அவரது உள்ளத்தில் அந்த முகம் பதிந்து விட்டது. பிறகு மூன்றாவது முறை அஹ்ருக்கு கனவு வந்தது. ஆனால், அவரால் அதை கண்டறிய முடியவில்லை. ஒருநாள் யதார்த்தமாக கிராமத்திற்கு அருகில் அமைந்திருந்த ஃபாரீன் என்ற ஊருக்கு நமது பள்ளிவாசலுக்கு அவர் சென்றார்.அன்றைய நாள் ஜுமுஆ நாளாக இருந்தது. மக்கள் எம்.டி. ஏ வில் குத்பா கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் கூறுகின்றார்: என்னை பார்த்தவுடன் குத்பா கொடுக்கக் கூடிய இந்த நபர் யார்? என்று முஅல்லிம் ஸாஹிபிடம் அவர் கேட்டார். அதற்கு, இவர்கள் எங்களது கலீஃபா ஆவார்கள் என்று அவர் கூறியுள்ளார். பிறகு அவர் அமைதியாக உட்கார்ந்து குத்பா கேட்டார். பிறகு நமது உறுப்பினர்களுடன் சேர்ந்து தொழுதார். தொழுகை முடிந்தவுடன் உடனடியாக எழுந்து, சகோதரர்கள் முன்பு நான் இன்று இஸ்லாத்தை ஏற்கின்றேன் என்று அவர் கூறினார். மேலும் எனக்கு இறைவன் மூன்று முறை கனவில் இந்த நபரைக்காட்டினான். அது எனது ஆன்மாவில் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. நான் நீண்ட காலமாக இவரை தேடிக் கொண்டிருந்தேன். ஆனால், இன்று யதார்த்தமாக உங்களது பள்ளிவாசலுக்கு வந்தேன். உங்கள் கலீஃபாவை பார்த்தேன். இது நான் கண்ட அதே முகம் தான். இதேபோன்ற காட்சியைதான் நான் கனவில் கண்டேன். அதில் மக்கள் அமைதியாக உட்கார்ந்து குத்பா கேட்டுக் கொண்டிருந்தனர். நான் தற்போது இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் இணைகின்றேன் என்றும் அவர் கூறினார்.

விண்ணில் உண்மையின் பால் அழைப்பில் ஒரு வேகம் உருவாகியுள்ளது. நல்லடியார்கள் மீது வானவர்கள் இறங்குகின்றார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மீதான பகைமை எங்கெங்கெல்லாம் சென்றுள்ளது. அத்துடன் அல்லாஹ் அன்னாருக்கு ஆதரவான காட்சியையும் எவ்வாறு காட்டுகின்றான். இது ஏதோ ஒரு மனிதனின் வேலையாக இருந்திருக்கும் என்றால், மனிதனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தாக இது இருக்குமென்றால், ஜமாஅத் உருவாக்கப்பட்டதிலிருந்து, ஆரம்பத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எந்த அளவு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போதும் எதிர்ப்பு ஏற்படுகிறது. அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உலகின் பல்வேறு பகுதிகளில் அனுதினமும் ஏற்படுகிறது. அப்படியென்றால் இந்த எதிர்ப்பினால் இந்த இயக்கம் தற்போது அழிந்து போயிருக்க வேண்டும். இதன் பொய் வெளிப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இது அழிந்து போகுவதற்கான கேள்வியே இல்லை. இங்கோ அல்லாஹ் முன்னேற்றத்தை காட்டிக் கொண்டிருக்கின்றான்.

ஹஸ்ரத்மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தனது ஒரு மஜ்லிஸில் கூறுகின்றார்கள்:

பகைவர்கள் எல்லா விதமான பகைமையும் பாராட்டினர். ஆனால் இறைவன் (நன்க்கு) முன்னேற்றத்தை வழங்கினான். உலகம் இயன்ற அளவு முயற்சி செய்து பார்த்தும் உண்மை பரவுகின்றது என்றால் இது சத்தியத்திற்கான அடையாளமாகும். தற்போது நம்மை எதிர்ப்பதில் இவர்கள் என்ன குறை வைத்துள்ளனர்? ஆயினும், கடைசியில் அவர்களுக்குத் தான் தோல்வி ஏற்படுகின்றது. இது இறை அடையாளமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 186)

ஆக, நான் கூறியது போன்று பகைவர்கள் முயற்சி செய்து கொண்டே இருந்தனர். மேலும் செய்து கொண்டே இருக்கின்றனர். இன்றும் எதிர்ப்பின் உச்சம் இருந்தும், பெரும் பெரும் ஆலிம்கள் நமக்கு எதிரில் எல்லாவிதமான திட்டங்கள் தீட்டியும், அரசாங்கங்கள் அஹ்மதிய்யத்தின் எதிர்ப்பில் கடுமையான நடவடிக்கை எடுத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கூற்றுதான் நிறைவேறுகின்றது. பகைவர்கள் தோல்வியை தழுவுகின்றார்கள். இது இறைவனின் அடையாளம் ஆகும். (குத்பா பேருரை. அக்டோபர் 16. 2013)

எந்த அளவு உனது அருளும், கருணையும் என் மீது இறங்கியுள்ளது என்றால் அதை மறுமை வரை எண்ணுவது கடினமாகும்.

தமிழாக்கம் மவ்லவி ஷியாவுல் ஹக்

* * * * *

## விகிதாச்சாரப்படி சந்தா வழங்குதல் மற்றும் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அருட்களும்

(மவ்லானா ஸய்யிது கலீமுத்தீன் அஹ்மத் ஸாஹிப், தலைமையக காஸி, தாருல் கஸா காதியான்)

காதியான் ஜல்ஸா -2023 சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ﴿۲۶۲﴾

கண்ணியத்திற்குரிய மாநாட்டின் தலைவர் அவர்களே மற்றும் அவையோர்களே! எனது சொற்பொழிவின் தலைப்பு விகிதாச்சாரப்படி சந்தா வழங்குதல் மற்றும் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அருட்களும் என்பதாகும். நான் தற்போது ஓதிய திருக்குர்ஆன் வசனத்தின் பொருள் இவ்வாறாகும்:

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு ஓர் தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ் தான் நாடியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (திருக்குர்ஆன் 2: 262)

இந்த வசனத்தில் மிகச் சிறந்த உதாரணத்தின் மூலமாக பொருள் தியாகத்தின் அருட்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நீங்கள் அல்லாஹ்வின் வழியில் உங்களது செல்வங்களை செலவு செய்தீர்கள் என்றால் எவ்வாறு அல்லாஹ் ஒரு தானியத்திலிருந்து 700 தானியங்களை முளைப்பிக்கின்றானோ அவ்வாறே உங்களது செல்வங்களையும் அதிகரிப்பான். மாறாக அதை விடவும் அதிக முன்னேற்றத்தை வழங்குவான். அதாவது அதிகரிப்பில் எவ்வித வரம்பும் இல்லை. அவ்வாறே அதன் வகையிலும் எவ்வித எல்லையும் இல்லை. இவ்வாறு பல்வேறு விதத்தில் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களுக்கு பொருள் தியாகத்தின் பக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. உண்மையில் பொருள் தியாகம் இறை வணக்கத்தின் ஒரு பகுதியாகும். அதனுடைய தொடர்பு அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் மற்றும் அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் இரண்டிலும் உள்ளது. செல்வத்தால் மார்க்கம் மற்றும் மதத்தின் முக்கியப் பகுதியான வெளியீட்டுப் பணிகள், நம்பிக்கையாளர்களுடைய கல்வி மற்றும் சீர்திருத்தப் பணிகள் சமுதாயம், இனம் மற்றும் தேசத் தொண்டுகள், ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுடைய தேவைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

கண்ணியத்திற்குரியவர்களே! இந்த காலகட்டம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டமாகும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இதன் அடிக்கல்லை நாட்டியுள்ளான். மேலும் அன்னாரிடம் இந்த ஜமாஅத்தின் முன்னேற்றங்களை பற்றி பெரும், பெரும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளான். அவன் நம்மை ஆகரீன்களின் ஜமாஅத்தில் இணைத்துள்ளது அவனது அருளாகும். நாமும் நமது பொறுப்புகளை புரிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாருங்கள்! நபிமார்களின் காலகட்டத்தை பெற்ற மக்கள் மார்க்க வெளியீட்டுப் பணிகளுக்காக எவ்வாறான உயிர் தியாகங்களையெல்லாம் செய்திருக்கின்றார்கள். ஒரு செல்வந்தர் மார்க்கத்தின் வழியில் தனக்கு பிடித்தமான செல்வத்தை வழங்கினார் என்றால் ஒரு யாசகர் தனக்கு பிடித்தமான உணவு துண்டுகள் நிரம்பிய பாத்திரத்தை முன் வைத்து விட்டார். அவ்வாறே செய்யப்பட்டது. இறைவனது வெற்றி வரும் வரையில் முஸ்லிமாக இருப்பது என்பது எளிதானதாக இருக்கவில்லை.

நம்பிக்கையாளர் என்ற பட்டத்தை அடைவது எளிதாக இருக்கவில்லை. எனவே மக்களே! உங்களிடத்தில் நம்பிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நேர்வழியின் ஆன்மா இருக்கின்றது என்றால் எனது இந்த அழைப்பை மேலோட்டமாக பார்க்காதீர்கள். நன்மையைப் பெற கவலையடையுங்கள். நீங்கள் இந்த தூதுச் செய்தியை கேட்டு எவ்வாறு பதிலளிக்கின்றீர்கள் என்பதை இறைவன் விண்ணிலிருந்து பார்க்கின்றான். (ஃபத்ஹே இஸ்லாம், பக்கம் 52)

மேலும் கூறுகின்றார்கள்: நான் உங்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே இறைவன் உங்களுடைய செயல்களை பார்க்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் நீங்கள் உங்களது செல்வங்கள் மற்றும் உயிர்களைக் கொண்டு அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக இறைவன் உங்களை அழைக்கின்றான். ஆகவே, நீங்கள் கட்டுப்படுவீர்களா? மேலும் உங்களில் இறைவனுக்கு யார் உதவி செய்கின்றார்களோ அவருக்கு இறைவன் உதவி செய்வான். மேலும் அவர் இறைவனுக்கு வழங்கியதை விட அதிகமாக இறைவன் அவருக்கு திருப்பிக் கொடுப்பான். மேலும் அவன் நன்மை செய்பவர்கள் அனைவரையும் விட சிறந்தவன் ஆவான். (மஜ்மூஅ இஷ்திஹாராத் - பாகம் 3,பக்கம் 153)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்கு பிறகு அல்லாஹ் அன்னாரது மிஷனை தொடரச் செய்வதற்காக மற்றும் முழுமையடையச் செய்வதற்காக தன்னுடைய வாக்குறுதிக்கு ஏற்ப அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் எனும் அருளுக்குரிய அமைப்பை நிறுவியுள்ளான் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வழிகாட்டல்களின் ஒளியில் அன்னாரது கலீஃபாக்கள் பொருள் தியாகம் பற்றி நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். இஸ்லாத்தின் உலகளாவிய ஆன்மிக வெற்றியின் நாள் மிக அருகில் வருவதற்கு, மேலும் நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அவனது ஜமாஅத்தை சார்ந்தவர்களாக எழுதப்படுவதற்காக நாம் ஆற்றவேண்டிய கடமை என்னவெனில் நாம் மஸீஹின் கலீஃபாவின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்களின் பிரதிநிதியும் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹுமாகிய அல் முஸ்லிஹுல் மவ்வூத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் வெளியீட்டுப் பணிகள், ஜமாஅத்தின் நிர்வாகம், கல்வி மற்றும் தர்பிய்யத் பணிகளை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீது பொருளாதார ரீதியிலான சில உதவிகளை கடமையாக ஆக்கினார்கள். அவற்றுள் சில கட்டாயச் சந்தாக்கள் ஆகும். மேலும் சில விருப்பச் சந்தாக்களும் இருக்கின்றன. கட்டாயச் சந்தாக்களில் குறிப்பாக ஸகாத், வஸிய்யத் சந்தா, சந்தா ஆம், ஜல்ஸா ஸாலான சந்தா ஆகியவை அடங்கும். சந்தா ஆம் என்பது சம்பாதிக்கின்ற ஒவ்வொரு ஆண் அல்லது பெண் மீதும் அதாவது அவர் வஸிய்யத் செய்திருக்கவில்லை என்றால் தனது மாத வருமானத்தில் பதினாறில் ஒரு பங்கை இஸ்லாத்தின் வெளியீட்டுப் பணிகளுக்காக சந்தாவாக கொடுக்க வேண்டும். அதேபோன்று ஜல்ஸா ஸாலானா சந்தா என்பது ஒருவர் வஸிய்யத் செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும் சரியே ; அவர் தனது ஆண்டு வருமானத்தின் 120-ல் ஒரு பங்கை சந்தாவாக கொடுப்பதாகும். ஆக, ஒவ்வோர் அஹ்மதியும் அவர் ஆணாக இருக்கட்டும்; அல்லது பெண்ணாக இருக்கட்டும்; அவர் மேற்கூறப்பட்ட விகிதாச்சாரப்படி சந்தா ஆம் மற்றும் ஜல்ஸா ஸாலானா சந்தா வழங்குபவராக இருக்கின்றார் என்றால் அவர் விகிதாச்சாரப்படி சந்தா கொடுப்பவர் என்றழைக்கப்படுவார். எனவே நாம் அல்லாஹ்வின் வழியில் எந்த அளவுக்கு பொருள் தியாகம் செய்கின்றோம்; நமது தியாகத்தின் தரம் என்ன? நமது சந்தா விகிதாச்சாரப்படி இருக்கின்றதா? மேலும் முறையாக செலுத்தி வருகின்றோமா? என்பதையும் கண்காணிக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறில்லை என்றால் நாம் நம் மீது அநீதியிழைத்துக் கொள்கிறோம் என்று பொருள். நமது இம்மையையும், மறுமையையும் நாம் சீர்கெடுக்கின்றோம். நாம் பொருள் தியாகத்தின் உரிமையை செலுத்தவில்லை என்றால் மிகப் பெரிய நன்மையில் இருந்தும் இறைவனின் அருட்களிலிருந்தும் விலக்கப்பட்டவர்களாக நாம் இருக்கின்றோம். மேலும் அதன் அபாயகரமான விளைவுகளை எண்ணிப் பார்க்கும்போது உள்ளம் நடுங்குகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒருவர் இறைவனது மார்க்கத்தின் தொண்டிற்காக

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 14- 21MARCH 2024 Issue No. 11 & 12

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சிறிது வழங்குகிறாரோ அவர் இறைவனிடம் வியாபாரத்தை மேற்கொள்கிறார். மேலும் அந்த உடன்படிக்கையை முழுமைப்படுத்தாத பட்சத்தில் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டியது இருக்கின்றது. மேலும் எந்த அளவிற்கு குறைவு இருக்கின்றதோ அது அவருடைய பெயரில் பாக்கியாக உள்ளது. ஒருவேளை அவர் இவ்வுலகில் அதனை செலுத்தவில்லை என்றால் இறைவன் முன் கொண்டு வரப்படும்போது இறைவன் நரகத்தில் பாக்கியை செலுத்தி விட்டு வா என்று கூறுவான். (1933-ம் ஆண்டு மஜ்லிஸே முஷாவரத்தில் நிகழ்த்திய உரை)

எனவே நாம் கட்டாயச் சந்தாக்களின் விவகாரத்தில் இரண்டு விஷயங்களை குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று நாம் நமது சந்தாக்களின் பட்ஜெட்டை வருமானத்திற்கு ஏற்ப விகிதாச்சாரத்தின்படி எழுதச் செய்வதாகும். மேலும் இரண்டாவது, அதனை செலுத்துவதையும் முறையாக பேணி வரவேண்டும். இதுவே ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் கடமையாகும். அல்லாஹ் அதற்கான நற்பேறை நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்!

இனி நான் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் அருட்கள் என்ற எனது சொற்பொழிவின் இரண்டாவது பகுதியின் பக்கம் வருகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது மரணத்திற்கு முன்பு தமது ஜமாஅத்திற்கு இரண்டு விஷயங்களை அறிவுறுத்தினார்கள். முதலாவது, இரண்டாம் வல்லமை அதாவது கிலாஃபத்தின் வெளிப்பாடு. இரண்டாவது வஸிய்யத் எனும் இறை அமைப்பில் இணைதல். ஹுஸூர் (அலை) அவர்கள் தமது அல்வஸிய்யத் எனும் நூலில் இது தொடர்பாக விரிவாக குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் (அலை) தெளிவாக கூறினார்கள்: அல்லாஹ் இஸ்லாத்தின் வெற்றிக்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றான். அதற்காக அவன் எனது மரணத்திற்குப் பிறகு கிலாஃபத் அமைப்பை நிலைநாட்டுவான். அதனுடன் நீங்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இரண்டாவது, இஸ்லாத்தின் வெளியீட்டிற்காக உங்களது செல்வங்கள் மற்றும் சொத்துகளை நீங்கள் வஸிய்யத் செய்யுங்கள் என்பதாகும். தற்போது வஸிய்யத் அமைப்பு தொடர்பாக இந்த எளியவன் சில விண்ணப்பங்களை எடுத்துரைப்போன். வபில்லாஹி தவ்ஃபீக்!

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் அக்தஸ் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவம், அருட்கள் மற்றும் அதில் இணைவது தொடர்பாக ஜமாஅத் மக்களுக்கு மீண்டும், மீண்டும் கவனமூட்டி வருகின்றார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இது எப்படிப்பட்ட அமைப்பு என்றால், இந்த காலகட்டத்தில் இறைவனுடைய நெருக்கத்தை பெறுவதை உறுதிப்படுத்தும் அமைப்பு ஆகும். இந்த மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்யும் ஜமாஅத்தின் அமைப்பு ஆகும். மேலும் இது உலகில் கவலையில் வாழ்ந்து வரும் மனித குலத்திற்கு தொண்டாற்றும் அமைப்பு ஆகும். எனவே ஒவ்வோர் அஹ்தியும் சிந்தியுங்கள்! மேலும் எந்தவொரு சிந்தனையுடனும் முயற்சியுடனும் இந்த அமைப்பில் இணைய வேண்டும் என்று இந்த விஷயங்களை கேட்ட பிறகு சீர்தூக்கிப் பாருங்கள்! சில மக்கள் எங்களுடைய நன்மையின் தரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய அந்த தரத்தின் நிபந்தனைகளை முழுமைப்படுத்தவில்லை என்று கூறுகின்றனர். அந்த மக்கள் கேட்டுக் கொள்ளுங்கள்; இந்த அமைப்பு எப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான அமைப்பு என்றால் ஒருவேளை நல்ல எண்ணத்துடன் இந்த அமைப்பில் இணைந்தால் மேலும் இணைந்த பிறகு அன்னார் கூறியது போன்று தமக்குள் அதற்கான முயற்சியையும் மேற்கொண்டால் இந்த அமைப்பின் அருளால் பல ஆண்டுகள் தொலைவில் இருந்த ஆன்மிக மாற்றம் சில நாட்களிலேயே மேலும் நாட்களின் சில மணிநேரங்களிலேயே அடைந்து விடலாம். எனவே தனது சீர்திருத்தத்திற்காகவும் இந்த அமைப்பில் அஹ்மதிகள் இணைய வேண்டும். மேலும் இந்த அமைப்பில் இணைபவர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்களில் அவர்கள் பங்கு பெற வேண்டும். (2004-ம் ஆண்டின் யூ.கே ஜல்ஸா ஸாலான உரை)

பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 21 ஜூலை 2005-ம் ஆண்டு உலக அஹ்மதிகளின் பெயரில் அனுப்பிய தூதுச் செய்தியில் வஸிய்யத் எனும் புனித அமைப்பில் இணைவதை வலியுறுத்தியவாறு கூறினார்கள்:

உலகம் முழுவதிலும் உள்ள அஹ்மதிகளுக்கு எனது தூதுச் செய்தி என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வழிகாட்டல்களின் ஒளியில் அன்னாரது விருப்பங்களை பின்பற்றியவாறு முன்னேறுங்கள். மேலும், பொருள் தியாகத்தின் இவ்வமைப்பில் இணைந்து விடுங்கள். தங்களது சீர்திருத்தத்திற்காக மேலும் தங்களது முடிவு நல்லதாக அமைவதற்காக அல்லாஹ்வின் திருப்திக்காக முன்னால் அடி எடுத்து வையுங்கள். மேலும் அவனது சொர்க்கத்திற்கு வாரிசாகி விடுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த அமைப்பில் இணைந்து சொர்க்கவாசிகளாக ஆகிவிட்ட அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் காண்பிக்கப்பட்டனர். இவர்கள் சொர்க்க வாசிகள் ஆவர் என்று இறைவன் அன்னாரிடம் கூறினான். எனவே நான் கூறியது போன்று இந்த அமைப்பில் முழு ஆயத்தத்துடன் இணையுங்கள். இதில் சுயமே இணைந்துள்ளவர்கள் தங்களது மனைவி, மக்களையும் மற்ற நெருக்கமான மக்களையும் இணைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் இறைவனது மஸீஹின் குரலுக்கு லெப்பைக் என்று கூறியவாறு தியாகங்களின் மேலான தரத்தை நிலைநாட்டுங்கள். (அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஜூலை 29, 2005)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் 2004-ம் ஆண்டு யூ.கே ஜல்ஸாவில் இவ்வாறு கூறியிருந்தார்கள்: எனது விருப்பம் என்னவென்றால், 2008-ம் ஆண்டில் கிலாஃபத் இன்ஷாஅல்லாஹ் நூற்றாண்டை நிறைவு செய்யும்போது உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு ஜமாஅத்திலும் இருக்கின்ற சம்பாதிக்கும் நபர்கள் சந்தா வழங்குகின்ற நபர்களில் குறைந்தபட்சம் 50 சதவிகிதம் மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மகத்துவம் வாய்ந்த அமைப்பில் இணைந்திருக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய இந்த விருப்பத்தை ஏற்று உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் லெப்பைக் என்று கூறியுள்ளது. மேலும் பல நாடுகள் பல ஜமாஅத்துகள் இந்த இலக்கை அடைந்து விட்டன. சிலர் அதற்கும் மேலாக முன்னேறி சென்று விட்டனர். தற்போது அஹ்மதிய்யா கிலாஃபத்தில் ஜமாஅத் இரண்டாம் நூற்றாண்டின் 16-வது ஆண்டை கடந்து கொண்டிருக்கின்றது. நாம் தனித்தனியாகவும், ஜமாஅத் அளவிலும் இந்த இலக்கை அடைந்து விட்டோமா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. ஒருவேளை இல்லை என்றால்,

தொடர்ச்சி 19-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad